கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



சச்சினைப்போல்...

KALKI • 10.01.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



ருப்பட்டூர்
ாயகன்!



ஆக்ஷன்
ம்பர்!

ணப்பாறை
ாடுகட்டி!

ரம்மாண்ட
.ஹெச்.ஈ.எஸ்.!

ருச்சி மாவட்ட
ஸ்பெஷல்–2




கம்பிகளின்
Xpert
உப்புத் தண்ணீரிலும்
துருப்பிடிக்காத உலகத்தரம் வாய்ந்த
AMMAN -TRY CRS TMT
கம்பிகளை பயன்படுத்திடுங்கள்!
உங்கள் இல்லங்களின்
கட்டுமானங்களை வலிமையாக்கிடுங்கள்.!
IS : 1786
ISI தரமுடையது | Fe-500 கிரேடு | நியாயமான விலை
வெற்றிய தொழில்நுட்ப ஆற்றலுடன்
அசைக்க முடியாத வலிமைக்கு
AMMAN- TRY
CRS TMT கம்பிகள்
www.ammantry.com e-mail: sasai@ammantry.com
ஸ்ரீ அம்மன் ஸ்டீல் & அலாய்டு இண்டஸ்ட்ரீஸ் (பி) லிட்.,
ISI தரமுடைய TMT கம்பி தயாரிப்பாளர்கள்
46-C, உஸ்மான்அலி தெரு, TVS டோல்கேட், திருச்சிராப்பள்ளி-12.
அலுவலகம்: 2460742. பேக்ஸ்: 0431 - 2411318.
An ISI Product From an ISO 9001 : 2000 Company



கல்கி
அடுத்த இதழ்...
பொங்கல் விருந்தாய்
சினிமா ஸ்பெஷல்!
ஜி.எஸ்.எஸ்.
எழுதும்
வாமன தேசங்கள்!
அறியாத நாடுகள்...
ஆச்சர்யத் தகவல்கள்..!
ஏற்றம்...
மனநல மருத்துவர்
ஆனந்தன்
எழுதும்
'மாண்புமிகு' மனம்
சகலத்தையும் அலசும் சைக்காலஜி தொடர்
மேக்கப் மேன் to மேக்னட் ஹீரோ
360 டிகிரி சினிமா அலசல்!
★ 'நச்' தலையங்கம்
★ ஆத்ம திருப்திக்கு ஆன்மிகம்
★ லேட்டஸ்ட் பாலிடிக்ஸ்!
★ ஸ்மார்ட் சிறுகதைகள்!
★ காலேஜ் கலாட்டா!
★ ஃபேஷன் டிப்ஸ்!
வாராவாரம் ஆரவாரம்... பக்கத்துக்குப் பக்கம் பிரமாதம்!

வேளாங்கண்ணி என்றவுடன், நாகப்பட்டினத்தை அடுத்துள்ள வேளாங்கண்ணிதான் அனைவருக்கும் நினைவுக்கு வரும். ஆனால், அதே போன்று சிறப்பிக்கப்படும் திருத்தலம் ஒன்று திருச்சிக்கு அருகில் இருக்கிறது. திருச்சியிலிருந்து அரியலூர் செல்லும் வழியில் நாற்பது கி.மீ. தொலைவில் உள்ளது வரகூர்ப்பேட்டை. இங்கே, அமைந்துள்ளது அருள்மிகு ஆரோக்கிய அன்னை தேவாலயம். ''வீரமாமுனிவரால், வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது இந்த அன்னையின் திருவுருவம். பதினேழாம் நூற்றாண்டில், இந்தப் பகுதியை நிர்வகித்து வந்த 'நவாப்'கள், இந்த ஆலயத்துக்கு அநேக மானியங்கள் அளித்திருக்கிறார்கள். இங்குள்ள மணி, பிரான்ஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது. பக்தர்களின் வசதியை முன்னிட்டு, விரிவு பெற்றுள்ள இந்த தேவாலயத்தில், ஆரோக்கிய அன்னையை தரிசியுங்கள். உங்கள் வாழ்விலும் வெளிச்சம் வரும்'' 'என்கிறார் பங்குத் தந்தை ஜோசப்.


• ஜோசப்



அப்படியா... அவர்

மலைக்கோட்டையின் உச்சிப்பிள்ளையார் வெகுபிரசித்தம். ஆனால், மலைக்கோட்டையைப் பிரதட்சணமாகச் சுற்றி வந்தால் உச்சிப் பிள்ளையாரையும் சேர்த்து பன்னிரண்டு பிள்ளையாரைத் தரிசிக்கலாம் என்பது திருச்சிவாசிகளுக்கே புதிய செய்தி. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் ஏழாவதாய் இருக்கும் ஏழை பிள்ளையார்தான். வடக்கு ஆண்டார் வீதியில் இருக்கும் இந்தப் பிள்ளையார் உச்சிப் பிளையாரை நோக்கி வடக்கு முகமாக வீற்றிருக்கிறார். மலையேறி உச்சிப்பிள்ளையாரை தரிசிக்க முடியாதவர்கள் ஏழை பிள்ளையாரிடம் வேண்டிக்கொண்டால் அது உச்சிப்பிள்ளையாரைத் தரிசித்ததற்குச் சமமாம். மேலும், முழுமையின் அடையாளம் ஏழு என்பதால் ஏழாவதாக இருக்கும் ஏழைபிள்ளையார் வெகு விசேஷமானவர்'' என்கிறார் இங்கிருக்கும் ஸ்ரீதர் குருக்கள்.







* சர்.சி.வி.ராமன்

சர்.சி.வி.ராமன் - இந்திய விஞ்ஞானத்தின் மீது விழுந்த முதல் நோபல் வெளிச்சம். இவர் தமிழ்நாட்டுக்காரர்.

இங்கேயா பிறந்தார்!?

அதுவும் திருச்சியின் திருவானைக்காவலில் பிறந்து படித்து வளர்ந்தவர். ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி ஆலயத்தின் விபூதிபிராகாரத்துக்கு அருகே இருக்கிறது அவர் தவழ்ந்த வீடு; உண்ட மடப்பள்ளி. ஆனால், அவர் இருந்துபோனதற்கான எந்த அடையாளமும் இப்போது அங்கில்லை. அவர் பிறந்த வீட்டில் தற்போது குடியிருப்போரிடம், 'இந்த வீட்டில்தானே சர்.சி.வி.ராமன் பிறந்தார்' என்று கேட்டால், 'அப்படியா... இங்கேயா அவர் பிறந்தார். ஆச்சர்யமா இருக்கு ஸார்...' என்று நம்மை எதிர்க்கேள்வி கேட்டு ஆச்சர்யப்படுத்தினர். நமக்கு வேதனையாக இருந்தது. சாதனையாளர்கள் சம்பந்தப்பட்ட எந்த ஒன்றின் மீதும் நாம் அக்கறை காட்டுவதில்லை என்பதற்கான அடையாளம்தான் சர்.சி.வி.ராமன் வீடு. எதிர்கால சந்ததிக்கு உந்துசக்தியாக இருக்கவேண்டிய ஓர் இடம், விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் இருப்பதற்கு யார் காரணம்...? அல்லது எது காரணம்...?

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்: **லக்ஷ்மி நடராஜன்**

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் : **கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா**

வடிவமைப்பு : **எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்**

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

வேட்டைக்காரன்



✿ போலீஸ் ஆகும் ஆசையோடு சென்னைக்கு வரும் ஒருவனை போலீஸ் தேடும் கதை.

✿ ஏன்... எதற்கு... எப்படி... என்பதைச் சொல்ல பண்டல் பண்டலாகக் காதில் பூ சுற்றுகிறார் இயக்குநர் பாபுசிவன்.

✿ 'தறுதலை' பிள்ளையான விஜய், சமூக சேவை செய்யும் அப்பா, பாட்டியை கரெக்ட் பண்ணி பேத்தியை மீட் பண்ணுவதென... திரைக்கதையில் வௌவால் வாசனை.

✿ "கொஞ்சம் கஷ்டமாதான் இருக்கும். இருந்தாலும் சொல்லிடுங்க" என காதலை எதிர்பார்த்து விஜய் வழிவதும், "என் ஃப்ரெண்ட் வண்டி காணாம போச்சு கண்டுபிடிச்சுக் கொடுங்க" என அனுஷ்கா ரிவிட் அடிப்பதும் மட்டும் ரகளை ரவுண்ட் அப்.

✿ விஜய்யின் பாலிடிக்ஸ் டயலாக்கால் அடிக்கடி நம் காது பஞ்சர் ஆகிறது.

✿ அம்மணி அனுஷ்கா முகத்தில் அடடா... ஏன் அத்தனை முத்தல். உடைகளில் தாராளம்... ஏராளம். கொஞ்சம் கேவலமும் கூட...

✿ சரி... விஜய் வில்லன்களைப் பழிவாங்கப் புறப்பட்டு விட்டார் என்று எதிர்பார்த்தால், சத்யன் குரூப்பை வர வெச்சு அதற்கு ஆப்பு அடித்திருக்கிறார் இயக்குநர்.

✿ டிடெக்டிவ் ஏஜென்சி போர்ட் வெச்சுக்கிட்டு, பெரிய புள்ளிகளோட சின்ன வீடு, சொத்து மதிப்பு என சகலத்தையும் ஒப்பித்து, பார்வையாளர்களுக்கு வேட்டு வைக்கிறார் விஜய்.

✿ பால்கனியில் உட்காருவதும், படிகளில் நடப்பதும்தான் இப்போ நடிப்புன்னு ஆகிப் போச்சு...

✿ கரிகாலன் காலப் போல பாடல் இதமோ இதம். கபிலனுக்கு வாழ்த்துகள்.

✿ விஜய் ஆன்டனியின் இசைக்குக் கைகுலுக்கல்.

✿ ஒரு பக்கம் புகுந்து மறுபக்கம் வெளியே வந்துவிடலாம் போலத் தோணும் திரைக்கதை ஓட்டையில் மொத்தப் படமும் தொலைந்து போகிறது.

வேட்டைக்காரன் – வெத்து வேட்டு

– மகிமைராஜன்



வாழ்க மணமக்கள்



மணமகன்: **சிரஞ்சீவி சந்திரசேகரன்** (கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இளைய சகோதரர் புத்தமங்கலம் ஜெகதீச அய்யர் அவர்களின் பௌத்திரன். புது டில்லி வாழ் ஸ்ரீ பஞ்சாமி ஸ்ரீமதி கௌரி பஞ்சாமி தம்பதியரின் கனிஷ்ட குமாரன்)

மணமகள் : **சௌபாக்கியவதி மதுமிதா** (கோவை ஸ்ரீ மோகன் ஸ்ரீமதி பானுமதி மோகன் தம்பதியரின் புதல்வி)

சிரஞ்சீவி சந்திரசேகரன், சௌபாக்கியவதி மதுமிதா இவர்களின் திருமணம் 13.12.2009 அன்று சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. காலையில் நடந்த திருமணத்தின் போதும் மாலையில் ராம்ஜியின் இசை மழலையுடன் கூடிய வரவேற்பின் போதும் ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் மற்றும் மாநில மத்திய அமைச்சர்களும் வந்திருந்து புதுமணத் தம்பதியை வாழ்த்தினர்.

● பி.என்.ஜெய்சங்கர், திருவாரூர்.

? காஷ்மீர் மாநிலத்திலிருந்து முப்பதாயிரம் ராணுவ வீரர்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. ஆண்டனி கூறியுள்ளது பற்றி...?

! காதும் காதும் வைச்ச மாதிரி செஞ்சுட்டு, உளவுத் துறையின் கண்காணிப்பை இன்னும் தீவிரப்படுத்தினா புத்திசாலித்தனம். இப்படி தம்பட்டம் அடிக்கிறது அபாயம்!

● பி.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி. ❑

? ''நடிக்க வாய்ப்புத் தேடி வந்த என்னைத் தீவிரவாதியாக ஜோடித்து விட்டனர்'' என்று கசாப் பல்டி அடித்திருக்கிறானே?

! முழுப் பூசணிக்காயைக் கூட சோற்றில் மறைத்து விடலாம்; யானையைப் பானைக்குள் தள்ளி ஒளிக்க முடியுமா?! நீதிபதிகள் கதைகள் கேட்கலாம்; நம்பி விடலாமா என்ன?

● கச்சனம் எஸ்.ஆர். கிருஷ்ணன், திருச்சி ★

? பணத்துக்காகத் தவறான விளம்பரங்களைத் தரும் சில பத்திரிகைகள் பற்றி..?

! விளம்பரங்களை விளம்பர வடிவத்திலேயே தந்தால் பிரச்னையில்லை. கட்



தமிழில் 'பா' படம்?


✱ குத்தகைதாரர்!

டுரை, சிறுகதை, பேட்டி என்று செய்தி உருவில் விளம்பரம் செய்வதெனில், இறுதியில் 'advt' என்ற குறிப்பு தரப்பட வேண்டும். இதைச் செய்யாதபோது நுகர்வோர் ஒருவிதத்தில் ஏமாற்றப்படுகிறார்கள். சமீப காலத்தில் அரசியல்வாதிகள் தங்களை மக்கள் மதிப்பில் உயர்த்திக் கொள்ள, விளம்பரத்தைச் செய்தி உருவில் பக்கம் பக்கமாகத் தருகிறார்கள். இது கண்டனத்துக்குரியது.

● **இரா.சக்கரபாணி, மதுரை.**

? மத்திய அமைச்சர்கள் அவர்களது குடும்பத்தினர் மற்றும் பயண உதவியாளருடன் இலவச விமானப் பயணம் செய்வதை அவர்களது நண்பர்கள், உறவினர்களுக்கும் விஸ்தரித்திருப்பது தேவையா? தவறாகப் பயன்படுத்த மாட்டார்களா?

! இந்தச் சலுகை பெரும் தவறு. வரி செலுத்தும் மக்கள் அனைவரையும் முட்டாள்களாகக் கருதும் நடவடிக்கை. சலுகை வழங்கப்பட்ட பிறகு அதைப் பயன்படுத்துவது தவறு என்று கூற முடியாது. பயன்படுத்தாமல் இருப்பதை நேர்மை எனலாம்.

● **ச.மீனாட்சிசுந்தரம், தாளை**

? "பயங்கரவாதம் ஒரு போதும் கோழைத்தனம் ஆகாது" என்று ஹெட்லி கூறுவது பற்றி?

! பயங்கரவாதிகளுக்கு நிகழ்த்தப்படும் மூளைச் சலவை பேக்கேஜின் முத்தாய்ப்பான சிந்தனை!

● **பி.செந்தில்வேலன், அறந்தாங்கி**

? நிதின் கட்காரி, பா.ஜ.க.வின் தொலைந்த செல்வாக்கை மீட்டு உயர்த்துவாரா?

! நேற்று அத்வானியின் கடும் தாக்குதலுக்கு உள்ளான சிபு சோரனுடன் இன்று கைகோத்து ஆட்சி அமைக்க உதவி இருப்பதைப் பார்க்க, கட்காரி சரியான காரியவாதியாகவே தெரிகிறார். பா.ஜ.க.வின் கௌரவம் சரிகிறது. செல்வாக்கு, அந்த மாநிலத் தேர்தல் முடிவிலேயே சரிந்து விட்டது!


✱ அபாய தம்பட்டம்!


✱ பெரிய பெரிய ஆசை!


✱ முன்னோடி முடிவு

● **பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? "இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கில்தான் உள்ளது. கோடி பயணிகளாவது வருகை தரவேண்டும்" என ப.சிதம்பரம் ஆசைப்பட்டுள்ளது பற்றி...?


! நல்ல விஷயத்துக்கு ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் இந்த இலக்கு நிறைவேற, 1. பாதுகாப்பு ஏற்பாடுகள், 2. அயல்நாட்டவரை அன்புடனும் நேர்மையுடனும் வரவேற்க அனைத்து

மக்களையும் பழக்குதல்; 3. சுற்றுப்புற சுகாதாரம்; 4. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மட்டுமின்றி, சராசரியானவர்களையும் ஈர்க்க மிதமான கட்டண, சுத்தமான ஹோட்டல்கள் - இவை அபிவிருத்தி அடைய வேண்டும். இல்லையேல் ஆசை நிராசை தான்.

● என்.பாலகிருஷ்ணன்,
மதுரை

? ''முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டப்பட்டால், ஆயிரம் தெலங்கானாக்கள் உருவாகும்'' என வைகோ எச்சரிக்கிறாரே?

! அவருடைய கட்சிக்குள்ளே உருவான தெலங்கானாவினால் சற்று குழப்பமடைந்து பொருந்தாத உவமையுடன் பொறுப்பின்றிப் பேசுகிறார்.


* பொருந்தாத உவமை

● ரேவதிப்ரியன்,
ஈரோடு.

? தமிழில் 'பா' படம் எடுத்தால் இன்றைய நடிகர்களில் யார் பொருந்துவார்கள்?

! தமிழில் ஏற்கெனவே பல 'பா'க்கள் இருக்கிறார்களே... வயசுக்கு மீறி இளமையான ரோலில் நடிக்கும் ஹீரோக்களைத்தான் சொல்கிறேன். சீரியஸாகச் சொல்வதானால், இது போன்ற ரோல்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கும் கமல்ஜி பொருந்துவார் என்பதைவிட மிஞ்சுவார்!

❑ ரூ.150 பரிசு பெறுபவர்: பி.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி.

★ ரூ. 75 பரிசு பெறுபவர்: கச்சனம் எஸ்.ஆர். கிருஷ்ணன், திருச்சி.


* காரியவாத கூட்டு!

* யானை போய்!


● மல்லிகா அன்பழகன், சென்னை-78.

? குஜராத் அரசு இந்தியாவிலேயே முதன் முறையாக வோட்டுப் போடுவதைக் கட்டாயமாக்கும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளதே?

! உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு மாநில அரசிடம் இருப்பதால், அதையொட்டி இந்தச் சட்டத்தை குஜராத் அரசால் நிறைவேற்ற முடிந்தது. ''யாருக்கும் வோட்டுப் போட விரும்பவில்லை'' என்று குறிப்பிடும் உரிமை இன்று வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதால் சட்டத்தில் குற்றம் கண்டு பிடிக்க முடியாது. ஆனால், அமலாக்கத்தில் அத்துமீறல் கூடாது. இந்தியாவில் கல்வி பெற்றோர் எண்ணிக்கை குறைவு.



பரபரப்பான விற்பனை!

கல்கி ராஜேந்திரன்

எழுதிய

அது ஒரு பொற்காலம்

விலை ரூ.100/-

(கல்கி வார இதழில் '70 முதல் 7 வரை' என்ற தலைப்பில் இடம்பெற்ற தொடர் கட்டுரைகளின் தொகுப்பு)

''இந்தக் கட்டுரைகளை நான் எழுதியதாகவே எனக்குத் தோன்றவில்லை. 'கல்கி'யும், ராஜாஜியும், ரசிகமணி டி.கே.சி.யும், சதாசிவமும், எம்.எஸ். அவர்களும் என்னைக் கருவியாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டதாகவே கருதுகிறேன்.''

- கல்கி ராஜேந்திரன், நூல் முன்னுரையில்

கல்கி ராஜேந்திரன் எழுதிய நாவல்கள் :

சாருலதா - ரூ.120; ஸைக்கோ ஸாரநாதன் - ரூ.130

ரவிகுலதிலகன் - ரூ.125; விண்ணும் மண்ணும் - ரூ.110

புத்தகங்களைப் பெற M.O., D.D. அல்லது At par cheque அனுப்புக.
தபால் செலவு இலவசம்.

வானதி பதிப்பகம்

23, தீனதயாளு தெரு, சென்னை - 600 017.
ஃபோன் : 24342810

ஜனவரி 10 வரை பத்து சதவிகிதம் தள்ளுபடி உண்டு!

சென்னை புத்தகக் கண்காட்சியில் எமது ஸ்டாலுக்கு விஜயம் செய்க

கந்தகோட்டை



★ காதலே பிடிக்காத ஹீரோவும்... காதல் மட்டுமே பிடிக்கும் ஹீரோயினும்... காதல் புள்ளியில் முட்டிக் கொண்டால் என்னவாகும்? காதலும் மோதலும்தானே நிகழும். அதுதான் கந்தகோட்டை படத்தின் கதை. ★ மிடில் கிளாஸ் பையனாக நகுலன் நன்றாக மெருகேறியிருக்கிறார். பாட்டும், ஃபைட்டும் நிரம்பவே அவருக்குக் கைகொடுத்திருக்கின்றன. யார் காதலைக் கெடுக்கலாம் என்று அவர் கங்கணம் கட்டிக் கொண்டு திரிகையில் ரசிக்க முடிகிறது. ★ ஹீரோ, ஹீரோயின் காதல் இல்லாத ஸீன்களிலெல்லாம் அது இல்லாத குறையைத் தீர்க்கிறது சந்தானத்தின் காமெடி. அதுவும், ''மச்சான் இதுதான் லவ் மேரேஜ் பார்த்துக்கோ'' என்று அவர் அடிக்கும் டைமிங் கமெண்ட்டில் தியேட்டர் கலகலக்கிறது. ★ எதற்கெடுத்தாலும் சிரிப்பும், வெட்கமும் கலந்து தரும் பூர்ணாவை இந்தப் படத்தில் ஏகத்துக்கு அழவிட்டிருக்கிறார்கள். அவரும் வஞ்சமில்லாமல் அழுது தீர்த்திருக்கிறார். ★ பூர்ணாவை எதுவும் செய்யாமல் அவரைச் சுற்றி இருப்பவர்களைத் துன்புறுத்தும் சம்பத்தின் வில்லத்தனத்தில் கமர்ஷியல்... கமர்ஷியல்.. ★ படம் முழுக்க காதல்... காதல்... என்று ஆளாளுக்குப் பேசுவதில் சற்று அலுப்பு ஏற்படுகிறது. ★ காதலிக்கும் பெண்ணைக் காதலனோடு சேர்த்து வைக்க, அவளை இழுத்துக் கொண்டு ஓடுவதும், பெண்ணின் அப்பாவோ, அண்ணனோ, காரில் துரத்த முடியாமல் துரத்துவதும் கோடம்பாக்க அல்வா. ★ காதுக்குள் மத்தளம் வாசிக்கும் தீனாவின் இசை, பின்னணியில் பம்முவது ஏன்...? ★ கிருஷ்ணசாமியின் ஒளிப்பதிவு ஓ.கே. ★ திரைக்கதையும், எடிட்டிங்கும் சறுக்குவதை இயக்குநர் கவனித்திருக்கலாம். **கந்தகோட்டை - கமர்ஷியல் சேட்டை.** **- கமலி**

கல்கி

வழங்கும்

திருச்சி மாவட்ட சிறப்புப் புதிர் போட்டி-2

எதையும் பெஸ்ட்டா செலக்ட் பண்ணும் திருச்சி மாவட்டவாசிகளே... வாசகர்களே இதோ... உங்களுக்கே உங்களுக்காக, கல்கி வழங்கும் சிறப்புப் புதிர் போட்டிகள். கேள்விகள் அனைத்தும் உங்கள் மாவட்டத்தைச் சுற்றியே பின்னப்பட்டிருக்கின்றன. அப்ப, பதிலும் அங்கேதானே இருக்கும். கீழே உள்ள ஆறு குறிப்புகளுக்குமான விடையை அதற்குரிய கட்டங்களில் (ஒரு கட்டத்துக்கு ஒரு எழுத்து என்கிற வகையில்) நிரப்பி, திருச்சி மாவட்டம் குறித்த ஸ்லோகன் ஒன்றையும் எழுதி அனுப்புங்கள்.

1

2

3

4

5

6

1. இடமிருந்து வலம்

இந்தத் தலைவரின் முயற்சியால் 'BHEL' திருச்சியில் துவங்கப்பட்டது.



திருச்சி மாவட்ட வாசகர் சந்திப்பு
26.01.2010
அஜந்தா ஹோட்டல்
(சென்ட்ரல் பஸ் ஸ்டாண்ட் எதிரில்)
திருச்சி.
நேரம்: மாலை 3.30 மணி
அனைவரும் வருக!

மேலிருந்து கீழ் - திருச்சியில் பாயும் நதி.

2. **இடமிருந்து வலம்** - தேசிய ...... ஆராய்ச்சி நிலையம் திருச்சியில் உள்ளது.

மேலிருந்து கீழ் - ரங்கராஜன் என்ற இயற்பெயர் கொண்ட இந்தப் பிரபல பாடலாசிரியரும் திருச்சிக் காரர்தான்.

3. **இடமிருந்து வலம்** - திருச்சியில் உள்ள பிரபல மகமாயி (மாரியம்மன்) ஊர்

மேலிருந்து கீழ் - இந்தித் திரையுலகில் கதாநாயகியாக கொடிகட்டிப் பறந்த ஸ்ரீரங்கத்துக்காரர்.

4. **இடமிருந்து வலம்** - ஒய்யாங்கொண்டான் இந்த மன்னனின் புனைபெயர்தான்.

மேலிருந்து கீழ் - கோபுரத்தின் மீதேறி 'ரகசியம்' அறிவித்த புரட்சியாளர்.

5. **இடமிருந்து வலம்** - கலைஞர் கைவண்ணத்தில் உருவான 'பொன்னர் சங்கர்' ஊர்.

மேலிருந்து கீழ் - விடுதலைப் போராட்ட வீரர் வ.வே.சு.ஐயர் ஊர்.

6. **இடமிருந்து வலம்** - பிரபல வயலின் வித்வானின் பெயருக்கு முன் ஒட்டிக் கொண்ட ஊர்.

மேலிருந்து கீழ் - மணப்பாறை இதற்குப் பிரபலம்.

விதிமுறைகள் :

* இந்தப் போட்டி திருச்சி மாவட்ட வாசகர்களுக்கு மட்டுமே * திருச்சி மாவட்ட புதிர்ப் போட்டி II என்று முத்திரை உள்ள கூப்பன் மட்டுமே பரிசீலிக்கப்படும் * சென்ற இதழில் திருச்சி மாவட்ட புதிர்ப் போட்டி I வெளியாகியுள்ளது. * இரண்டு கூப்பன்களையும் கத்தரித்துச் சேர்த்து அனுப்ப வேண்டும். * ஒருவரே, எத்தனை கூப்பன்கள் (திருச்சி மாவட்ட புதிர்ப் போட்டி I + II) வேண்டுமானாலும் அனுப்பலாம். * திருச்சியில் 26.01.10 அன்று நடைபெறும் வாசகர் சந்திப்பில் வாசகர் முன்னிலையிலே சரியான விடை எழுதிய 25 அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். திருச்சி மாவட்டம் குறித்து சிறந்த ஸ்லோகன் எழுதிய ஒரு வாசகருக்குச் சிறப்புப் பரிசும் உண்டு. ஸ்லோகனைப் பக்கம் 11ல் அதற்குரிய இடத்தில் மட்டுமே எழுதவும். * கடிதங்கள் வர கடைசித் தேதி : **15.01.10** * ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

அனுப்ப வேண்டிய முகவரி :

திருச்சி மாவட்ட புதிர்ப் போட்டி I, II, கல்கி
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

பெயர் : .... வயது : ....

விலாசம் : ....

....

தொலைபேசி எண் : .... ஈ-மெயில் : ....

SRIMATHI SUNDARAVALLI MEMORIAL RESIDENCY

"SUBHASHRAYA" - A HOME FOR ELITE SENIOR CITIZENS

CHENNAI - 600063

Heaven On Earth





RIGHT PLACE FOR ELDERS



Spiritualism



Peace



Honour



Comfort



Luxury



Health

With the Heart to Serve

We Welcome you

Moppedu Road, Alapakkam, New Perungalathur, Chennai-600063

Phone No : 044-2279 2002-04 Fax : 044-2279 2009

E-mail : ssmeto@dataone.in Website : www.ssmhome.in



கல்கி

2010 ஜனவரி 10
விரோதி மார்கழி 26
மலர் : 68
இதழ் : 24

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

நீரோ திவாரியின் ஜீரோ வாதம்!

“ஒரு பெண்ணிடம் ஒரு வார்த்தை பேசுவதேகூட (இன்றைய சூழலில்) அபாயகரமானது'' என்று என்.டி.திவாரி கூறியிருப்பது பெண்மைக்கு இழுக்கு செய்யும் வாக்கியம். யாரிடம் நாம் பேசினாலும் சரி, பேசப்படும் வார்த்தையின் தரத்தைப் பொறுத்தே விளைவுகள் அமையும்.

வருத்தம் தெரிவித்தபோதிலும், தாம் எந்தத் தவறும் இழைக்கவில்லை என்றும் தமக்கு எதிராக சாட்சியங்கள் ஜோடனை செய்யப்பட்டுள்ளன என்றும் திவாரி சொல்வது நம்புதற்குரியதாக இல்லை. அவர் பேசுவது உண்மை என்றே ஏற்றாலும், எண்பத்தைந்து வயது முதியவர் பேரில் மிகக் கேவலமான போலி சாட்சியங்களை ஜோடனை செய்ய ஒருவர் ஏன் முற்பட வேண்டும்? அவ்வாறு ஜோடனை செய்யும் அளவுக்கு, திவாரி அவரை ஏன், எப்படி, எதற்குக் கோபத்துக்குள்ளாக்கினார் என்ற கேள்விகள் எழுகின்றன.

மேலும், என்.டி.திவாரியின் பேரில் ஏற்கெனவே சில பல களங்கங்கள் விழுந்துள்ளன. அவரது பொது வாழ்க்கையும் தனி வாழ்க்கையும் அப்பழுக்கற்றவை அல்ல என்பதை அவை உணர்த்துகின்றன.

இத்தகைய ஒருவரை ஆளுநர் பதவியில் அமர்த்தியதுதான் மிகப் பெரிய தவறு! ரோம் பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் ஃபிடில் வாசித்த கதையாக, தெலங்கானா பிரச்னையில் ஆந்திரம் பற்றி எரிகையில், ஆளுநர் அலட்சியமாக இருந்ததுடன் அகௌரவமாகவும்





நடந்து கொண்டிருந்திருக்கிறார்!

திவாரியின் இந்த நடத்தை, ஆளுநர் பதவியையே ஒழிக்க வேண்டும் என்று கோரும் பலருடைய வாதங்களுக்கு வலு சேர்ப்பதுபோல் தோன்றக்கூடும். ஆனால், தவறு ஆளுநர் பதவியில் அல்ல; ஆளுநர் நியமனத்தில்தான் நிகழ்ந்துள்ளது. கரும்புள்ளி விழப்பெற்றவர்களையும் கறை படிந்தவர்களையும் ஆளுநராக நியமிக்கலாகாது. எனினும் கட்சி அரசியல் நிர்ப்பந்திக்கிறது! அரசியல் வாய்ப்புகள் பெற முடியாமல் போன அதிருப்தியாளர்களை ஆசுவாசப்படுத்தவும் தளர்ந்துபோன பிறகும் அரசியல் ஆசையைத் துறக்க இயலாத பிரமுகர்களைச் சமாதானப்படுத்தவும் ஆளுநர் பதவி பயன்படுத்தப்படுகிறது. இந்த முறையில் ஆளுநராக நியமிக்கப்படுவோர் கௌரவமாகவும் பொறுப்புணர்ச்சியோடும் பொதுநல நோக்கிலுமா செயல்படுவார்கள்? மத்திய அரசு எத்தகைய ஆளுநர் அறிக்கைகளைப் பெற விரும்புகிறதோ, அவற்றைத்தான் தயாரித்து அனுப்புவார்கள்.

இத்தகையவர்களைத் தவிர்த்துவிட்டு, நாட்டு நலனில் அக்கறை உள்ள நடுநிலையாளர்களை ஆளுநர் பொறுப்புக்கு நியமிப்பது என்பது நடைமுறையாக வேண்டும். ஒரு சிக்கல் அல்லது அசாதாரணச் சூழல் எழும்போது, சரியான முடிவு எடுக்கக்கூடிய அரசியல் அறிவு, பட்டறிவு, தொலைநோக்கு, பொதுநல நோக்கு யாவும் படைத்தவராக ஆளுநர் இருக்கவேண்டும். கடந்த காலத்தில் அத்தகைய கம்பீரமான ஆளுநர்கள் பொறுப்பு வகித்து, தங்கள் பதவிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தவறிழைத்தால் நல்வழிகாட்ட, தட்டிக் கேட்க, கண்காணிக்க, ஏற்பட்டதே ஆளுநர் பதவி. அதைக் கொச்சைப்படுத்துவோரையும் மன்னிக்க முடியாது; அவ்வாறு கொச்சைப்படுத்தக்கூடியவர்களை நியமிப்போரையும் மன்னிக்க முடியாது! ○

வட்டமேஜை



✉ எந்த வெற்றியிலும் பாதிக்கப்படாத தெளிந்த உணர்வுகள்தான், 'நோபல்' வெங்கட்ராமன் ராமகிருஷ்ணனின் உயர்வுக்குக் காரணம்!

- எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

✉ திருச்சி நகரின் கிரீடமே ஸ்ரீரங்கம் தான். பெருமாள் கோயிலின் மகிமைகள், அபிஷேகங்களைப் பற்றிய செய்திகள் திருச்சி ஸ்பெஷலுக்கு மகுடம்!

- எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்

✉ திருச்சி மாவட்டச் சிறப்பிதழில் மட்டும் சிறப்புப் புதிர் போட்டி வைத்து, வயிற்றெரிச்சலைக் கிளப்பிய உம்மை மலைக்கோட்டை உச்சியிலிருந்து தள்ளி விடணும்! **- ஆர்.பழனி, காட்பாடி**

✉ மணப்பாறை முறுக்கு நறுமணத்துடன், கரிகால் சோழன் கட்டிய கல்லணையில் இளைப்பாறி, ஸ்ரீரங்கத்தில் துயிலும் பரந்தாமனைத் தரிசித்து, உச்சிப்பிள்ளையார் கோயிலுக்கு மலையேறி மகிழ்ந்த அனுபவத்தை ஏற்படுத்திய 'திருச்சி ஸ்பெஷல் -1' சூப்பர்ப் டூர் அனுபவம்!

- ரேவதிப்ரியன், ஈரோடு - 1

✉ ஸ்கூல் கட்டினாத்தான் ரோடு காண்ட்ராக்ட் என்ற திருச்சி மேயர் எஸ்.சுஜாதாவின் பேச்சும், பேட்டியும் ஓ.கே.தான். நடைமுறையில் கடைப்பிடிக்கின்றார்களா என்பதுதான் இடிக்கிறது!

- க.சுந்தர், நெய்வேலி

✉ காவிரியின் கருணை எல்லை, முக்கொம்பு பற்றிய செய்திகள் செம கலக்கல்!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூர்


✉ ஆன்மிகத்திலிருந்து அரசியல்வரை... திருச்சி ஸ்பெஷல் கலக்கலோ கலக்கல்!

- சரஸ்வதி பஞ்சு, திருச்சி

✉ கல்கி *(13.12.2009)* இதழில் வெளிவந்துள்ள சுதா சேஷய்யன் எழுதியுள்ள 'வேதாந்த நாயகி' (ஸ்ரீலலிதா) கட்டுரை படித்தேன். இக்கட்டுரையில் 'தேச கால பரிச்சின்னா' என்கிற வார்த்தை 'தேச காலா பரிச்சின்னா' என்று இருக்க வேண்டும். தேச பாவம் என்னும் சொல் தேச அபாவம் என்று இருக்க வேண்டும். சமஸ்கிருத மொழியில் பாவ என்றால் 'இருப்பது', அபாவ என்றால் 'இல்லாமல் இருப்பது' என்று அர்த்தம். எந்தவிதமான 'அபாவமும்' இல்லாமல் இருப்பது - இதை 'தேசகாலா பரிச்சின்னா' குறிக்கிறது.

- ராதா கிருஷ்ணமூர்த்தி, பெங்களூரு

சூப்பர்ப் டூர்!



'இதயம் தொட்ட இசை' போட்டி முடிவுகள் அடுத்த வாரம்...



LIVE YOUR LIFE
IN COMFORT
Sri Kaladara
9/12, Alexandria Road, Cantonment,
Trichirappalli - 620 001.
மங்களம் உங்களுடையதாகட்டும்
MP
FLAT PROMOTERS
MANGHALAM
PROMOTERS
TRUSTED BUILDER FOR YOUR HOME
An ISO 9001 2008 Certified Company
MANGHALAM PROMOTERS
24, Shri Vijaya Rengam, Royar Thope
Srirangam, Trichy - 6
Ph : 0431 2433909, Fax : 2433876
Cell : 99944 33933
E-mail : info@manghalampromoters.com
www.manghalampromoters.com

செல்ஃபோன் ஒலிக்கிறது. அழுகையுடன் ஒரு பெண் குரல், ''சார்... நா ... தெருவுல குடி இருக்கேனுங்க. எம் புருஷன் ரெண்டாவது பொண்டாட்டி வெச்சுக்கிட்டு... என்னை அடிச்சு ரொம்பவும் கொடுமைப்படுத்துறார்!''

''சரிம்மா... இன்னும் பத்து நிமிஷத்துல போலீஸ் அங்கே வந்துடும். வெச்சுடும்மா!''



மாநகர போலீஸ் கமிஷனர், உடனடி ஆக்ஷனுக்கு எப்போதும் ரெடி என்பதே தற்போது திருச்சியின் ஹாட் டாபிக். திருச்சி மாநகர காவல் துறை ஆணையர் கருணாசாகரைச் சந்தித்தோம்.

''**நீ**ங்கள் குறிப்பிட்டுக் கேட்டிருப்பது போல, மாநகரின் சில இடங்களில் திருட்டுகள் நடந்து வருகின்றன. அந்தப் பகுதிகளில் இரவு நேர ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சில எக்ஸ்டென்ஷன் ஏரியாக்களில் அடர்த்தியாக வீடுகள் இல்லாத இடங்களில் திருட்டுகள் நிகழ்கின்றன. அவற்றைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம். புறநகர்ப் பகுதிகளில்



ஆக்ஷன் நம்பர்!

தேவையான இடங்களில் கூடுதல் பூத் அமைத்துச் செயல்பட வைத்துள்ளோம்.

நான் பொறுப்பேற்ற ஆறு மாதங்களுக்குள் குண்டாஸ் சட்டம் வாயிலாக ரவுடிகளை கணிசமாக ஒடுக்கியுள்ளோம். சூதாட்ட கிளப்புகளில் சட்ட விதிமுறை மீறல்கள் அரங்கேறாமல் தடுத்துள்ளோம். குறிப்பாக லாட்டரிச் சீட்டு விற்பனை ஒழிக்கப்பட்டுள்ளது. ஆபாச சி.டி.க்கள் ரெய்டு நடத்தப்பட்டு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

காந்தி மார்க்கெட் அருகே வெங்காய மண்டி மற்றும் ஜெயில்பேட்டை ரோட்டை, கடைக்காரர்கள் முழுவதுமாக ஆக்கிரமித்திருந்தனர். இருபது, முப்பது வருடங்களுக்கு முன்பு அந்த ரோட்டில் டவுன் பஸ்கள் சென்று வந்துள்ளன. அதன் பின்னர் நடந்து செல்பவர்களும் டூ வீலர்களும் மட்டுமே ரொம்ப நெருக்கடியில் அந்த ரோட்டில் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்தி, தற்போது குறிப்பிட்ட அந்தச் சாலை வழியாக மாநகரப் பேருந்துகள் ஒருவழிப் பாதையாக சென்று கொண்டிருக்கின்றன. இதனால் மாநகர் மத்தியப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஓரளவு குறைந்துள்ளது.

நீங்கள் கேட்டிருக்கும் அரியமங்கலம்- பழைய பால் பண்ணை ரவுண்டானா - செந்தண்ணீர்புரம் - பொன்மலை ஜி கார்னர் பகுதிகளின் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கவே இயலாமல் உள்ளது. நான்கு வழிச் சாலைப் பணிகள் நிறைவு பெற்ற பின்னர் குறிப்பிட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறையும்.

டூ-வீலர் வாகன ஓட்டிகளின் விபத்து மற்றும் அதன் ஆபத்துகளைத் தடுக்க வேண்டி, மாநகரில் ஹெல்மெட் அணிந்து டூவீலர் ஓட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எழுபத்தைந்து சதவிகிதம் பேர் இதைக் கடைப்பிடிக்கின்றனர். ஹெல்மெட் அணியாமல் டூ வீலர் ஓட்டுபவர்களிடம் அபராதம் வசூலிக்கப்படுகிறது. இதெல்லாம் பொது மக்களின் நன்மைக்குத்தானே!

பொது மக்கள் - போலீஸ் நல்லுறவுக்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பி.ஆர்.ஓ.வாக காவலர் ஒருவர் பணியாற்றி வருகிறார். காவல் துறை சார்ந்து எந்தப் பிரச்னை என்றாலும் உடனடி நடவடிக்கைகளுக்கு மீடியா மூலமாக என் செல் நம்பரை மாநகரப் பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளேன். ஒருநாளைக்கு சராசரி நூற்றைம்பது நபர்கள் என்னைத் தொடர்பு கொள்கின்றனர். அவற்றுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது!'' என்கிறார் 'திருச்சி ஹீரோ'வாக உலாவரும் மாநகர காவல் துறை ஆணையர் கருணாசாகர்.

கங்கிராட்ஸ் கருணாசாகர்!

பீகார் மாநிலத்துக்காரர். தமிழ் நாட்டுப் பணியை விரும்பிக் கேட்டுப் பெற்றுள்ளார். 1993-95ல் கும்பகோணம் ஏ.எஸ்.பி., பின்னர் சிதம்பரத்தில் ஏ.எஸ்.பி. அடுத்து திண்டுக்கல் மாவட்ட எஸ்.பி., திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி., சென்னை வடக்கு, தெற்கு மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் காவல் துறை பணி என தமிழகம் முழுதும் தடம்பதித்து வருபவர்...

கணாம்பா - கணபதிக்குத் தாய். கணங்களுக்கெல்லாம் தாய்.

குஹாம்பா என்கிறபோது குஹனாக இருக்கக் கூடிய முருகனுக்குத் தாய் என்பது ஓர் அர்த்தம். குஹ்யர்களுக்குத் தாய் என்பது இன்னொரு அர்த்தம். அதே மாதிரி **கணாம்பா** என்கிறபோது, கணபதிக்குத் தாய் என்பதுடன், கணங்களாக இருக்கக் கூடிய எல்லாவற்றுக்கும் தாயாக இருக்கக் கூடியவள் என்றும் அர்த்தம்.

குஹ்யகாராத்யா - குஹ்யர்களான ஜீவர்களால் ஆராதிக்கப்படுபவள்.

கோமளாங்கி - ம்ருதுவான, கோமளமான அங்கங்களை உடையவள்.

ஞான வடிவினள்!

சுதா சேஷய்யன்

குரு ஸ்வரூபம்

குருப்ரியா - குருவாக இருக்கக்கூடிய சிவபரமேசுவரனுக்கு ப்ரீதியானவள். சிவபரமேசுவரனுக்கு குரு என்று பெயர் - 'கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க' என்பதற்கேற்ப குருவாக வரக்கூடியவர்.

யார் யாருக்கு என்னென்ன ஆசையோ, அதற்கேற்ப அந்தந்த ரூபத்தை எடுத்துக் கொண்டு வரக் கூடியவர்கள்தான் சிவனும் சக்தியும். மாணிக்கவாசகருக்கு சிவப்பரம்பொருள் குருவாக வரவேண்டும் என்று ஆசை. அதை நிறைவேற்றினார் பரமேசுவரன். ஏன் அப்படி வந்தார் என்பதற்கு ஒரு காரணம் உண்டு.

மாணிக்கவாசகருக்கு எல்லாம் இருந்தது. தென்னவன் பிரம்மராயனாக - பிரதான மந்திரியாக இருந்து அந்த ராஜ்யத்தையே பார்த்துக் கொண்டார் அவர். பொக்கிஷத்தை (ராஜநிதியை)யும் பொறுப்புடன் பார்த்துக் கொண்டவர் அவர்தான். அதைப் பார்க்கும் போதெல்லாம் அவர் நினைப்பாராம்... அதிலிருக்கிற பொன்னும் பொருளும் அவரை ஒன்றுமே செய்யமாட்டா... ஆனால், அவர் மனத்தில் எப்போதும் இருந்த ஓர் ஆசை என்னவென்றால், நமச்சிவாய மந்திரத்தை உபதேசம் செய்ய ஒரு குரு வேண்டுமே என்பதுதான்! மனமாகிற குகைக்குள்ளே உறைகின்ற பரமாத்மாவுக்கு அந்த ஆசை தெரியாமலா போய்விடும்! மாணிக்கவாசகருடைய ஆசையை நிறைவேற்ற என்ன பண்ணினார், சாக்ஷாத் பரம்பொருளே குருவாக வந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டார். அதனால்தான் 'கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க' என்று பாடினார் மாணிக்கவாசகர்.

பின்னால் ஓர் இடத்தில் பாடுகிற போது, மாணிக்கவாசகர் சொல்லுவார்: ''எனக்கு குருவாக வந்து என்னை ஆட்கொண்டவர்; அவரே குதிரைப் பாகனாக வந்து பாண்டிய மன்னனை ஆட்கொண்டார்'' என்று. எனவே, குருவாக இருக்கக்கூடிய பரம்பொருள்; அந்தப் பரம்பொருளுக்கு ப்ரீதியானவள் **குருப்ரியா.**


மெய்யான ஸ்வதந்திரம்

ஸ்வதந்த்ரா - எதையும் தான் ஸ்வதந்த்ரமாக சாதிக்கக்கூடியவள். ஜீவன்கள் யாருமே தாங்கள் ஸ்வதந்த்ரமானவர்கள் என்று சொல்லிக் கொள்ள

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

12



ஸ்ரீ மத்தியபுரி நாயகி, மதுரை

முடியாது. சுதந்திர பூமி, சுதந்திரப் பிரஜை என்றெல்லாம் கூறினாலும் அது லௌகிகத்துக்கு வேண்டுமானால் பொருந்தும். ஆனால், அப்படிப்பட்ட உலகியல் சுதந்திரத்துக்குக் கூட சில வரம்புகள் உண்டு. எதை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பண்ண முடியாது. சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நாம் செயல்பட வேண்டும். அப்போது எங்கேயோ ஓரிடத்தில் வரம்பு என்பது வந்து விடும்.

பூமியில், லௌகிக வாழ்க்கையில் சுதந்திரம் என்பதற்கு வரம்பு உண்டு. ஆனால் அம்பாளுக்கு அப்படிப்பட்ட வரம்பெல்லாம் கிடையாது. சர்வ சுதந்திரத்தோடு இருக்கக் கூடியவள் ஸ்ரீ லலிதாம்பிகை. எதையும் சுதந்திரமாகச் செய்யக் கூடியவள்.

ஸர்வதந்த்ரேஷி - எல்லா விதமான தந்திரங்களுக்கும் ஈசுவரியாக இருக்கக் கூடியவள்.



''சுதந்திரம் என்றால் என்ன?'' என்று கேட்டபோது தாகூர் சொன்னார், ''நான் கை வீசி நடக்கிற போது, என் கை அடுத்தவரின் எல்லைக்குள் நுழையாத வரையில் எனக்குச் சுதந்திரம். அடுத்தவர் எல்லையைத் தொட்டால் சுதந்திரம் போய் விடும்!'' என்றார்.

உண்மை அதுதானே! சுதந்திர புருஷன் என்பதற்காக நினைத்த மாதிரி கையை வீசிக் கொண்டு நடந்து, முன்-பின் வருபவர்களை இடித்தால், அதற்குப் பெயர் சுதந்திரம் அல்ல; தொந்தரவு!

தெற்கு நோக்கி...

தக்ஷிணாமூர்த்தி ரூபிணி - மௌன குரு. ஆதி குரு தக்ஷிணாமூர்த்தி. அந்த தக்ஷிணாமூர்த்தி வடிவமாக இருப்பவள் அம்பிகை. இதிலே ஓர் அழகு கவனிக்கலாம். தக்ஷிணாமூர்த்தி என்ற பெயர் ஏன் வந்தது என்றால், தென் முகமாக அமர்ந்திருப்பவர் (தக்ஷிணம் - தெற்கு) என்பதால் வந்தது. தமிழில் தக்ஷிணாமூர்த்திக்குத் தென்முகக் கடவுள் என்றேதான் பெயர்.

ஆல மரத்தின் அடியில் - கல்லால மரம் - அமர்ந்து, சொல்லாமல் சொல்லக்கூடி

யவர் தக்ஷிணாமூர்த்தி. பல சிவன் கோயில்களில் பார்த்தோமானால், அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி இருக்கும். தக்ஷிணாமூர்த்தி ரூபிணியாக இருக்கிறாள் என்பதனால்தான் அம்பாள் சந்நிதி தெற்கு பார்த்து அமைந்திருக்கும். ஏதாவது ஒன்றிரண்டு கோயில்களில்தான் இது மாறியிருக்கும் - கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்தோடு அம்பாள் இருக்கக்கூடிய கோயில்கள் உண்டு. ஆனால், அனேகமாக, பல சிவன் கோயில்களில் பார்த்தால், அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கித்தான் இருக்கும். நடராஜர் சந்நிதியும் எப்போதுமே தெற்கு நோக்கித்தான் இருக்கும். அதேபோல், வழிபாட்டுக்குரிய நடராஜர் என்றால், பக்கத்தில் சிவகாமசுந்தரி இருக்க வேண்டும்... சிவகாம

மாணிக்கவாசகருடைய ஆசையை நிறைவேற்ற பரம்பொருளே குருவாக வந்தார்!

சுந்தரி இல்லாமல், தனியாக வழிபாட்டுக்குரிய நடராஜர் இருக்கவே மாட்டார். பக்கத்திலே சிவகாமசுந்தரி இருந்துகொண்டு தாளம் போட்டுக் கொண்டிருந்தால்தான் அவர் அதற்கேற்ப ஆடுவார். நடராஜர் என்று சொன்னாலே, சிவகாமசுந்தரியுடன் உறை நடராஜர்தான் - நீயும் நின் கணவரும் நீங்கள் திருமணக் கோலமும்தான்! சிவ - சக்தி ஐக்ய ஸ்வரூபம்தான் 'புந்தியில் வந்து பொருந்த வேண்டும்' என்று அபிராமி பட்டர் கேட்டார்.

இப்படி, தக்ஷிணாமூர்த்தி ரூபிணியாக, தானே குருவாக இருந்து, பரமாத்மாவினிடத்திலே நம்மைச் சேர்க்கக் கூடியவள் அம்பிகை.

ஸநகாதி முனிவர்கள்

அடுத்து வரும் திருநாமம், ஒரு தொகுப்பாகச் சேர்த்துப் பார்க்கக்கூடிய குரு சம்பந்தமான திருநாமங்களுள் மற்றொன்று. **குருப்ரியா, தக்ஷிணாமூர்த்தி ரூபிணி** என்றெல்லாம் பார்த்தோம். இவற்றையொட்டி வருவது **ஸநகாதி ஸமாராத்யா.** ஸநகாதி முனிவர்களால் ஆராதிக்கப்படுகிறவள் என்பது இதற்குப் பொருள்.

ஸநகாதி முனிவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று பார்த்தால், அந்த தக்ஷிணாமூர்த்தியின் காலடியிலே அவர்கள் இருக்கிறார்கள்! தக்ஷிணாமூர்த்தி ரூபிணியாகவே விளங்குபவள், அந்த தக்ஷிணாமூர்த்தியின் பாதங்களருகே அமர்ந்துள்ள ஸநகாதி முனிவர்களால் ஆராதிக்கப்படுகிறாள். அம்பாளைப் பற்றிய சம்ஹிதைகளில் சநத் சம்ஹிதை என்று உண்டு. அம்பாளை எப்படி வழிபட வேண்டும் என்று சநகாதி முனிவர்கள் ஏற்படுத்திய சம்ஹிதை சநத் சம்ஹிதை. ஸ்ரீவித்யாவிலே இந்த வழிபாட்டு முறை குறிப்பிடப்படுகிறது.

சிவஞானப் பிரதாயினி - இதுவும் குரு என்கிற மையக் கருத்தோடு தொடர்புடைய திருநாமம்தான். தக்ஷிணாமூர்த்தி என்ன பண்ணுகிறார்...? ஆலமரத்தின் அடியில் அமர்ந்து சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் மௌன குரு. அந்த மௌன குருவான பரம்பொருளுக்குக் கீழே இருக்கக் கூடியவர்கள் நான்கு சிஷ்யர்கள். அந்த நான்கு சிஷ்யர்களும் அம்பாளையே ஆராதிக்கிறார்கள் (ஸநகாதி சமாராத்யா). என்ன வேண்டும் குருவிடமிருந்து...? அவர் என்ன உபதேசம் செய்கிறாரோ அந்த ஞானம்தானே வேண்டும்!

அம்பாள்தான் அந்த சிவஞானத்தைத் தருகிறாள் (சிவஞானப் பிரதாயினி). சிவஞானத்தை வேண்டிக் கேட்டு அமர்ந்திருக்கும் அந்த நான்கு பேருக்கும் அந்தப் பரம்பொருளின் மங்கள ஞானத்தை பிரஸாதமாகத் தரக்கூடியவள் ஸ்ரீ லலிதாம்பிகை.

(வளரும்)



சைலண்டா சிரிங்க..!







எஸ்.ஜெ.கலைவாணி



356 காதல் கடிதங்கள்


"பள்ளிப் பருவத்தில் மீசை முளைப்பதைப் போலவே காதல் போன்ற உணர்வு அரும்புவதும் ரசிக்கக் கூடிய கவிதை. அது பட்டாம்பூச்சிக்கு சிறகு முளைப்பது போல ரம்யமானது. அந்தப் பட்டாம்பூச்சி நாளுக்கு ஒன்றென மெல்லின வார்த்தைகளால் மட்டும் காதல் கடிதம் எழுதினால் எவ்வளவு இதமாய் இருக்கும் கதையும் அப்படித்தான் இருக்கும்'' என்கிறார் '356 காதல் கடிதங்கள்' படத்தின் இயக்குநர் பாண்டியன்.

இதுதான்டா சட்டம்!

'இதுதாண்டா போலீஸ்...' என்ற மாபெரும் வெற்றிப் படத்தைக் கொடுத்த டாக்டர் ராஜசேகரோடு, நமீதா கைகுலுக்கும் படம் 'இதுதான்டா சட்டம்...'. ''துக்கடா ட்ரெஸ் போட்டு டான்ஸ் ஆடச் சொல்வோர் மத்தியில் என்னை ஹீரோயினாக்கி அழகு பார்த்த ராஜசேகர் மச்சானை மறக்க மாட்டேன்'' என்கிறது நமீதா பட்சி.

பட்டாம்பூச்சியின் காதல் கடிதங்கள்!





இந்திரசேனா

'**கா**தல் கடவுளாம் இந்திரனின் சேனையைச் சேர்ந்தவள் என் நாயகி. இந்திரனின் சேஷ்டையாக நாம் சொல்லும் அத்தனை அம்சங்களையும் கொண்ட நவநாகரிக மங்கையாக படத்தில் வலம் வருகிறார் என் நாயகி ரீட்டா... படம் காதலர் தினத்துக்குச் சமர்ப்பணம்'' என்கிறார் இயக்குநர்.

விலை

காமராஜ் டைரக்ட் பண்ணுற 'விலை' படம், பாலியல் தொழிலில் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட பெண்களைப் பற்றியதாம். இதற்காக மும்பை ரெட் லைட் ஏரியாவில் இரவும் பகலும் அலைந்து திரைக் கதையை அமைத்திருக்கிறாராம். சிலந்தியில் நடித்த சந்துருவும்... ரீத்துவும்... இதுல ஜோடி சுட்டநாங்க...

அய்யனார்

''ஈரத்தில் போலீஸ் வேடத்தில் காமாக நடித்த ஆதி, சற்றே காரமாக நடிக்கும் படம் அய்யனார். காரம், அதைத் தணிக்க ஜில்லுன்னு ஒரு ஐஸ்க்ரீம் வேணும்னு கேட்கறீங்களா... அப்படி ஒரு ஐஸ்க்ரீம் பொண்ணுதான் வர்றாங்க ஹீரோயின். காரம் + ஈரம். ரெண்டும் இணைஞ்சா என்னவாகுமோ அதுதான் படத்தின் கதை'' என்கின்றனர்.







மும்மூர்த்திகளும் முப்பெருந்தேவியரோடு தனித்தனி சன்னிதி கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் திருத்தலம் கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் உள்ள உத்தமர் கோயில். மங்களாசாசனம் செய்யப்பட்ட நூற்றெட்டு வைணவ ஆலயங்களில் ஸ்ரீரங்கத்துக்கு அடுத்த பெருமை இந்த உத்தமர் கோயிலுக்கு உண்டு. சிவபெருமானின் அறுபத்துமூன்று வடிவங்களில் பிச்சாடனார் திருக்கோலம் இத்தலத்தில் சிறப்பு!

பிரம்ம குரு, விஷ்ணு குரு, சிவ குரு, சக்தி குரு, சுப்ரமண்ய குரு, தேவகுரு பிரஹஸ்பதி, அசுர குரு சுக்ராச்சார்யார்னு மொத்தம் ஏழு குரு, சப்தகுருனு சொல்வாங்க. இந்த ஏழு குரு பகவான்களைக் கொண்டு விளங்கும் உலகின் ஒரே திருத்தலம் இதுதான்! தனி சன்னிதி அமைப்போட பிரம்மா அமைந்திருப்பதும் இங்கேதான். பிரம்மாவுக்கு இடதுபுறம் தனி சன்னிதியில் கல்விக்கு அதிபதி ஞான சரஸ்வதி. .

''குரு வாரமாகிய வியாழக்கிழமைதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தவறாது வந்து செல்கின்றனர். பதினொரு வாரங்கள் கட்டளை அர்ச்சனை செய்ய விரும்புபவர்கள் ரூபாய் நூற்று அறுபத்தைந்து செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். பதினொரு வாரங்கள் தொடர்ந்து அர்ச்சனை செய்து பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஜாதகத்தில் விஷ்ணுதோஷம் இருப்பவர்கள் புதன்கிழமையிலும், சிவன் மற்றும் குரு தோஷம் உள்ளவர்கள் வியாழக் கிழமையிலும், நாக தோஷம் மற்றும் சுமங்கலி தோஷம் உடையவர்கள் வெள்ளிக்கிழமையிலும் பிரம்மாவுக்கு உகந்த ஆத்தி இலையில் அர்ச்சனை செய்வது நலம்!'' எனத் தெரிவிக்கிறார் கோயிலின் செயல் அலுவலர் ஜி.சம்பத்குமார். ○



NATIONAL INSTITUTE OF TECHNOLOGY : TIRUCHIRAPPALLI – 620015

(Centrally Funded Technical Institution (CFTI), Under the Ministry of Human Resource Development Govt. of. India.)

Regional Engineering College-Tiruchirappalli (REC-T) was established as a joint venture of the Government of India and the Government of Tamil Nadu in 1964 to produce world-class engineers who will cater to the growing technological needs of the nation. The institute was granted Deemed University status with the approval of the UGC / AICTE and Government of India in 2003 and renamed National Institute of Technology (NIT-T). NIT-T has been declared an institution of national importance by the National Institute of Technology Act 2007.

HIGHLIGHTS

- Total campus area of 750 acres.
- Admission to NIT-T is through All India Engineering Entrance Examination (AIEEE) conducted at the national level.
- NIT-T now offers 10 Undergraduate courses and 23 Postgraduate courses in various disciplines of Science, Engineering and Technology (M.Tech., M.Sc., M.S., MBA, and MCA) besides Ph.D. programme in all the departments.
- Intake of students is from all over India.
- Well Qualified faculty members.
- Lecture Hall Complex: Consists of 30 fully furnished classrooms.
- Continuous performance assessment of students in all UG and PG programs (50% continuous assessment and 50% semester examinations).
- 100 % placement in all UG and 90% in PG programmes.
- Modern central library with more than one lakh volumes and subscriptions
- Good computing facilities
- Research environment
- Excellent sport and student amenity facilities

Dates of Examination (AIEEE 2010)

PAPER – 1	25.04.2010	09:30-12:30 hrs
PAPER – 2	25.04.2010	14:00-17:00 hrs

For details visit www.nitt.edu

டாக்டர் ஏ.வி.ஸ்ரீனிவாசன்

ஒரு நடுத்தர வயதுக் கணவர் தம் மனைவியை என்னிடம் அழைத்து வந்தார்.

''ரொம்ப வீக்கா இருக்கா டாக்டர். அது மட்டுமில்ல. சட் சட்டுனு அழுகை, கோபம், எரிச்சல்னு பல்வேறு உணர்வுகளுக்கு ஆளாகிடறா. திடீர்னுதான் இந்தப் பிரச்னை'', என்று முடித்தார்.

பரிசோதித்தேன். ''எல்லாம் நார்மல்தான். ஆக்ஸிடாஸின்



நீ அஞ்சு வயசு கம்மியா தெரியறே!

13

தான் குறைவாயிருக்கும்'' என்றேன்.

''அப்படீன்னா?'' என்றார்.

''ஆண், பெண் இருவருக்குமே ஆக்ஸி டாஸின் எனும் ரசாயனப் பொருள் மூளை யில் சுரக்கிறது. இது நம் மன நிலையை நன்றாக, சந்தோஷமாக வைக்க உதவும் முக்கியமான வேதிப் பொருளாகும். இது போதுமான அளவு சுரக்கும்போது தன்னம் பிக்கை, மகிழ்ச்சி, தைரியம், மன அமைதி போன்ற உணர்வுகள் நிரம்பித் ததும்பும். இது குறைய ஆரம்பிக்கும்போதுதான் பிரச்னையே...''

''அது எங்கே கிடைக்கும்?''

வேறெங்கே உங்களிடம்தான் உள்ளது.

ஆச்சரியமா இருக்கா?

ஒவ்வொரு கணவனிடமும்தான் மனைவியின் ஆக்ஸிடாஸின் அளவை அதிகரிக்கும் சக்தி உள்ளது. ஆமாம். அவன் செய்யும் சின்னச் சின்ன வேலை கள் மூலம் மனைவியின் ஆக்ஸிடாஸின் அளவு அதிகரித்து, அவள் புன்னகைப் பூவாய் வளைய வருவாள்.

''என்ன செய்யணும்?''

இதோ... இந்தா....

விடுமுறை நாட்களிலாவது மனை விக்கு காலை காஃபி கலந்து கொடுக் கவும்.

'இந்த புடைவைல இன்னும் 5 வயசு கம்மியா தெரியற' அப்படீங்கற கமெண்ட்டுகளை அப்பப்போ சொல்ல லாம்.

கஷ்டப்பட்டு செஞ்சு குடுக்கறதைச் சாப் பிட்டுட்டு வெரி நைஸ்னு பாராட்டலாம்.

ஆபீஸிலிருந்து வரும்போது பூ வாங்கி வரலாம்.

முடிந்தபோது வீட்டில் சின்னச் சின்ன வேலைகளைச் செய்யலாம்.

தூக்க முடியாமல் சாமான்களைச் சுமந்து வரும் மனைவிக்கு ரெடியாகக் கதவு திறந்து காத்திருக்கலாம்.

'வா ஒரு லாங் வாக் போயிட்டு வர லாம்'னு கை கோத்துப் புறப்படலாம்.

இன்ப அதிர்ச்சியாக அவளுக்குப் பிடித்த சினிமாவுக்கோ நாடகத்துக்கோ டிக்கெட் புக் செய்யலாம்.

அவளுக்குப் பிடித்த பாடல்களைப் பதிவு செய்தோ சிடியாக வாங்கியோ கொடுக்கலாம்.

மனைவியை ஃபோட்டோ எடுத்து ஃபிரேம் செய்து கொடுக்கலாம்.

கிச்சனில் ரிப்பேரான சாமான்களைச் சரி செய்து கொடுக்கலாம்.

வெளியூர் செல்ல நேரும்போது, 'நான் உன்னை மிஸ் பண்ணுகிறேன்' என்று மெஸேஜ் அனுப்பலாம் அல்லது ஃபோனில் சொல்லலாம்.

காரிலோ, பைக்கிலோ உட்காரச் செய்து ஒரு ரவுண்ட் வரலாம்.

வாரத்தில் ஒரு நாளாவது ஆஃபீஸி லிருந்து அவளை அழைத்து வரலாம்.

விருந்துக்கு சமைத்துக் கொண்டிருக் கும்போது உதவலாம்.

திடீரென சின்ன பிக்னிக் அழைத்துச் செல்லலாம்.

'இன்னைக்கு கிச்சனை இழுத்துச் சாத்திடு'னு சொல்லி வெளியில் சாப் பிடக் கூட்டிச் செல்லலாம்.

'இங்க வாடா இன்னைக்கு அப்பாகிட்ட படி'னு குழந்தைக்குப் பாடம் நடத்தலாம்.

நம்ம கமல்ஹாஸன் சொன்ன கட்டிப்பிடி வைத்தியமும் இங்கே நல்ல பலன் கொடுக்

கும்.

''இதுக்கெல்லாம் நேரம் எங்க டாக்டர்?''னு அலுத்துக்காதீங்க. இது போன்ற செய்கைகள் திருமணமானது முதல் காலம் பூராவும் தொடரும்போது உடலும் மனதும் ஆயுசு முழுவதும் ஆரோக்யமாக இருக்கும்.

கனடாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் சான்ட் ரா விடில்சன் ஆண் மற்றும் பெண்ணின் மூளையில், அழுகை, துக்கம், நெகிழ்ச்சி போன்ற உணர்ச்சிக்கான இடத்தை அறிய ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டார். அதன் முடிவில், ஆண்களுக்கு இவ்விடம் வலது அறைக்கோளத்தில் இரு இடங்களிலும் பெண்களுக்கு இரண்டு அறைக் கோளங்களிலும் பல இடங்களிலும் இவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் இடம் இருப்பதை அறிந்தார்.

ஆணுக்கு வலது அறைக்கோளத்தில் மட்டும் இருப்பதால், கிட்டத்தட்ட இது தனியாகத்தான் செயல்படுகிறது என்று அர்த்தம். இதன் செயல்பாடும் மிகக் குறைவு. அதனால் பொதுவாக அதிகம் உணர்ச்சிவசப்பட மாட்டான் அல்லது வெளிப்படுத்த மாட்டான்.

பெண்ணுக்கோ கிட்டத்தட்ட மூளை முழுவதும் இதற்கான இடங்கள் பரவியுள்ளன. ஏதேனும் துக்ககரமான சம்பவங்கள் தனக்குத்தான் நிகழ வேண்டும் என்பதில்லை, பக்கத்து வீட்டிலிருப்பவருக்கு ஏற்பட்டாலும் தனக்கே ஏற்பட்டது போல உணர்ச்சி வசப்படுவாள். ஆணுக்கு எமோஷனலான சமயத்தில் வார்த்தைகளை இடது அறைக்கோளத்திலிருந்து தேடி எடுக்க வேண்டும். எமோஷனல் ஒரு பக்கம் வார்த்தைகள் ஒரு பக்கம். இரண்டும் எட்ட இருந்து கொண்டு அவனை ஆட்டிப் படைக்கும். இரண்டையும் இணைக்கும் கார்பஸ் கொலாஸம் வேறு குறைவு. ஆனால் பெண்ணுக்கோ பேச்சும், இவ்வுணர்வுகளும் இரண்டு அறைக் கோளங்களையும் வியாபித்திருப்பதால் அழுதுகொண்டே பக்கம் பக்கமாகப் பேச முடியும்.

அதேபோல, பல்வேறு உணர்வுகளுக்கு எளிதில் மாறிக்கொள்ள முடியும் பெண்ணால். குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருக்கும்போதே அப்படியே ஆஃப் செய்து விட்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கவும் முடியும்.

அழுவாச்சி சீரியல்களெல்லாம் வெற்றி நடை போடும் ரகசியம் இப்போது புரிகிறதா?

பாவம் இதையெல்லாம் பார்த்துப் பெருமூச்சு மட்டுமே விட முடியும் ஆணால்.

அதனாலென்ன..? இந்த மூளையின் ஏற்பாடுகளைப் புரிந்துகொண்டால் போதும்.

நீ என்ன... நானென்ன
ஆணென்ன... பெண்ணென்ன...
எல்லாம் மூளையின்
கண்ணாமூச்சிதான். (முற்றும்)

எழுத்தாக்கம்: **லக்ஷ்மி மோகன்**



சிங்காரத் தோப்புக்கு அருகேயுள்ள ராணி மங்கம்மாளின் தர்பார் அரங்கில் தற்போது அரசு அருங்காட்சியகம் உள்ளது. ஆனால், மாற்றத்துக்குள்ளாகாமல் நாயக்கர் மன்னர்களின் காலத்து கலை வெளிப்பாடாகவே இன்னும் இருப்பது தர்பார் கூடம் மட்டுமே!

- இரா.கல்யாணசுந்தரம்

தர்பார் அரங்கம்!

அனைவருக்கும் இனிய புத்தாண்டு
பொங்கல் நல்வாழ்த்துக்கள்



ரூபி
தீப்பெட்டிகள்

THE MATCH HOUSE
THOTTIAM-621 215
TRICHY (Dist)


துருவ நட்சத்திரம்!

இவங்க இப்படித்தாங்க... 13

பேஜர் விசிலடித்தது.

'ப்ளீஸ் கான்டாக்ட் - மௌனம் ரவி' என்றிருந்தது.

அருகிலுள்ள எஸ்.டி.டி.பூத்திலிருந்து தொடர்புகொண்டேன்.

''சொல்லுங்க ரவி!''

''சபீதா! கேம்பாகோலாவுக்கு வந்திருங்க. நீங்களும் பிஸ்மியும் அஜித்தோடு காம்ப்ரமைஸ் பண்ணிக்கலாம். இந்த விஷயம் இப்படியே வளர்ந்துட்டுப் போறதை அஜித் விரும்பலை. எல்லாருக்கும் நண்பராயிருக்கத்தான் அவர் விரும்புறார். வாங்க பேசுவோம்'' என்றார் மௌனம் ரவி.

'உல்லாசம்' படப்பிடிப்பில் சண்டைக் காட்சியில் நடித்துக்கொண்டிருந்தார் அஜித். அவருக்கும் எனக்கும் சமாதானம் செய்து கொள்ளும் அளவுக்குப் பெரிய மோதல் ஒன்றும் நடந்து விடவில்லை. வழக்கம் போல பிறர் எழுதிய கிசுகிசுக்களுக்கு அடியேன் பெயர் அடிபட்டது. நான் ஒரு சிறு புள்ளி வைக்க, அதைப் பெரிய கோலம் ஆக்கிவிட்டனர் சில நண்பர்கள்.

ஒரு தொழிலாளர் தினத்தில் (மே-1) அஜித் பிறந்த நாள் நிகழ்வு அவரது மந்தைவெளி ஃப்ளாட்டில் நடந்தது. வாழ்த்தச் சென்றிருந்தேன். அங்கு சர்ச்சையின் நாயகி ஹீராவும் வந்திருந்தார். அஜித்-ஹீரா இருவரும் கைகுலுக்கியபடி பேசிக் கொண்டே நின்றிருந்தனர். குமுதம் லைட்ஸ் ஆனில், ''அண்ணி ஹீரா வாழ்க என ரசிகர்கள் குரல்கொடுத்தார்கள்'' என அந்த நிகழ்வை எழுதியிருந்தேன்.

எனது இந்தக் குறும்புத்தனமான விஷயம் பல பத்திரிகைகளில் பின்னர் பெரிதாக்கப்பட்டு, திரும்பிய பக்கமெல்லாம் அஜித் ஹீரா கிசுகிசுக்களாகப் பேசப்பட்டது.


அஜித்குமாரின் முதல் (தமிழில்) படமான 'அமராவதி' படப்பிடிப்பில் சந்தித்தது முதல் இன்று வரை அவரது உழைப்பை, வளர்ச்சியை அருகிலிருந்து கவனித்து வருகிறேன். வாரிசு நடிகர்களைப் போல இவருக்குத் திரையுலகில் எந்தப் பின்புலமும் இல்லை. ரஜினியைப் போலத்தான் இவரும் தன் முயற்சியால், தன் உழைப்பால் உயர்ந்தவர்.

சபீதா ஜோசப்

அப்போதெல்லாம் அவருக்குத் தமிழ் சரளமாகப் பேச வராது. நாலு வார்த்தை பேசினால் அதில் ஒரு வார்த்தை தமிழாக இருக்கும். தெலுங்கு வழியாகத்தான் அஜித் சினிமாவுக்குள் நுழைந்தார்.

எழும்பூரிலுள்ள ஆசான் மெமோரியல் சீனியர் செகண்டரி பள்ளியில் 10-ம் வகுப்பு வரை படித்தவர், பிறகு என்ஃபீல்டு கம்பெனியில் ஆட்டோமொபைல் எஞ்ஜினியரிங் பயிற்சி பெற்றார். அதை விட்டுவிட்டு ஆடை ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் நான்காண்டுகள் பணியாற்றினார். பின்னர் மாடலிங் துறையில் ஈடுபட்டார். நிறைய விளம்பரங்களில் மாடலானார், அப்படியே பைக் ரேஸ்களில் கலந்துகொண்டு தன் திறமையை நிரூபித்தார். சொந்தமாக டெக்ஸ்டைல் பிஸினஸ் செய்தார். முன் அனுபவம் இல்லாததால் ஏகப்பட்ட நஷ்டம்.

தயாரிப்பாளர் பூர்ணசந்திரராவ் மூலம் தெலுங்கில் அறிமுகமானார். 1993-ல் முதல் படம் 'பிரேம புஸ்தகம்'. அதன் வெற்றியுடன் நேராகத் தமிழுக்கு வந்தார். செல்வா இயக்கத்தில் 'அமராவதி'யில் தமிழ் ரசிகர்களின் இதய வாசலைத் தட்டினார். தமிழில் முதல் படம் வெளிவந்த நேரத்தில், தீவிர பைக் ரேஸ் பிரியரான அஜித் ஒரு 'பைக்' ரேஸில் விபத்தில் சிக்கி மரணப் படுக்கையில் கிடந்தார்.



தண்டுவடம் பாதித்ததால் பெரும் அவஸ்தைக்குள்ளானார். ரங்கா நர்ஸிங் ஹோமில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, டாக்டர்கள் ரங்கசாமி, சிதம்பரம் ஆகியோர் ஆபரேஷன் செய்து அஜித்தை நடக்க வைத்தனர். கொஞ்சம் கொஞ்சமாக உடல்நலம் பெற்றபின் மீண்டும் சினிமாவில் நடிக்கத் தொடங்கினார்.

ஆரம்பத்தில் தோல்வி மேல் தோல்வி வந்தாலும் மனம் தளராமல் உழைத்தார். 'ஆசை' அஜித் பக்கம் இளம் ரசிகர்களை அள்ளிக் குவித்தது. 'காதல் கோட்டை' படத்தின் வெற்றியால் நட்சத்திர அந்தஸ்து. அன்றிலிருந்து தொடங்கியது அஜித்தின் வெற்றிப் பயணம்.

ஆரம்பத்தில் தன் மனத்தில் பட்டதைப் பயப்படாமல் பேசிவிடுவார். இதனால் சில சிக்கல்களில் மாட்டிக்கொண்டதும் உண்டு. பின்னர் படிப்படியாகத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டார். திருமணத்துக்குப் பின் ஒரு ஞானியைப் போன்ற பக்குவமும் தெளிவும் வந்து விட்டன.

“ அஜித்துக்கு ஜோடியாக வேண்டுமானால் தமிழில் நடிக்கிறேன் என்றார் ஐஸ்வர்யா ”

அஜித்துக்குப் பெண் ரசிகைகள் அதிகம். உலக அழகி ஐஸ்வர்யாவே அவருடன் நடிக்க விரும்பியதுண்டு.

இப்போது முன்னணியில் இருக்கும் இளம் நடிகர் ஐஸ்வர்யாராயுடன் நடிக்க விரும்பினார். ஐஸிடம் பேசப்பட்டபோது, ஐஸின் பதில்: 'அஜித் என்றால் நடிக்கலாம்.'

திருமணத்துக்குப் பின் சில படங்களின் தோல்வியும், சொந்தப் படம் எடுத்து பட்ட கடனுமாகச் சேர்ந்து அப்போது அஜித் ஐந்து கோடி கடனில் இருந்த நேரம். அந்தச் சமயத்தில் ஒரு வெளிநாட்டுக் குளிர்பான விளம்பரத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. 2 கோடி வரை சம்பளம் தருவதாகச் சொல்லப்பட்டது. 'எங்க நாட்டு குளிர்பானம் தவிர எவ்வளவு அள்ளிக் கொடுத்தாலும் வெளிநாட்டுக் குளிர்பான விளம்பரத்தில் நடிக்க மாட்டேன்' எனச் சொல்லிவிட்டார்.



அஜித்தின் இதுபோன்ற நல்ல செயல்கள்தான் 'தல' என்று ரசிகர்களின் அன்பு அழைப்புக்குக் காரணமாகின.

கடன் ஏறியதும் சிலர் கொண்ட கொள்கையிலிருந்து மாறி விடுவதுண்டு. சிலர் தங்களிடம் எத்தனை கோடிகள் இருந்தாலும் மேலும் ஒரு கோடி கிடைக்கிறது என்றால் எந்த வேடத்திலும் நடிக்கச் சம்மதித்து விடுவார்கள். காரணம், பணம். ஆனால் அஜித் பசித்தாலும் புல் தின்னாத புலி.

(முற்றும்)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு

பொங்கல் நல்வாழ்த்துக்கள்



திருச்சியில் சுகமாய் தங்குவதற்கு

வருகை தாருங்கள்

அபிராமி ஹோட்டலுக்கு!

அபிராமி ஹோட்டல்ஸ்

திருச்சி-1. ☎ 2415001

வஸந்த பவன்

சத்திரம் பஸ் ஸ்டாண்ட், திருச்சி-2.

சென்ட்ரல் பஸ் ஸ்டாண்ட், திருச்சி-1.

வஸந்த பவன் &
வஸந்தம் காபி

நல்ல காபி வஸந்தம் காபி

வஸந்தம் காபி அருந்தி மகிழுங்கள்!



வஸந்தம் காபி ஒர்க்ஸ்,
10, மெக்டோனால்ஸ் ரோடு, திருச்சி-1.



அருள்வாக்கு

அன்பே பக்தி!

அன்புதான் பக்தி. பல தினுஸான அன்புகளில் ரொம்ப உசந்ததாக ஈச்வரனிடம் வைக்கும் அன்பே பக்தி. கண்ணுக்கு இன்பமளிக்கும் ரூபம், மனசுக்கு இன்பமளிக்கும் குணங்கள் கொண்ட ஸகுண மூர்த்தியிடம் அன்புருவான பக்தி வைப்ப தென்றால் சுலபமாக முடிகிறது. ஆனால் ரூபமே கிடையாது, மனசுக்கும் பிடிபடாது என்று இருக்கும் நிர்குண பரமாத்மாவிடம் அன்பு வை என்றால் எப்படி என்று தோன்றலாம்.

அன்பு என்பது என்ன?

ஒரே பரமாத்மாதான் எல்லா உயிர்களுமாக ஆகியிருக்கிறது. பல உயிர்களாகும்போது ஒன்றையொன்று வேறுபடுத்தி வைத்து மாய ப்ரபஞ்ச நாடகம் நடக்கிறது. இதிலேயே எதிர் டைரக்ஷனில், ரொம்பவும் உத்தமமான அம்சமாக, வேறுபட்டவற்றை ஒன்றாக ஐக்யப்பட வைக்கவும் பரமாத்மா அநுக்ரஹித்திருக்கிற forceதான் அன்பு. பொதுவாக மற்றவரிடமிருந்து நமக்கு ஒன்றைப் பெற்று லாபமடைவதாகவே மநுஷ்ய மனப்பான்மை இருக்கும். அதற்கு எதிர் மருந்தாக நம்மை இன்னொருவருக்குக் கொடுத்து அதில் நிறைவு பெறச் செய்வது அன்பு.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

உ

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல ட்ரஸ்ட்

நிர்வாக அலுவலகம் : 16, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
போன்: 24471936 / 2447 2540
E.Mail : prb@vsnl.com Website : http://personal.vsnl.com/kmaw_trust

வேண்டுகோள்



- ஸ்ரீ காஞ்சி மாமுனிவரின் ஆக்ஞைப்படி அவர் அருளுடன் இந்த டிரஸ்ட் 1986ல் ஸ்தாபிக்கப்பட்டது.
- **தமிழ்நாட்டில் உள்ள பழைமையான கிராமக் கோவில்களில் பூஜை செய்யும் மிக ஏழ்மை நிலையில் உள்ள பூசாரிகள் உள்ளிட்ட அர்ச்சகர்களுக்கு ஒவ்வொரு மாதமும் உதவிப் பணம் அளிக்கப்படுகிறது.**
- ஸ்ரீ மஹா பெரியவாளின் மேலான அருளுரைப்படி இந்த நற்பணிக்கு நன்கொடை அளிக்குமாறு ஆஸ்திக அன்பர்களை வேண்டிக் கொள்கிறோம். ரூ.4,000/-க்கு மேல் மாத மொத்த வருமானம் பெறுபவர்கள் தங்களது ஒரு மாத மொத்த வருமானத்தை ***தங்கள் வாழ்நாளில் அவர்களுடைய சௌகர்யப்படி,*** மொத்தமாகவோ அல்லது பல தவணை களிலோ நன்கொடையாகக் கொடுத்து உதவுதல் நலம் என ஸ்ரீ மஹா சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள். அவரவர்கள் தங்களால் இயன்றளவு அளிக்கும் நன்கொடையை நன்றியுடன் பெற்றுக் கொள்வோம்.
- நன்கொடைகளை க்ராஸ் செய்த காசோலை அல்லது டிமாண்ட் டிராப்டாக ***"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"*** என்ற பெயரில், சென்னையில் ஏதாவ தொரு வங்கிக் கிளையில் பெறுமாறு நிர்வாக அலுவலகத்திற்கு அனுப்பவும்.
- தற்சமயம் இந்த டிரஸ்ட் கிராமங்களிலுள்ள 341 ஏழை அர்ச்சகர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூ. 800/-ஐ வழங்கி வருகிறது.
- **ஒவ்வொரு ஆண்டும் மாத உதவி கோரும் ஏழை அர்ச்சகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும், முதலீடுகளின் பேரில் வரும் வட்டி விகிதம் வேகமாக குறைந்து வரு வதாலும், டிரஸ்ட்டின் மூலதனத்தை உடனடியாக அதிகரிக்க வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. ஆகையால் ஸ்ரீ காஞ்சி மகானின் அருளாக்ஞையின்படி தங்களுடைய நன்கொடைகளை விரைவில் அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

C.V. Narasimhan, I.P.S., (Retd)
பொறுப்புக் குழுவின் தலைவர்.

பின் குறிப்பு :

நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு 80 G-யின் கீழ் வரிவிலக்குண்டு. வெளிநாட்டு நன்கொடைகளை ஏற்க FCRA-ன் கீழ் (எண்: 075820173) பதிவு செய்யப்பட்டுள்ளது.



பாத்ரூமிலிருந்து ஈர டவலைச் சுற்றியபடி வெளியே வந்த சூர்யா, கால்களின் ஈரத்தை மிதியடியில் நன்கு அழுந்தத் தேய்த்துக்கொண்டு அறையின் நடுவில் வந்து ஃபேனுக்கடியில் நின்று தலையின் ஈரத்தைக் கைகளால் துவட்டிக்கொண்டான். சிஸ்டத்தில் சல்தே சல்தே..கிஷோர் எம்.பி த்ரீயில் பாடிக்கொண்டிருந்தார். எம்.எஸ். கண்களை மூடி ஆலாபனை செய்யும் புகைப்படத்துடன் கூடிய காலண்டர், ஃபேன் காற்றில் மெதுவாக அசைந்துகொண்டிருந்தது.

அறையில் அலமாரியில் புத்தகங்கள். ரஜ்னீஷ், மாஸ்கோ, ராதுகா பதிப்பக புத்தகங்கள், ப.சிங்காரம், கலிங்கத் துப்பரணி என வித்தியாசமான கலவையுடன் புத்தகங்கள் சீரான வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சுவரில் தோடர்கள் இன பழங்குடிப் பெண் ஒருத்தி ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு புகைப்படக் கலைஞன் முன் வெட்கத்துடன் இன்னமும் தீராத சிரிப்புடன் தலை கவிழ்ந்திருந்தாள். அருகில் இன்னொரு புகைப்படம் செங்கல்பட்டு ராமகிருஷ்ணா பள்ளி ஹாஸ்டல் மாணவர்கள். 90 - 91 என கல்வியாண்டு போடப்பட்டிருந்தது. அதில் மூன்றாவது வரிசையில் நின்றுகொண்டிருந்தவன் சூர்யா. அவன் அருகே கைகளை இறுக்கமாகக் கட்டி விபூதி அணிந்தபடி சேகர் நின்றுகொண்டிருந்தான்.



பகல் மீன்கள்

13

சூர்யா அவசர அவசரமாக பேண்ட் சட்டையை எடுத்து மாட்டுவதில் மும்முரமாக இருந்தான். அதே மேனேஜரிடம்

நேற்று வேறு ஒரு புதிய பொய்யைச் சொல்லி தகவல் வாங்கிவிட்டான். தேன்மொழி விஜயா ஹெல்த் சென்டரில் குளிர் அறையில் பத்திரமாக இருக்கிறாள். இது தான் சரியான தருணம். நேராக அவளைப் பார்த்துப் பேசிவிடுவது என முடிவு செய்தான். ஞாபகமாக அவளது தொலைந்த பர்ஸையும் எடுத்து வைத்துக்கொண்டான். எதிலும் திட்டமில்லை, சந்தர்ப்பத்தைப் பொறுத்து நடந்து கொள்ளலாம் என்பது தான் அவனது திட்டம். முன்புபோல புள்ளி வைத்து காய் நகர்த்தும் மனநிலையில் இல்லை. நேற்று இரவு அவனது வளர்ப்புத் தந்தை டாக்டர் ராமச்சந்திரனைப் பார்த்து விட்டுத் திரும்பியதிலிருந்தே அவனது மனம் தனது புத்திசாலித்தனங்களிலிருந்து விடுபடத் துவங்கியிருந்தது. அனாதையான

அஜயன் பாலா



சூர்யாவின் பத்தாம் வகுப்பு தொடங்கி பயோடெக் வரையிலான படிப்புச் செலவு களைப் பார்த்துக்கொண்டவர் டாக்டர் ராமச்சந்திரன். துவக்கத்திலிருந்தே அவரை அப்பா என்றே அவனுக்கும் அழைத்துப் பழக்கமாகிவிட்டது. அவரும் அவரது மனைவியும் எத்தனையோ முறை வீட்டோடு வரச்சொல்லியும் சூர்யா மறுத்துவிட்டான். காரணம், முத்துலட்சுமி, ஜெகதீசன் எனும் அன்பான இரண்டு உள்ளங்கள். செங்கல்பட்டு ராமகிருஷ்ணா பள்ளி ஹாஸ்டலில் அவனோடு படித்த சேகரின் அப்பா அம்மாதான் அவர்கள் இருவரும்.

அன்பு என்றால் என்ன, அம்மா என்றால் என்ன என்றே தெரியாமல் வளர்ந்த சூர்யாவுக்கு, சிறுவயசில் ஒரு தலை வருடல் மூலமாக அதனை உணர்த்தியவர் சேகரின் அம்மா.

சூர்யாவின் ஃப்ளாஷ்பேக் கொஞ்சம் வித்தியாசமானது. அப்பா அம்மா யாரும் கிடையாது. யாரோ அவனை சின்ன வயசில் ராமகிருஷ்ணா ஹாஸ்டலில் கொண்டு வந்து சேர்த்துவிட, அது மட்டும்தான் அவனுடைய உலகமாக இருந்தது. ஹாஸ்டல் மாணவர்கள்தான் அவன் சொந்தமே. எட்டாம் வகுப்பு படிக்கும்போதுதான் வீட்டில் சேட்டை தாங்காமல் சேகர் அந்த ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டான். சூர்யாதான் வகுப்பில் முதல் மாணவன். சேகருக்கும் அவனுக்கும் பெரிய நெருக்கம் இல்லை. அந்த வருட தீபாவளிக்கு ஹாஸ்டலே காலியாக இருந்தது. சேகரை அழைத்துச்செல்ல வந்த அவன் அம்மாவை இவன்தான் அழைத்துப்போய் விளையாடிக் கொண்டிருந்த சேகரைக் காண்பித்தான். அந்த இடைப்பட்ட ஒரு நிமிடத்தில் அவன் அம்மா கேட்ட ஒரு கேள்வியும் அதற்கு இவன் அளித்த ஒரு பதிலும்தான் இன்று வரை அவன் வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக இருந்தது.

''நீ எந்த ஊருப்பா தம்பி?''

''தெரியாதும்மா... ''

''அப்பா அம்மா...''

''எனக்கு யாரும் இல்லம்மா''

சேகரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்ட அந்தத் தாய், வார்டனிடம் சென்று பேசிவிட்டு வந்து அவனையும் அழைத்தாள்.

''எங்கம்மா?''

''உனக்குத்தான் யாரும் இல்லன்னு சொன்னேல்ல... வா... தீபாவளிக்கு எங்க கூட ரெண்டுநாள் இருந்துட்டு வரலாம்.''

முதன்முறையாக சூர்யா பேருந்தில் பயணித்தது அன்றுதான். ஜன்னல் வழியாக வந்த காற்றில் இருந்த வயல்களின் ஈரம் அவனது மனசில் அப்படியே ஒட்டிக் கொண்டது. தாழம்பேடு சிறிய கிராமம் தான். தாழம்பூக்கள் அதிகம் இருந்ததால் அந்த ஊருக்கு அப்படி ஒரு பெயர். மறுநாள் காலை அவன் தலைக்கும் எண்ணெய் வைத்து அந்தத் தாய் தேய்த்தபோது அவனறியாமலே கண்ணீர் வழிந்தது.

திருவானைக்காவலுக்கு ஆறு கி.மீ.தூரத்தில் இருக்கும் சிறுவாசியில் உள்ள சிவன் கோயிலில் நடராஜர் விக்கிரகம் உள்ளது. அதற்கு என்ன என்கிறீர்களா? வேறொன்றுமில்லை. நடராஜர் காலடியில் முயலகன் இல்லை. அதற்குப் பதிலாக நாகம் இருக்கிறது. அதனால் அவர் சர்ப்ப நடனமூர்த்தி.

- இரா.கணேசன்

முயலகனுக்குப் பதிலாக நாகம்!

க்ளைவ் ஹவுஸ்!

தெப்பக்குளத்தின் கீழவீதியில் இருக்கிறது ராபர்ட் க்ளைவ் வசித்த வீடு. தற்போது அந்த வீடு செயிண்ட்ஜோசப் காலேஜ் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. அங்கே கிறிஸ்துவ பாதிரியாராகப் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கி பயில்கின்றனர்.

- சுஜாதா கணேஷ்

ஏழே தயாராக இருந்த என்டேவர் பைக்கை உதைத்து இரும்பு கேட்டைக் கடந்து சாலைக்குள் வாகனங்களோடு ஐக்கியமாகி காலை நேரக் குளிர்காற்றை உள் வாங்கினான். மனசு காற்றாடியாக உயரே எழுந்தது. இன்னும் ஐந்து நிமிடம்தான். அவனது பைக் விஜயா வளாகத்தினுள் அவனைக் கொண்டு போய் விட்டு விடும். அதற்குப் பிறகு... என்ன நடக்கப் போகிறதோ அவனுக்கே தெரியாது. ஆனால் மனசு என்னவோ உற்சாகமாக இருந்தது.

அதே நேரம் விஜயா ஹெல்த் சென்டரின் அறை எண் 310. குளிரூட்டப்பட்ட அந்த ப்ரத்யேக சிறிய அறையின் நடுவில் படுக்கையில் தேன்மொழி சுருண்டிருந்தாள். அறையில் அருணாச்சலமும் சற்று முன் வந்திருந்த கிரிஜாவும் இருந்தனர். இருவரும் அமைதியாக யோசனையில் இருந்தனர். பணிப்பெண் துடைப்பானை அழுத்தி தரையைத் தேய்த்துக்கொண்டிருந்தாள். அந்தச் சத்தத்தை தவிர வேறு சத்தம் இல்லை.

அருணாச்சலம் கண்களில் துளிர்த்த நீரைக் கண்ணாடியை எடுத்துத் துடைத்துக் கொண்டார்.

''...ப்பா ப்ளீஸ் கூல்ப்பா ஒண்ணுமில்லன்னுதான்... டாக்டர் சொல்லிட்டாருல்ல. ரெண்டுநாள்தான் இனியா் ஆயிடுவா...''

''உனக்குத் தெரியுமில்லம்மா அவளுக்கு அம்மா பேருக்குத்தானே தவிர எல்லாமே நான் ஒருத்தன்தான்ம்மா.''

''ஓ.கே டாடி இப்ப என்ன ஆயிடுச்சு டாக்டர் இப்பதானே சொல்லிட்டுப் போனாரு.''

''சரிம்மா... நீ அவனைப் பாத்தியாம்மா?''

''அந்த ஆளைப் பாத்தேன்ப்பா ஆனா முகம் சரியா ஞாபகம் இல்லை.''

''ஆள் எப்படிம்மா இருந்தான்?''

''சாரிப்பா... அன்னைக்குச் செம கூட்டம்... ஒண்ணும் புரியலை. ஆள் பாக்கறதுக்கு ரொம்ப டீஸண்டாதான்ப்பா இருந்தான்.''

'ஒருவேளை வைசாக்ல ஒருத்தனைப் பாத்தேன்னு சொன்னாளே... அவனா இருக்குமோ?' அருணாச்சலத்தின் மனசு குறுக்குசால் ஓட்டியது.

கொஞ்ச நேரம் அப்படியே யோசித்தார். பணிப்பெண் அறையைத் துடைத்துவிட்டு ட்ராலியைத் தள்ளிக்கொண்டு வெளியே சென்றதும் மீண்டும் கிரிஜாவிடம் திரும்பி,

''அப்புறம் அன்னைக்குக் காலையில கூட யாரையோ பாத்துட்டு ஓடினான்னு சொன்னியே அவனும் இந்த ஆள் தானாம்மா?''

''தெரியலைப்பா... ஒருவேளை இருந்தாலும் இருக்கலாம்.''

''அவ வைசாக் கல்யாணத்துக்குப் போயிட்டு வந்ததுலர்ந்தே அடிக்கடி மூட் அவுட்லதான்ம்மா இருந்தா. யாரோ ஒரு பையனைப் பாத்தேன். எனக்கு ஹெல்ப்

பண்ணிட்டுப் பேரைக்கூட சொல்லாம போயிட்டான்னு புகழ்ந்து பேசிக்கிட்டு இருந்தா. அவ அப்படி பேசினப்பவே பயந்தேன்.''

''ஏன்ப்பா?''

''எங்க காதலிக்கப் போறாளோன்னு... எல்லாத்துக்கும் இவ அம்மாதாம்மா காரணம். அவ ஜோசியப் பைத்தியம். தேன்மொழியோட ஜாதகத்தைப் பாத்துட்டு யாரோ சொன்னாங்களாம் உம் பொண்ணுக்குக் காதல் கல்யாணம் தான்னு... யாரையாவது இழுத்துட்டு ஓடிப் போய் தான் அவ கல்யாணமே பண்ணிக்குவான்னு.



அதுலர்ந்து இவ எதுனா தப்பு செஞ்சாலே அவங்கம்மா நீ யார் கூடவாவது ஓடிப்போய்த்தான் குடும்பம் நடத்துவேன்னு சொல்லிச் சொல்லி நாளடைவில அதுவே அவ மனசுல ஆழமா பதிஞ்சு போயிடுச்சு. அதனால யாராவது அவளை லவ் பண்ணினாலோ சைட் அடிக்க ஆரம்பிச்சாலோ குழம்ப ஆரம்பிச்சுடுவா... ஒருவேளை இவன்தான் நமக்கு வர்ற புருஷனா இருப்பானோன்னு இவளுக்குத் தோண ஆரம்பிக்கும். கூடவே இவன் நம்மளை அனுசரிச்சுப் போகக்கூடிய அளவுக்கு நல்லவனா பொறுமையா இருப்பானான்னு யோசனையும் வந்துடும்''

''ம்ம்ம்...''

''ஓ... நீ அவளுக்கு சீனியரில்ல...''

''ஆமாம்ப்பா... ரெண்டுவருஷம் ...''

''அதான் உனக்கு அவ ஃபைனல் இயர்ல நடந்த விஷயங்கள் சரியாத் தெரியலை...''

''அப்படியாப்பா... என்ன நடந்துச்சு?''

''காலேஜ்ல இவளுக்கு யார் கூடவோ லவ் இருந்திருக்கும் போல. அப்ப ஒரு சம்பவம் நடந்துச்சு... அவன் இவ சந்தேகப்படறது புடிக்காம விலகிப்போயிருப்பான் போல. இல்லை இவ அவனை வெறுத்துட்டாளான்னு தெரியலை... ஏதோ நடந்துடுச்சு... அப்ப ஒரு தடவை வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கெடந்து சரியா சாப்பிடாம அவளுக்குள்ளயே பேசிக்கிட்டு... கடைசியில் இது மாதிரி ஒருநாள் பர்ஸ்ட் ஆயிட்டா.

அப்பதான் எனக்கு இவளுக்குள்ள இருக்குற பிரச்னையே தெரிய வந்தது.

அதனாலதான் எங்கே இவ திரும்பவும் காதலிக்கப் போறாளோன்னு பயந்துக்கிட்டிருந்தேன். நான் பயந்தா மாதிரியே நடந்துடுச்சு.''

தன் மகளைப் பற்றி இத்தனை துல்லியமாக இருக்கும் தேன்மொழியின் அப்பாவை கிரிஜா மிகவும் ஆச்சர்யத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்

''அதனாலதான்ம்மா சொல்றேன். அந்தப் பையனைப் பாக்கணும்னு...ரெண்டு பேருக்குள்ள அப்படி என்ன பிரச்னைன்னு டிஸ்கஸ் பண்ணித் தீர்த்துட்டா அப்புறம் என் பாடு முடிஞ்சிடும் இல்லையா?''

கிரிஜா அமைதியாக இருந்தாள்.

சட்டென ஏதோ சத்தம் கேட்க, வெளியில் வந்த கிரிஜாவின் முகத்தில் ஆச்சர்யம் ப்ளஸ் அதிர்ச்சி.

(மீன்கள் துள்ளும்)

THE FIRST AND THE BEST

WORLD's NO.1



Sintex
WATER TANKS

AVAILABLE AT ALL LEADING SANITARY / HARDWARE STORES

All Black Tanks are not **Sintex Tanks** Look our Hologram

SSI & CO.

69, மேலமாசி வீதி,
மதுரை-1.
Ph : 2344111
Cell : 94433-74111

சிகப்பி டிரேடர்ஸ்

263, குட்ஷெட் தெரு,
மதுரை-1.
கடை : 2349758
Cell : 94430-60052





வண்ணங்களால் உயிர்த்தெழுந்தவன்!










"வண்ணங்கள்தான் என் எண்ணங்களை உயிர்த்தெழச் செய்கின்றன. சாக்லேட்டைக் கண்டதும் குதூகலத்தோடும் ஆர்வத்தோடும் கூத்தாடும் குழந்தையின் மனநிலையை வண்ணங்கள் எனக்குத் தருகின்றன" என்கிறார் ஓவியர் ரவிலேக்ஸ். மனைவியின் பெயரான லக்ஷ்மியிலிருந்து லேக்ஸ் என்பதை எடுத்து தன் பெயர் மீது உடுத்திக் கொண்டிருக்கிறார்.

"எந்த ஒரு கலாசாரத்தையும் உலகுக்குக் கடத்துபவர்களாக பெண்கள்தான் இருக்கின்றனர். ஒரு சமூகத்தின் கலாசாரத்தை அறிய வேண்டுமானால், அச்சமூகத்தின் பெண்களைத் தெரிந்துகொண்டால் போதும். அதனால் என் ஓவியங்களில் இந்தியப் பெண்களின் ஆதிக்கம் அதீதமாக இருக்கும்" என்னும் ரவிலேக்ஸுக்கு ஓவியத்துக்கான உந்துதல்களாக இருப்பது கோயில்கள்தானாம். குறிப்பாக "சோழர்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்" என்கிறார்.

தனியாகவும் நண்பர்களோடு இணைந்தும் முப்பதுக்கும் மேற்பட்ட ஓவியக் கண்காட்சிகளை நிகழ்த்தியிருக்கும் ரவிலேக்ஸ், கும்பகோண ஓவியக் கல்லூரி மாணவர். சொந்த ஊர் திருச்சி. தற்போது சிறுகனூர் அரசுப் பள்ளியில் ஓவிய ஆசிரியர் பணி.

• ரவிலேக்ஸ்



கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

திண்டுக்கல் மாவட்டத்து கற்கண்டு வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...

- திக்கெட்டும் புகழ்பரப்பும் திண்டுக்கல் ஸ்பெஷாலிட்டி என்னென்ன?
- மனசை ரிலாக்ஸ் ஆக்கும் மகத்துவமான இடம் எது?
- குளுகுளு இடம் பற்றிய சூடான தகவல் எழுதலாமே...
- நெஞ்சை நிமிர வைக்கும் உங்க ஊர் பெருமை என்ன?
- மக்கள் மனத்தில் குந்திக் கொண்ட வி.ஐ.பி. யாரு?
- திண்டுக்கல் பூட்டு மாதிரி புத்தியை லாக் செய்ய எழுத்தாளர்கள் என்ன தருவீங்க?
- முட்டுக்கட்டை போடும் பிரச்னைகள் என்ன?
- வளம் சேர்ப்பதைப் புகழவும்... துயர் தருவதைக் களையவும்... இது நல்ல வாய்ப்பென்று பகிரங்கமா எழுதுங்க...

வாசகர்களே...

நீங்கதான் ரொம்ப முக்கியம். உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் திண்டுக்கல் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கே!

திண்டுக்கல்


கொடைக்கானல் லேக்

ஆமாம்! உங்கள் திண்டுக்கல் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திண்டுக்கல் மாவட்டத்தின்.... பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்
சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்
நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ் என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

வர்றோம்!

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 09.01.2010

கலக்க வருதுப்பா கல்கி
திண்டுக்கல் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஒவ்வொரு புதன்கிழமையும் கூடிக் கலைகிறது, மணப்பாறை மாட்டுச் சந்தை. லாரிகள், வேன்கள் என நூற்றைம்பது கி.மீ. தூரத்திலிருந்து வந்து சேர்கின்றன கால்நடைகள். மாடுகளும் மனிதர்களுமாக சந்தைக்குள் ஒரு பிரத்யேக உலகம்...!


✱ ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை மதியத்திலிருந்தே, வெளியூர் மற்றும் சுற்றுப்புறங்களில் இருந்து மாடுகள் வந்து குவியத் தொடங்குகின்றன. அநேகமாக இரவுக்குள் அனைத்தும் வந்து சேர்கின்றன.

✱ மறுநாள் அதிகாலையிலிருந்து விற்பனை சூடுபிடிக்கத் தொடங்குகிறது. மாடு வாங்க வந்திருப்பவர்கள், முதல் நாள் மாலையே தாங்கள் விரும்பும் மாடுகளைப் பார்த்து விலை பேசி முடித்திருந்தாலும், பணம் தந்து குறிப்பிட்ட மாடுகளைச் சந்தையிலிருந்து வெளியே ஓட்டிக் கொண்டு போய் விட முடியாது.

✱ எப்பொழுது விலை பேசி முடித்திருந்தாலும் அந்த மாடுகளை அவர்கள், புதன்கிழமை காலை பத்து - பதினொரு மணிக்கு மேல்தான் சந்தையிலிருந்து வெளியே கொண்டு போக முடியும். (இதற்குக் காரணம் இருக்கு! அது கடைசியில்.)

✱ காளை மாடுகள், பசுக்கள், கறவைப் பசுக்கள், கன்றுக் குட்டிகள், எருமைகள் என ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு சந்தைக்கும்

மணப்பாறை



குறைந்தது ஐந்தாயிரம் மாடுகள் வருவதாகச் சொல்லப்படுகிறது. அதில் மிகக் குறைந்த எண்ணிக்கை மாடுகளே விலை போகாமல் திரும்பிச் செல்கின்றன.

* கறவைப் பசுக்கள் வாங்கிச் செல்ல வருபவர்கள் கையோடு சில்வர் அடுக்கு கொண்டு வருகின்றனர். ஏனாம்? விலை பேசி முடித்து விட்டால், சந்தையில் வைத்தே பாலைக் கறந்து விடுகின்றனர். அவர்கள் ஊருக்கு ஓட்டிச் செல்வதற்குள் மடி கனத்து, பசுவுக்கு முடியாமல் போய்விடுமாம்!

* காளை மாடுகளுக்கும் நல்ல கிராக்கி. ஐம்பதாயிரம் ரூபாய் வரை விலை ஆகிற காளை மாட்டு ஜோடிகள் சந்தைக்கு வருகின்றன.



* சின்னசாமி

* "காளை மாடோ, கறவை மாடோ... அதுகளை ஜோடனையா கொண்டாந்து நிப்பாட்ட சில 'ஐடியா' செய்ஞ்சு சந்தைக்கு ஓட்டி வர்றவங்களும் உண்டு. ஆனா, மாடு வாங்கி விக்கறதுல அனுபவப்பட்ட ஆளுங்ககிட்ட அந்த 'டகால்ட்டி' பலிக்காது!" என்கிறார் கண்ணூத்து கிராமத்திலிருந்த வந்திருக்கும் சின்னசாமி.

* "சமயத்துல திருட்டு மாடுங்க சந்தைக்கு வந்துடும். பம்மிக்கொண்டாந்த

மாடு கட்டி...!





* சந்திரன்

மாடுகளை எப்படிக் கண்டுபிடிக்கறது? காணாமப் போன மாடுகளோட சொந்தக்காரங்க நேரா சந்தைக்கு வந்துருவாங்க. யார்கிட்டேயும் சொல்லிக்காம தேடி அலசுவாங்க. கொஞ்ச நேரத்துல மாடும், திருடனும் அம்புட்டுடுவாங்க. திருட்டு மாடுங்களைக் கண்டுபிடிக்கத்தான், மொத நாளு மத்தியானத்துலேருந்து வர்ற மாடுகளை மறுநாள் மத்தியானம் வரைக்கும் சந்தையை விட்டு வெளியே கொண்டு போகக் கூடாதுனு தடை விதிச்சிருக்கு!'' எனச் சொல்கிறார் அனியாப்பூர் கிராமத்தின் மாட்டுத் தரகர் ரெங்கசாமி.

* ''பன்னெண்டு ஏக்கர் விவசாயம் கிராமத்துல. தோட்டத்துல ரெண்டு வயசு காளைக் கன்னு சிங்கிளா நிக்குது. ஏரு பூட்டி இழுக்க, அதுக்கு ஜோடி சேர்க்க, காளைக் கன்னு தேடி, நானும் தொடர்ந்து நாலு வாரமா வந்து போறேன். அதுக் கேத்த ஜோடி கிடைக்கலை. நம்பளுக்கு டிராக்டர் சொந்தமா இருக்கு. எல்லா எடத்துலயும் டிராக்டர் கொண்டு போயி உழுதுட ஏலாது.



* ரெங்கசாமி

டிராக்டர் விட்டு ஓட்டுனா வயல்ல நாலு இஞ்சுக்குக் கீழே இறங்காது. உழவு ஏரு அப்படியில்ல. வயல்ல முக்கால் அடிக்கும் கீழேயே நல்லா ஆழமா எறங்கும். ஆயிரம் நவீனம் வந்தாலும், ஏரு உழவு மாதிரி ஆகாது. அதுக்காகத்தான் ஜோடிக்காக காளைக் கன்னு ஒண்ணைத் தேடிட்டு இருக்கேன். மணப்பாறை மாடு கட்டி... மாயவரம் ஏரு பூட்டி... வயக்காட்டை உழுதுபோடு செல்லக்கண்ணுன்னு பழைய சிவாஜி படத்துல பாடுனது, வார்த்தை ஜாலம் இல்லீங்க. அது வாழ்க்கைப் பாட்டு!'' எனக் கூறுகிறார் கோவில்பட்டி கிராம விவசாய இளைஞர் சந்திரன்.



ஏற்றுமதி வணிகத்தில்...

உங்களால் லட்சங்களில் சம்பாதிக்க முடியும். ஆயிரங்களில் திருப்தியடையலாமா? உங்களது பணியில் நிறைவு ஏற்படுகிறதா? முழு/பகுதி நேரமாக ஏற்றுமதியில் ஈடுபடுங்கள். வசீகரமான முன்னேற்றத்தை வழங்கக்கூடிய

ஏற்றுமதி தொடங்க இது சரியான பொற்காலம்

கடந்த 13 ஆண்டுகளில் எங்களது 200 பயிற்சிகளின் மூலம் 8000 பேருக்கு பயிற்சியளித்து இதுவரை சுமார் 3000 பேர்களை தென்னிந்தியா முழுவதும் ஏற்றுமதியில் வெற்றியடைய வைத்திருக்கிறோம். பயிற்சி தொடங்கி மூன்று மாதங்களுக்குள் பல நூறு பேர் ஏற்றுமதியில் வெற்றியடைந்திருக்கிறார்கள். குறுகிய காலத்தில் வெற்றிபெற வைக்கும் எங்களது பயிற்சி 15 நாட்களுக்கு ஒரு நாள் வீதம் ஐந்து நாள் முழு நேரப் பயிற்சி நடைபெறும்.

பயிற்சியின் முக்கிய குறிப்புகள்

- எளிதாக லைசென்ஸ் வாங்கும் முறை
- ஏற்றுமதிக்கு அரசு வழங்கும் சலுகைகள்
- கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி வெற்றிபெறும் முறை
- ஏற்றுமதி பொருளை/நாட்டை தேர்ந்தெடுத்தல்
- இறக்குமதியாளரிடம் ஆர்டர் வாங்கும் முறை
- விலை நிர்ணயம்/பணம்/பாதுகாப்பு/தரம்
- பொருள்/நாடுகளுக்குப் பரிந்துரை
- 27.8.2009-ல் அரசு அறிவித்த புதிய சலுகைகள்

உங்களது பொருளை ஏற்றுமதி செய்யவோ அல்லது உற்பத்தியாளரிடம் வாங்கி வணிக ஏற்றுமதி செய்யவோ வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கிறது. நம் நாட்டின் பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக தேவை உள்ளது. எங்களது தொடர் பயிற்சி வகுப்புகள் கீழ்கண்ட இடங்களில் நடைபெறும்.

எங்களது பயிற்சி இடங்கள்

சென்னை	கோவை	மதுரை
(ஒன்று விட்ட ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை)	ஒன்று விட்ட ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 5மணி வரை	ஒன்று விட்ட ஐந்து வியாழக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை



NAS JEYABALEN
Course Director

பயிற்சி தொடங்கும் முன்பாக ஒவ்வொரு முறையும் அறிமுக வகுப்பு ஏற்பாடு செய்யப்படும். அது குறித்து விபரங்களுக்கு உங்களது பெயர் விலாசம் ஆகியவற்றுடன் கீழ்கண்ட மொபைல் போனுக்கு SMS அனுப்பவும்

அகிலம் பயிற்சியகம்
-வெளிநாட்டு வணிகம்-

15, கற்பகநகர்-8வது தெரு, கோ. புதூர், மதுரை - 625 007
போன்: 94433 45068 / 93605 48776

இந்தியாவின் முதல்தர ஏற்றுமதி வணிகப் பயிற்சியகம்

ரத்திகா கவிதைகள்



மணிமுள்ளும் சில நொடிகளும்

மணி முள்ளைப்போல் சலனமின்றி
நகர்ந்துகொண்டிருந்த என் நாட்களுள் ஒன்றை
உன் மழைச் சொற்களால் பறித்தாய்

அந்நாளின் ஒவ்வொரு நொடியையும்
பனிக் கால குளிர் நீரில் அமிழ்த்தி
உன் வெப்ப நொடிகளால் துவட்டி
கதகதப்பூட்டி அணைத்துக் கொண்டாய்

என் குளிர்ந்த நொடிகளும்
உன் வெப்ப நொடிகளும்
எந்த நாள்காட்டியிலும் இல்லாத
புதிய நாளொன்றை ஈன்றது.



நம்முடன் வைத்துக்கொள்ள முடியாத
அந்த உன்னத நாளை
ஆற்றில் மிதக்கவிட்டு
நம்மை விலக்கிக் கொண்டோம்.

எந்த நாளுடனும் இணைய முடியாத அந்த நாள்
சாத்தப்பட்ட உன் வீட்டின் கதவுகளை
ஆன்மா சாந்தியடையாத ஆவியைப்போல்
பின்னிரவில் தட்டிக்கொண்டே இருப்பதாகச் சொன்னாய்

எனக்குப் புரியவில்லை
ஒரே ஆவி
ஒரே நேரத்தில் இருவீட்டுக் கதவுகளையும்
எப்படி தட்டுமென்று!



ஈரங்காத்தல்

என் அன்பில்
சொட்டச் சொட்ட நனைந்து
வெளியேறி
எங்கோ தலை துவட்டிக் கொள்ளும்
உன் பேரன்பின் வலியுணர்வேன்
நகக்கண்களுக்கிடையே சிக்கிக்கொண்ட
மணல் துகள்களை
குண்டூசியால் அகற்றுவதைப்போல்
பிரிவின் கணங்களை
வெளியேற்றிக் கொண்டிருக்கிறேன்.

கடலும் துளியும்

பல கடல்களைத் துளிகளென
உதறிவிட்டுக் கடந்துவிடுகிறது
காலமும் அதன்பின்னே மூச்சிரைக்க ஓடும் வாழ்வும்

சில துளிகளைக் கடல்களென
சுமந்து வதைபடுகிறது
அருவ மனம்

மனதுக்கும் வாழ்வுக்கும் இடையே
நிரப்பப்பட்டிருக்கும்
கேளா ஒலியலைகளின் மீது
மோதி மோதி உயிர் துறக்கின்றன
மனித வெளவால்கள்

ராஜ(கோபுர) நெரிசல்!



ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்தின் அடித்தள கோபுர பீட விரிசல்களையும், அதன் சுற்றுப் பகுதி ஆக்கிரமிப்புகளையும் அகற்ற உடனடி நடவடிக்கைகள்... தேவை என்கிற குரல் பொது மக்கள் மத்தியில் ஒலிக்கத் துவங்கியுள்ளது! விரிசல்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் குறித்து நிர்வாகம் கண்டுகொள்ளாமல் இருப்பது அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ராஜகோபுரத்தின் மொத்த உயரம் இருநூற்று முப்பத்தாறு அடி. 1979 வரைக்கும் மொட்டை கோபுரம். அதன் மீது ராஜகோபுரம் கட்டப்பட வேண்டுமென 20.5.1979ல் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. எட்டு ஆண்டுகளில் முடிக்கப்பட்டு 1987ல் ராஜகோபுர குடமுழுக்குப் பெருவிழா.

''ராஜகோபுரம் கட்டப்படுவதற்கு முன்பாகவும், கட்டிக் கொண்டிருக்கும் போதும் அதன் மொத்த உயரம், மொத்த எடை குறித்தெல்லாம் கணக்கீடு செய்து பழைய மொட்டை கோபுரம் தாங்கி நிற்குமா என்றெல்லாம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், கட்டிக் கொண்டிருக்கும்போதும், கட்டி முடித்த பின்னரும் முக்கிய நுழைவாயிலான நெடிதுயர்ந்த (பழைய மொட்டை கோபுர) கீழ் பீடங்களில் ஆங்காங்கே விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. பொறியியல் துறையினர் விரிசல்களில் fibre glass துண்டுகளைப் பொருத்தி இருபுறங்களிலும் ஆணிகள் அடித்து வைத்தனர். அதற்குரிய எண்களையும் பெயின்டால் அதனருகே எழுதியும் வைத்தனர் என்பது உண்மைதான்'' என்கின்றனர் ஸ்ரீரங்க வாசிகள்.

''நுழைவாயில் கோபுரம் அருகே நின்று பார்த்தாலே 'பளிச்' எனத் தெரிகின்றன விரிசல்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு இது சம்பந்தமாக துறை அதிகாரிகள் ஆய்வுகள் மேற்கொண்டனர் என்றாலும், ராஜகோபுர நுழைவாயிலின் இருபுறங்களிலும் அத்துமீறிய ஆக்கிரமிப்புகள் கால தாமதம் இல்லாமல் உடனே அகற்றப்பட வேண்டும். நுழைவாயிலின் அருகே மேற்குப் பகுதியில் இருந்துவரும் ஒரு ஹோட்டல், தற்போது இராஜகோபுரத்துடன் சிமெண்ட் கான்கிரீட் கட்டிடமாக இணைத்தே கட்டப்பட்டுள்ளது. இதனை நிர்வாகம் எப்படி அனுமதித்து வருகிறது என்றே தெரியவில்லை!'' என்கிறார் ஸ்ரீரங்கம் சிட்டிசன்ஸ் அசோசியேஷன்ஸ் தலைவர் ஆர்.சுரேஷ்.

''ராஜகோபுர அடி பீடத்தில் எத்தனை இடங்களில் விரிசல்கள் எனத் தெரிவிக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்ட விரிசல்கள் மீது ஒட்டப்பட்ட கண்ணாடித் துண்டுகள் பலவும் தற்போது அகற்றப்பட்டுள்ளன. அதற்கான ஆணிகள் மட்டுமே அங்கு இருக்கின்றன. அப்படியெனில் அந்த விரிசல்கள் மேலும் விரிவடைந்து வருகின்றனவா என்பதும் தெரியவேண்டும். ஒரு கட்டுமானத்தின் (பழைய) மீது, புதிதாக இன்னொரு கட்டுமானம் ஏற்படுத்தும்போது உண்டாகும் விரிசல்களை செட்டில்மென்ட் க்ராக் (settlement crack)எனப் பொறியியல் துறையினர் கூறுகின்றனர். ஆனால், அவை மேலும் விரிவடையாமல் இருக்க அதன் இடைவெளியில் (lead apply) ஈயம் ஊற்றினால் விரிசல்கள் கெட்டிப்படும் எனவும் கூறப்படுகிறது. ஆவன செய்யுமா கோயில் நிர்வாகம்?'' எனக் கேட்கிறார் அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளையின் விஜயகுமார்.

அவர் முகத்தைப் பார்க்கவே எனக்குக் கூச்சமாய் இருந்தது. மனிதர் இத்தோடு நாலாவது தடவையாக வருகிறார். கொஞ்சங்கூட அலுப்பில்லாமல்.



''ஒங்க ஃபோன் நெம்பர் கொடுத்துட்டுப் போங்க ஸார்... நான் தகவல் சொல்றேன். பாவம்... எத்தனை தடவை வருவீங்க...''

துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''பரவாயில்லை.''

சற்றுத் தயங்கிவிட்டு, குடிக்க தண்ணீர் கேட்டார். என் இரண்டாவது பெண்ணிடம் ஜாடை காட்டினேன். உள்ளே போய் சொம்பில் நீருடன் வந்தாள்.

வர மாட்டான்னு தெரிஞ்சா... வேற யாரையாச்சும் குடி வச்சிருவேன். போய் விளையாட்டு போல ரெண்டு வாரத்துக்கு மேல ஆச்சு. ஒரு தகவலும் இல்ல. பூட்டை உடைக்கவும் யோசனையா இருக்கு.''

என்னையும் மீறி என் குரலில் லேசான கோபம் தெரிந்தது.

''ஆபீஸ் வேலையா போயிருக்காரா?''

''தெரியல ஸார். நான் அவ்வளவா அவன்கூடப் பேசறது இல்ல... வாடகை கூட என் மிசஸ் கையில கொடுத்துருவான்... சமயத்துல என் பொண்ணுக்கு ஏதாச்சும் திங்கறதுக்கு வாங்கி வந்து கொடுப்பான்... எப்ப போறான்... எப்ப வர்றான்னு தெரியாது... ஆனா அவனால

எட்டுத் திக்கும்...

''என்னம்மா இது... டம்ளர் இல்லாம எப்படி குடிப்பாரு?''

''பரவாயில்ல... எனக்கு அவ்வளவு தண்ணியும் வேணும்.''

மடமடவென்று குடித்துவிட்டுக் கீழே வைத்தார். சட்டைப் பையிலிருந்து ஒரு சாக்லேட்டை எடுத்து என் பெண்ணிடம் நீட்டினார்.

''லோ ஷுகர்... எப்பவும் கையில வைச்சிருப்பேன்'' கேட்காமலே காரணமும் சொன்னார்.

''தேங்க்ஸ்'' முனகி விட்டுப் போனாள்.

''ரூம் பூட்டியே வச்சிருக்கா?''

''ஆமா... என் பிரச்னை என்னன்னா... அவன் திரும்பி



ஒரு பிரச்னையும் இல்லங்கிறதால நானும் கண்டுக்கல.''

வந்தவருக்கு எப்படியும் வயது அறுபதுக்கு மேலிருக்கும். ஓய்வு பெற்றவராய் இருக்கலாம்.

''ஆமா... நீங்க எதுக்குத் தேடறீங்க?''

சொல்லலாமா, வேண்டாமா என்கிற போராட்டம் கண்ணில் தெரிந்தது.

''எனக்கு மூணு பொண்ணுங்க. மூத்ததைக் கட்டிக் கொடுத்தாச்சு... இப்ப ரெண்டாவது வரன் தேடறேன். மணமகன் தேவைன்னு விளம்பரம் கொடுத்ததைப் பார்த்து இந்தப் பையன் லெட்டர் போட்டாரு. நாங்களும் பதில் போட்டோம். எப்ப பொண்ணு பார்க்க

வர்றீங்கன்னு... ஒரு மாசமாச்சு. பதிலே இல்லை. அதான் நேர்ல பார்த்து (வி)சாரிச்சுட்டுப் போலாம்னு வந்தேன்.''

''நியாயம்தான்.'' இந்தமுறை என் குரலில் கொஞ்சம் அக்கறை இருந்தது.

''கட்டாயம் அவர் வந்த உடனே நீங்க வந்திட்டுப் போனதா சொல்றேன்.''

அவர் எழுந்துபோனது அரைமனதாய்த்தான் இருந்தது. விட்டால் அவன் வரும் வரை இங்கேயே உட்கார்ந்திருப்பார் போல.

அவர் போனதும் சுகுணா சொன்னாள்.

''இவ்வளவு நாள் சொல்லாம போனது இல்லீங்க. அந்தப் பையன் ஆபீஸ் நெம்பர் தெரிஞ்சா விசாரிக்கலாமே.''

''தெரியாதே...''



அன்று மாலையே அவன் ஆபீஸிலிருந்து ஆள் வந்துவிட்டது.

''சரவணன் இங்கேதானே இருக்காரு?''

''ஆமா, நீங்க?''

''கம்பெனிலேர்ந்து வர்றோம். ரொம்ப நாளா ஆபீஸுக்கு வரல. என்னன்னு பார்த்துட்டு வரச் சொன்னாங்க.''

''அப்ப... அவரு ஆபீஸ் வேலையா போகலியா?''

ரிஷபன்

''சரவணன் வீட்டுல இல்லியா?''

எங்கள் குழப்பம் அதிகரித்துவிட்டது.

அடுத்த பத்து நாட்களும் ஓடின. சரவணனைத்தான் காணோம். 'காணவில்லை' என்று விளம்பரம் கொடுக்கலாமா... அதை நான் கொடுப்பது சரிதானா...? பக்கத்து வீட்டுக்காரரிடம் என் கவலையைப் பகிர்ந்தபோது அவர் மேலும் பீதியைக் கிளப்பினார்.

''போலீஸ்ல சொல்லிருங்க ஸார்... குடி வச்சிருந்த ஆளைக் காணோம்னா அப்புறம் வேற ஏதாச்சும் பிரச்னை ஆகிடப்

போவுது.''

''கொஞ்சம் நீங்களும் கூட வர்றீங்களா?''

உள்ளிருந்து ஏதோ குரல் கேட்டது.

''வரலாம். ஆனா நான் அர்ஜெண்டா ஒருத்தரைப் பார்க்கப் போகணும்.''

''சரி ஸார்.''

கருணாவும் அதை ஆமோதித்தாள்.

''என்ன பயம்... தைரியமா போங்க. போலீஸ்ல சொல்றதுதான் சரின்னு எனக்குப் படுது.''

போனேன். உட்காரச் சொன்னார்கள். முதலில் ஒருவர் என்ன விஷயம் என்று கேட்டார். மறுபடி உட்காரச் சொல்லி பத்து நிமிடங்கழித்து இன்னொருவரிடம் அதே கதை. மீண்டும் அமர்வு. கடைசியாய் இன்ஸ்பெக்டர்.

''ம்ம்...'' யோசித்தார்.

''இப்ப சொன்னதை எழுதிக் கொடுங்க.''

நல்லவேளையாகப் பேப்பரும் பேனாவும் எடுத்துக்கொண்டு போயிருந்தேன். கருணாவின் ஆலோசனை!

''என்ன தேதிலேர்ந்துன்னு சொன்னீங்க?''

சொன்னேன்.

''ஹாஸ்பிடல்லாம் செக் பண்ணீங்களா?''

''எ...எதுக்கு?''

''அடையாளம் தெரியாத பாடி...''

''வ...ந்து... நான் எப்படி... வீட்டு ஓனர்... அவர் குடி இருக்கறவர்...''

''சரி...சரி, போங்க... பார்க்கலாம்.''

இரண்டு நாட்கள் கழித்து ஒரு போலீஸ்காரர் வந்தார்.

''ஜி எச் வரைக்கும் போயிட்டு வரலாம்... வாங்க ஸார்.''

ஆட்டோவில் போனோம். வழியில் மக்கடை.

மார்ச்சுவரியில் குப்பென்று குளிர் காற்று முகத்தில் அறைந்தது. அடி வயிற்றைப் புரட்டிக்கொண்டு வந்தது.

''இவரு சொந்தக்காரவுங்களா?''

''ஊட்டுல குடி இருக்கறவரு...''

அவர்கள் சம்பாஷணை எனக்கு ரசிக்கவில்லை. சரவணன் இருக்கப் போவதில்லை. அதற்குள் இவர்கள் அவன் போனதாகவே முடிவு எடுத்து...

''ரோட்டுல அடிபட்டுக் கிடந்தாரு... யாரும் கேட்டு வரலை. பின் தலையில அடிபட்டு... ஸ்பாட்லயே உயிர் போயிருச்சு. ஆமா... என்ன வயசிருக்கும். உங்க சொந்தக்காரருக்கு?''

''சொந்தமில்லப்பா.''

புலிவலம்... புலிவலம்...



திருச்சியிலிருந்து துறையூர் செல்லும் சாலையில் இருக்கிறது புலிவலம் தர்க்கா. எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு நவாப்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்த தர்க்காவில் முகைதீன் ஆண்டவர் வழிபாடு செய்திருக்கிறார். அப்போது காட்டிலிருந்து வந்த புலி அவரைச் சுற்றி வந்து வழிபட்டதாம்! அதனாலே இவ்வூருக்குப் புலிவலம் என்று பெயர் வந்தது என்கிறார்கள்.

- எஸ்.கந்தசாமி

''சரி... ஏதோ ஒண்ணு... வயசு என்ன?''

''முப்பதுக்குள்ள.''

''முப்பதா... இது பெருசாச்சே.''

ஹப்பாடா... அது சரவணன் இல்லை. எனக்குள் நிம்மதிப் பெருமூச்சு.

''அப்ப போயிடலாமா?''

போலீஸ்காரர் யோசித்தார்.

''அப்படிங்கிறீங்க?''

அதே நிமிடம் மார்ச்சுவரி வாசலில் ஏதோ சத்தம் கேட்டது.

''யாரு?''

''நான்தான் ஸார். வீட்டுல சொன்னாங்க. உடனே ஓடியாந்தேன். அம்மாவுக்கு உடம்பு சீரியஸாப் போச்சு. ஊருக்குப் போன நேரத்துல... என் தப்புதான் தகவல் சொல்லாமவிட்டது. அப்புறம் ஆபீஸுக்கும் சொல்லிட்டு... இப்ப வீட்டுக்கு வந்தேன்.'' - சரவணனுக்கு மூச்சிரைத்தது.

''டென்ஷன் பண்ணிட்டப்பா...''

''ஸாரி ஸார்.''

''அம்மா எப்படி இருக்காங்க?''

''வீட்டுக்குக் கூட்டி வந்தாச்சு ஸார்... ஒரு லட்சம் போல போயிருச்சு...''

போலீஸ்காரர் அதட்டினார்.

''கதை பேசற இடமா இது?''

''அப்ப பாடியைப் பார்க்கலியா?'' மார்ச்சுவரி வாட்ச்மேன் கேட்டார்.

''என்ன பாடி?''

''நீ காணோம்னதும் போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் கொடுத்து...''

தடுமாறினேன் எப்படிச் சொல்வதென்று.

''ஸாரி ஸார்'' என்றான் மீண்டும்.

''முகத்தை மூடிருப்பா'' என்றார் போலீஸ்காரர்.

தற்செயலாகத் திரும்பினேன்.

''கொஞ்சம் இரு.''

அங்கே விறைத்துப் போயிருந்த உடல்... சரவணனைப் பார்க்க வந்த அதே பெரியவர்! ⊙

சுற்றிலும் மதில் சூழ்ந்த ஒரு விசாலமான தோட்டத்தின் முன் பகுதியில் நாலு சின்னஞ்சிறு வீடுகள் ஒரே மாதிரியாகக் கட்டப்பட்டிருந்தன. யாரோ முதலாளி அந்த வீடுகளை வாடகைக்கு விடுவதற்காகவே கட்டியிருக்க வேண்டும் என்று பார்த்தவுடனே தெரிந்தது. அவற்றில், நேற்று மனோன்மணி சுட்டிக்காட்டிய வீட்டை நினைவுபடுத்திக் கொண்டு சந்திரசூடன் அங்கே சென்றான்.

அந்த வீட்டின் வாசலில் கைவண்டி ஒன்றில், ஒரு குழந்தை உட்கார்ந்திருந்தது. கையில் ஒரு பொம்மையை வைத்துக்கொண்டு அதனுடன் பேசி விளையாடிக் கொண்டிருந்தது. இலட்சணமான குழந்தை; பிராயம் நாலு இருக்கும். சந்திரசூடனுக்குக் குழந்தைகள் என்றால் அவ்வளவாகப் பிரேமை இல்லைதான். குழந்தை குலத்தின் எதிரி என்றுகூட அவனைச் சொல்லலாம். ஆயினும் இந்தக் குழந்தையிடம் ஏதோ ஒரு தனிக் கவர்ச்சி அவனை இழுத்தது. போகும் வழியில் ஒருகணம் நின்று, ''என்ன, பாப்பா! என்ன சேதி?'' என்றான்.

குழந்தை அவனை நிமிர்ந்து பார்த்து, ''என்ன மாமா! என்ன சேதி?'' என்று சொல்லிப் புன்னகை புரிந்தது.

''நீ ரொம்ப சமர்த்துப் பாப்பாவா யிருக்கயே?'' என்றான் சந்திரசூடன்.

''நீங்க ரொம்ப



வண்ணத் தூரிகை

அமரர் கல்கி

சிநேக வித்தை!

சமர்த்து மாமாவாயிருக்கேளே?'' என்றது குழந்தை.

''பலே! பலே!'' என்றான் சந்திரசூடன்.

''சபாஷ்! சபாஷ்!'' என்றது குழந்தை.

இதையெல்லாம் உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டே மனோன்மணி வெளியே வந்தாள். அவள் முகமலர்ச்சி, உள்ளத்தின் உவகையைக் காட்டியது.



''வாருங்கள், வாருங்கள்! ராஜ்மோகனுக்கு உங்களைப் பிடித்துப் போயிருக்கிறது. அதென்னமோ, சில பேருக்குத்தான் குழந்தைகளுடன் சிநேகமாயிருக்கும் வழி தெரிகிறது. வேறு சிலரைக் கண்டாலே குழந்தைகள் அலறத் தொடங்கி விடுகின்றன!'' என்றாள் மனோன்மணி.

''ஆமாம்; குழந்தைகளுடன் சிநேகம் பிடிப்பது ஒரு தனி வித்தைதான்!'' என்றான் சந்திரசூடன்.

வீட்டின் முன்புறத்தில் இருந்த சிறிய தாழ்வாரத்தில் இரண்டு பிரம்பு நாற்காலிகள் இருந்தன. அவற்றில் ஒன்றைக் காட்டி, ''உட்காருங்கள். இதோ நீங்கள் கொடுத்த பத்திரிகையைக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மனோன்மணி உள்ளே சென்றாள்.

- 'புன்னைவனத்துப் புலி' கதையிலிருந்து...

சத்தமில்லாத சாதனை!

ச.ந. கண்ணன்

டாக்காவில் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த குடியரசுக் கோப்பை இறுதி ஆட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணி முதல் முறையாக 300 ரன்களைக் கடந்த ஒரு ஸ்கோரைத் தொட்டு வெற்றி பெற்ற போது அந்த ஆட்டத்தைப் பார்த்த அனைவருக்கும் சில்லிட்டது. இரண்டு பந்துகளில் மூன்று ரன்கள் என்கிற நிலையில் ஷாக்லைன் முஸ்டாக்கின் பந்தை மிட்விக்கெட்டுக்கு விசிறி அடித்தார் கனிட்கர். பந்து பவுண்டரியைத் தாண்டும் முன்னரே இந்திய ரசிகர்கள் திமிறிக் கொண்டு மைதானத்துக்குள் நுழைந்தார்கள். அதுதான் தொடக்கம். இன்று ஒரு நாள் போட்டியில் அதிக முறை 300க்கு அதிகமான ரன்களைக் கடந்த அணி என்கிற பெருமை இந்தியாவுக்கே.

கிரிக்கெட்டின் பரிணாம வளர்ச்சிக்குச் சிறந்த உதாரண ஆட்டம் கொல்கத்தாவில் இந்தியா - இலங்கை யிடையே நடந்த நான்காவது ஒரு நாள் போட்டி. இலங்கை அணி 315 ரன்கள் எடுத்திருந்தது. இந்தியா பேட் செய்யும்போது நான்கு ஓவருக்குள் சச்சின், ஷேவாக் விக்கெட்டைப் பறிகொடுத்திருந்தது. அணியில் யுவ்ராஜ், தோனி கிடையாது. கம்பீர், கோலி, தினேஷ் கார்த்திக், ரவீந்திர ஜடேஜா என்று மீசை முளைக்காத ஆட்கள்தான் மிச்சம் இருந்தனர். இப்படியொரு சூழலில் இந்தியா 300 ரன்களைக் கடந்ததே கிடையாது. ஆனால் அன்று கம்பீரும் கோலியும் தோட்டத்தில் பூக்கள் பறிப்பதுபோல எந்த நடுக்கங்களும் இல்லாமல் வெற்றிக்கோட்டை நெருங்கியது



கிரிக்கெட்டின் சமகாலத்தன்மையை நன்கு உணர்த்தியது.

20-20 கிரிக்கெட்டின் தலையெழுத்தை மாற்றி எழுதிக்கொண்டிருக்கிறது. 20 ஓவர்களில் 160 ரன்கள் என்கிற ஓர் இலக்கே சுலபமாகிவிட்டதால் ஒரு நாள் போட்டியிலும் அந்தத் தைரியம் தொடர்கிறது. முதல் ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி இந்தியாவின் 400 சொச்ச ரன்களுக்கு அருகே வந்து தோற்றது நல்ல உதாரணம்.

இங்கே கம்பீரைத் தனியே குறிப்பிட வேண்டும். சச்சின், திராவிட் போல அணியில் நீடித்து நிலைக்கக் கூடிய திறமையும் பண்பும் கம்பீரிடம் இருக்கிறது. உலக அளவில் தொடர்ந்து ரன்கள் குவித்துக் கொண்டிருப்பது கம்பீர் மட்டுமே. அதனால் ஜாம்பவான்களின் பேட்டையான டெஸ்ட்டில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறார் கம்பீர். கொல்கத்தா ஆட்டத்தில் 100 ரன்களைக் கடந்த பிறகும்கூட வெற்றி ரன்னை அடிக்கும்வரை ஜென் துறவிபோல சலனமில்லாமல் ஆடிக் கொண்டிருந்தார் கம்பீர். சச்சின், திராவிட், ஷேவாக், லக்ஷ்மண், யுவ்ராஜ், தோனி ஆகிய பெரிய தலைகள் உள்ள ஓர் அணியில் அத்தனை பேரையும் தாண்டி முந்திச் செல்வது சாதாரண காரியமல்ல. கம்பீர் அதைச் சத்தமில்லாமல் செய்து கொண்டிருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் அணி தொடர்ந்து பெரிய பெரிய உயரங்களைத் தொட்டுக் கொண்டிருப்பதால்தான் டெல்லி பிட்ச் தொடர்பான குழப்பங்களும் சாடல்களும் இந்திய கிரிக்கெட்டைத் துளிக்கூடப் பாதிக்காமல் இருக்கிறது. ●



ஷேக்கிங் சைக்காலஜி!

கார்ப்பரேட் உலகில் ஹேண்ட் ஷேக் என்பதற்கு ஒரு தனி இடம். தோழமை உணர்வு, மரியாதை, நாகரிகம், சந்தோஷம், உற்சாகம்... என பலவித கலவைதான் 'ஹேண்ட் ஷேக்'! நீங்கள் எவ்வளவு கான்ஃபிடன்ட், உங்



கள் பர்ஸனாலிட்டி, உங்கள் குணம்... இவற்றை ஹேண்ட் ஷேக்கை வைத்து எடைபோட்டு விடுவார்கள்.

ஹேண்ட் ஷேக் ஒரு ஆர்ட். இதற்கென சில விதிமுறைகள் உண்டு. ரூல்ஸ் என்னென்ன என்பதைப் பார்ப்போமா...

★ நீங்கள் ஒருவரிடம் கைகுலுக்குவதற்குக் கையை நீட்டும் முன்னால் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும். மௌனமாகக் கைகுலுக்குவதில் அர்த்தமேயில்லை. வெறும் ஹேண்ட் ஷேக் என்பது நீங்கள் நெர்வஸ் அல்லது மிகவும் ஆக்ரோஷக்காரர் என்ற தோற்றத்தை உண்டுபண்ணுமாம்.

★ பிஸினஸ் ஹேண்ட்ஷேக் என்பது ஷார்ட்டாக இருக்க வேண்டும். எதிராளியின் கையைப் பிடித்துக் கொண்டு விட்டேனா பார் என்ற லெவலில் கைகுலுக்கல் இருக்கக்கூடாது. மூன்று அல்லது நாலு செகண்டுக்கு மேல் ஹேண்ட் ஷேக்கினால் எதிராளி ஷேக்காயிடுவார்.

★ ஒருவருக்குக் கைகொடுக்கும்போது அதில் நட்பு, மரியாதை இரண்டும் கலந்திருக்க வேண்டும். உங்களுடைய பலத்தைக் காண்பிக்கக் கூடாது. மென்மையான ஸ்பரிசம் இருக்கட்டும்.

★ அதே சமயம் கை நடுங்கவும் கூடாது. ஒரு க்ரிப் இருக்க வேண்டும். பிஸினஸ் ஹேண்ட் ஷேக்கில் கான்ஃபிடன்ட் கைகுலுக்கல் மிக முக்கியம். நடுங்கக் கூடவே கூடாது!

★ ஓவராக உணர்ச்சிவசப்பட்டு பரவச மிகுதியில் இரண்டு கைகளாலும் ஹேண்ட்

உடையழகு... நடைபழகு

ஷேக் செய்யப் பார்க்காதீர்கள். பிஸினஸ் மீட்டிங்கில் ஒரே கை... அதுவும் வலது கையால் ஹேண்ட் ஷேக் பெஸ்ட். இரு கைகளாலும் ஹேண்ட் ஷேக் செய்வதற்கு 'அரசியல்வாதிகளின் ஷேக்' என்று பெயர். ஏனென்றால் அது போலி நட்பைக் குறிக்கும் ஒரு செயல். முன்பின் தெரியாத நபரிடம் விழுந்து விழுந்து நட்பைக் காண்பிக்கும்போது உங்களை ஒரு போலி மனிதராகக் காண்பிக்கும்.

★ பலருக்கு உள்ளங்கை வியர்த்திருக்கும். ஹேண்ட் ஷேக் செய்துவிட்டு முகத்தைச் சுளிக்காதீர்கள். உடனேயே கர்சீப், டிஷ்யூ பேப்பர் எடுத்துத் துடைக்காதீர்கள். எதிராளியின் முகம் கண்டிப் போகும். நாசூக்காகச் செயல்படுங்கள்.

★ ஏதேனும் தவறு நடந்துவிட்டாலும் தடுமாறாதீர்கள். க்விக்காடாபிக்கை மாத்திப் பேச ஆரம்பித்து விடுங்கள்.

★ ஒருவருக்குக் கைகொடுக்கும்போது நின்றுகொண்டிருக்க வேண்டும். உட்கார்ந்து அல்லது நடந்து கொண்டே நோ ஹேண்ட் ஷேக்.

★ புன்சிரிப்புடன், கண்ணோடு கண் பார்த்தவாறே கைகுலுக்கவும். எதிராளிக்கும் ஒரு நிம்மதி வரும், நம்மைச் சந்தித்ததில் இவருக்கு மகிழ்ச்சியே என! கடுகடு முகத்துடன் ஹேண்ட் ஷேக் பண்ணாதீர்கள்.

★ ''ப்ளெஷர் டு மீட் யூ'' அல்லது 'குட்மார்னிங்', 'குட் ஆஃப்டர்நூன்', 'ஹெள ஆர் யூ'... என்று கேட்டவாறே ஹேண்ட் ஷேக் செய்யவும். மிஸ்டர், மிஸ், மிஸஸ்... என்று பெயருடன் சேர்த்து கண்டிப்பாகச் சொல்ல வேண்டும்.

★ முதன்முதலாகப் பார்க்கும்போதும் சரி, கடைசியாக விடைபெறும்போதும் சரி, ஹேண்ட் ஷேக் மஸ்ட். மேற்கத்தியக் கலாசாரம் என்று யாரும் சொல்வதில்லை.

★ கார்ப்பரேட் உலகின் இன்னொரு பிரபலமான சொல் 'கோல்டன் ஹேண்ட் ஷேக்'. ஒருவரை வேலையை விட்டுப் போகச் சொல்லும்போது, சுமுகமான முறையில் பணிநீக்கம் செய்வதுதான் கோல்டன் ஹேண்ட் ஷேக்.

★ பெண்களுக்கு ஹேண்ட் ஷேக் செய்யும்போது கவனம்! நீங்கள் முதலில்



கையை நீட்டக் கூடாது. லேடீஸ் ஃபர்ஸ்ட். அவர்களுக்கு விருப்பம் இருந்தால் மாத்திரமே ஹேண்ட் ஷேக் பண்ண வேண்டும். முரட்டுத்தனமாகச் செயல்படாதீர்கள்.

ஸ்வீட்டா... ஸ்டைலா... ஸ்மார்ட்டா தோற்றமளிக்க வாரா வாரம் நடைபழகிய இந்தப் பகுதியைக் கைகுலுக்கி நிறைவு செய்கிறோம்.

வெல்கம்/குட்பை இரண்டுமே ஒரு ஹேண்ட் ஷேக்கில்தானே இருக்கிறது.

- லதா சேகர்



● ராமசுந்தரி, திருச்சி
எங்க ஊர் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி மீது ஒரு பாடல் சொல்ல முடியுமா...?

திருவானைக்கா போனபோது சன்னிதியில் அகிலாண்டேஸ்வரி வெண்பா சொல்ல வைத்தாள்...

''தேனைக்கால் ஏந்தி திரிகின்ற
வண்டேபோல்
ஊனைக்கால் தாங்க உலகுற்று -
'நானை'ப்போய்
பானைத்தோல் மேனியாய் பாவிக்கா
பேரறிவை
ஆனைக்கா அம்மா அருள்...''

● வெ.ராம்குமார், வேலூர்
பெண்களை மயக்கி வசப்படுத்தும் ராகம் ஏதேனும் உண்டா சார்?

வசப்படுத்த 'வசந்தா'... ஆலாபனை செய்யும்போது மேல் பஞ்சமத்துக்குப் பதிலாக, ஃபீமேல் பஞ்சமத்தில் சஞ்சாரியுங்கள். அவரோகணம் ஆகிவிடுவாள் அவள். உங்களுக்கு அகாடமியில் 'பெண்கித கலாநிதி' பட்டம் கிடைக்கும்.

● ஆர்.செண்பகவல்லி,
ஸ்ரீவில்லிப்புத்தூர்
காற்றுகூட புக முடியாத இடத்தில், புகுவது எதுவோ?

காற்றின் மைந்தன். இந்திரன், வருணன், வாயு போன்றவர்கள்கூட புக முடியாத இடமாக இருந்தது இராவணின் இலங்கைக் கோட்டை.. காற்று அதாவது வாயு புக முடியாத இடத்தில் வாயு மைந்தன் அனுமன் புகுந்தான்!

● ரேவதி, அரக்கோணம்
நடுத்தர வயதுப் பெண்கள் தங்கள் வயதைக் குறைத்துச் சொல்கிறார்களே... ஏன்?

அது ஒருமாதிரி ஆன்ட்டி(aunty) சென்ட்டிமென்ட்!

● தமிழரசி, பெங்களூர்
ஞாபகம், மறதி... விளக்கம் ப்ளீஸ்?

ஞாபகம் தாக்கும் கூர்வாள்... மறதி காக்கும் மழுங்கிய கேடயம்!

● வி.ஜி.சத்தியநாராயணன்,
நங்கநல்லூர்
அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்று ஏன் சொல்லப்பட்டது?

அதிர்ஷ்டம் கதவைத் தட்டிக் கொடுக்கும். ஆனால் அன்பு கதவை உடைத்துக் கொடுக்கும்.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை
அற்புதமான கண்டுபிடிப்பு எது?

'கண்டேன் சீதையை'!

● லதா, விழுப்புரம்
உங்களுக்கு விருப்பமான ஆடை எது?

'Puri'ணாடை!

● ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி
பக்க வாத்தியங்கள் இருக்க... பாகவதர் பாடும்போது தொடை மீது தாளம் போடுவது ஏன்?

அவருக்கு thigh பினந்தால்தான் இசை பிறக்குமோ என்னவோ!

பெண்களை



வசியப்படுத்தும் ராகம்!

அடடே...
ஆட்டோ பாபு!

"அய்யா நாங்க அசலூருங்க. ஒரு விஷயமா வீரப்பூர் முன்னாடி இருக்கற உடையாபட்டி கிராமத்துக்குப் போகணும். நாங்க நாலு பேரு, ரொம்ப கேட்காம என்ன வாடகைக்கு வர முடியும்னு பார்த்துச் சொல்லுங்க!'' என்கிறார் ஒருவர். அந்த நால்வரையும் பார்க்கிறார் ஆட்டோ டிரைவர். "கொண்டு போய்விட மட்டும் நூத்தைம்பது ரூபா ஆகும்ங்க. பஸ் ஸ்டாண்ட் உள்ளே போனீங்கன்னா, இன்னும் பத்து நிமிஷத் துல அந்த உடையாபட்டி போற பஸ் வந்துடும். உங்க நாலு பேருக்கும் பஸ் சார்ஜ் பத்து ரூபாதான் ஆகும்!'' தன் கைவச மிருக்கும் மினி பஸ் கால அட்டவணையை எடுத்துப் பார்த்துப் பதில் சொல்கிறார் ஆட்டோ டிரைவர்.

மணப்பாறை பேருந்து நிலையம் அருகே, ஆட்டோ ஸ்டாண்ட் பாபு (என்கிற) சந்திரபாபு ஆட்டோ டிரைவரை இல்லை... ஆட்டோ மனிதரை நீங்கள் அங்கு சந்திக்கலாம். பதினொரு ஆண்டுகளாக அப்பகுதியில் ஆட்டோ ஓட்டி வருபவர்.



பேருந்து நிலைய போக்குவரத்துக் கழக டெப்போ நேரம் காப்பாளரிடம், பேருந்து கால அட்டவணை இருக்கும். ஆனால், ஒரு ஆட்டோ டிரைவரிடம் மினி பஸ் கால அட்டவணை இருப்பது வியப்புதானே! அவர் என்ன சிற்றுந்து நேரங்காப்பாளரா? அல்ல... அல்ல... அதன் விவரமே வேறு.

"லோக்கல் சவாரின்னா யார் வந்து கூப்பிட்டாலும் போயிடுவேன். கொஞ்ச தூரத்து ஊர் சவாரியா, பார்க்க ஆளுங்க நடுத்தர வருவாய் உள்ளவங்களா தெரிஞ்சா அந்த ஊருக்கு மினி பஸ் டைம் சொல்லி, அவங்களை மினி பஸ்ஸுக்கு அனுப்பிச் சுடுவேன். இதே வசதியானவங்களா தெரிஞ்சா, மறுக்காம சவாரிக்குப் போயிடுவேன். சாதாரண ஜனங்களுக்கு நூறு அம்பது மிச்சம் பண்ணித் தந்தா, அது அவங்களுக்கு வேறு செலவுக்கு உதவுமா இல்லியா? மணப்பாறையிலேருந்து மினி பஸ்ஸுங்க ஒன்பது வழித்தடங்கல்ல போகுது. அதற்குரிய கால நேரங்களை ஒரு பட்டியலா எழுதி ஒட்டி வெச்சிருக்கேன். சாதாரண ஜனங்களுக்கு இது ரொம்ப உதவியா இருக்கும். நமக்கு சவாரி வந்து மாட்டினா போதும்னு நான் நினைக்கிறது இல்ல!'' என்கிறார் ஆட்டோ பாபு.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான். குறிஞ்சி நிலக் கடவுளான முருகன், வயல் வயல் சார்ந்த இந்த வயலூருக்கு (மருதத்துக்கு) எப்படி வந்தான்? எதற்கு வந்தான்?

உறையூர் சோழ மன்னன் காலம். காட்டு விலங்குகளால் வேளாண் பயிர்கள் சேதம். மிருகங்களை வேட்டையாடச் செல்கிறான் மன்னன். வயலூர் பகுதியில் வேட்டையின் போது தாகம் எடுக்கிறது. தண்ணீர் கிட்டவில்லை. ஓரிடத்தில் கரும்பு மூன்று கிளைகளாகப் பிரிந்து இருப்பதைக் கண்ட மன்னன், அதனைப் பிழிந்து சாறு அருந்தி தாகம் தணிக்க முனைந்தான். கரும்பைப் பிழிந்தபோது ரத்தம் வடிந்தது. அதிர்ச்சி! அந்த இடத்தைத் தோண்டச் செய்தான். அடியில் சிவலிங்கம். உடனே அங்கு கோயில் கட்டப் பணித்தான். ஆதிநாதன் - ஆதிநாயகி கோயில் உருவானது. இந்த ஜகன் மாதா - பிதா, வழி மேல் விழி வைத்து மைந்தர்கள் வரவை எதிர்பார்த்திருக்க அந்த அன்புக்கு உடன்பட்டு, இங்கு உறைந்திட மயில் மீதேறி வந்தார் சுப்பிரமணியர்.

வள்ளி - தெய்வானையுடன் காட்சியளிக்கிறார் சுப்பிரமணியர். திருப்புகழ் பாட அருணகிரிநாதருக்கு அருள்பாலித்த தலம் இது. வா என்றழைத்து தேங்கிக் கிடந்த தெய்வ நிலத்தைத் திறந்துவிட்டுத் தம்மையும் இந்த ஊரையும் வைத்துப் பாடு என்று அருள் சுரந்த இடம்.


கோயிலின் உள்ளே நுழைந்ததும் கொடி மரம். எதிரே ஆதிநாயகர். தனி சன்னிதியாக தென்புறம் பார்த்து ஆதிநாயகி. இருவரையும் தரிசித்து பொய்யாகணபதியை வணங்கி, பிராகாரம் கடந்து சென்றால் வள்ளி-தெய்வானையுடன் சுப்பிரமணியர். வயல்கள் சூழ்ந்த தண்ணென்ற குளுமையுடன் குடிகொண்டுள்ளார். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் பிரசித்தி பெற்ற தலம். கிருபானந்த வாரியாரும் குமார வயலூரும் முருக பக்தர்களால் மறக்க முடியாதவை. ○



மருதநில குமரன்!



கோடி அர்ச்சனை



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299,29710350
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ("SHIRI SARADHA SAKTHI PEETAM") என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.



"ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் என் ஆளு மலைக்கோயிலுக்கு பின்னாலயே ஏறுவார். இறங்கும்போதும் பின்னாலயே இறங்குவார்!"

"ஏதாவது வேண்டுதலா? ரொம்ப ஆபத்து இல்லே!"

"அட நீ ஒண்ணு... நான் முன்னால போவேன். அவரு பின்னாலயே வந்திட்டிருப்பாரு!"

நீ முன்னாலே போனா... நான் பின்னாலே வாரேன்!



"என்ன இது... டாக்டர் வாள், குத்தீட்டி எல்லாம் மாட்டியிருக்காரு!"

"அவரு ராஜபரம்பரையாம்! ஆபரேஷன் எல்லாம் இந்த ஆயுதங்கள்லதான் தினம் பண்ணுவாராம்!"



''விவசாயிகளை மின்சாரம் தாக்காம காப்பாத்தின பெருமை தலைவருக்கு உண்டுன்னு சொல்றாங்களே... எப்படீங்க?''

''அணையில தண்ணியைத் தேக்கி, அதுல இருந்து மின்சாரம் எடுத்தப்புறம் தான் பாசனத்துக்கு தண்ணியைத் திறந்து விடச் சொல்லி உத்தரவு போட்டிருக்காராம்!!''



''ஏம்ப்பா... அவர் ஆஃபீஸ் நேரத்துல அங்கேயும், இங்கேயுமா ஏன் நடந்துட்டிருக்காரு... கூப்பிட்டா திரும்பிக்கூட பாக்கமாட்டேங்கறாரு!''

''சார்... அவருக்குத் தூக்கத்துல நடக்கற வியாதியாம்!''



சுஜாதா கணேஷ்

''டாக்டர்... இருபதாம் நெம்பர் ரூம்ல கால் உடைஞ்சிடுச்சாம்!''

''அப்படியா... எக்ஸ்ரே - ஆபரேஷன் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணு... அட்வான்சா ஒரு ஐம்பதாயிரம் உடனே கட்டச் சொல்லு... க்விக்!''

''டாக்டர்... நோயாளி படுத்திருந்த கட்டில் கால் உடைஞ்சிடுச்சாம்!''


புத்தாண்டு மலர்-2010

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: பெரும் இருட்டைத் தின்று விட்டு அமைதியாய் ஆர்ப்பாட்டமின்றி அமர்ந்திருக்கும் சின்னஞ்சிறு அகல் விளக்காய் அமைய இருக்கிறது உங்க புதுவருடப் பலன்கள். பூர்வீகச் சொத்து உங்களை வந்தடைவதும், நீங்க புண்ணிய ஸ்தலம் சென்று மகான்களைத் தரிசிப்பதும் ஒரு சேர நடக்கும். இட மாற்றம் இனிமையைத் தரும். கடன் நிலுவை வந்து சேரும். தடங்கலான கல்வி, உயர்வு பெறும். பத்திரிகையில் புகழும் வாசலில் புது வாகனமும் இந்த வருட போனஸ். இறைவனுக்கு தேங்க்ஸ் சொல்லுங்க!

ரிஷபம்: உங்க புது வருடப் பலன் பெட்ரோமாக்ஸ் லைட் போல ஆரம்பத்தில் கொஞ்சம் டல்லடிச்சாலும் போகப் போக பிரகாசமாயிடும். வாக்குவாதம் என்ற மழையில நனையாம பாத்துக்கோங்க! 'இதுல எப்படியண்ணே பளீர்னு வெளிச்சம் வருது'ன்னு செந்தில் ஒரு படத்தில் மேன்டிலைப் பசக்குன்னு நசுக்கிடறா மாதிரி 'ஜாமீன்' விவகாரம் உங்களை அல்லோல கல்லோலப்பட வைக்க நீங்க சான்ஸ் கொடுக்கக்கூடாது. பாலிடிக்ஸ் துஷ்டனைக் கண்டு தூர விலகுங்க. அது போதும். மத்தபடி எல்லாம் வெகு இயல்பா பிரச்னை இல்லாம போகும்.

மிதுனம்: ஒற்றை அறையில் ஒன்பது டியூப்லைட் போட்டது போல வெளிச்ச நதி கவர்க் கரையை மோதும் காலம். என்ன குழப்பமா இருக்கா? உங்க பிரகாசமான வாழ்வை பிறகெப்படி வர்ணிப்பதாம்? பொருள் - பயணம் - கலை - கல்வி - காதல் - வேலை - வெற்றி எல்லாமுமே இந்த வருடம் முழுக்க உங்களை ஆனந்தப்படுத்துவதாய் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறீர்கள்... போதாதா?

கடகம்: நீங்க வருத்தப்படுறா மாதிரி எந்தச் சங்கடமும் உங்களை வந்து சந்திக்காது. அரசியல், கலை இந்த இரண்டு துறையிலேயும் நீங்க இருந்தா உங்களுக்கு ராஜ யோகம்தான். பதவி உயர்வோடு கூடிய இடமாற்றத்தை நீங்க ஏத்துக்க வேண்டி வரும். பிரபுதேவா மாதிரி 'நோ ப்ராப்ளம்'-ன்னு வருடம் முழுதும் பாட.... வியாழன்தோறும் குருவுக்கு தீபம் ஏற்றி ஒன்பது முறை சுற்றிவந்து ஒன்பது ஏழைகளுக்கு அன்னதானம் செய்தால் நல்லது.

சிம்மம்: ஜீரோ வாட்ஸ் பல்பு எரிஞ்சுக்கிட்டு இருந்த உங்க ராசியில நாற்பது வாட்ஸ், நூறு வாட்ஸ் பல்புன்னு ஏறுமுகமாகி ஒளியில் பலரின் கவனத்தையும் உங்க வாழ்வு ஈர்க்கும் ஏகாந்த காலமிது. குடைச்சலா இருந்த கூட்டாளி விலகிப் போவான். படா பேஜாரா இருந்த பாகப் பிரிவினை சமத்தா முடியும். டிரான்ஸ்பர் எல்லாத்திலேயும் இருக்கும். கல்யாணம், புத்திர பாக்யம், சொசைட்டியில் மதிப்பு எல்லாம் நடக்கும். இன்னுமென்ன 'உம்'னு? கொஞ்சம் கலகலன்னுதான் சிரியுங்களேன்!

கன்னி: ஃபிப்டி ஃபிப்டி பிஸ்கட் மாதிரி கொஞ்சம் உப்பும் கொஞ்சம் இனிப்பும் கலந்த பலன்கள் இருக்கும். துக்கம் எதுவும் தூக்கலா வந்துடாது. நின்னு போன குல தெய்வ வழிபாட்டை முடிச்சிடுங்க. வரவும் இருக்கும்; செலவும் இருக்கும். கடனாளியாக மாட்டீங்க... இந்த மெத்தட்தான் இவ்வருடம் நிலவும். நீங்க உண்டு உங்க வேலை உண்டுன்னு சிவனேன்னு போங்க. வாக்குவாதம், ஜாமீன், புது முதலீடு - 'மூச்' கூடவே கூடாது. யாரை மறந்தாலும் சனிக்கிழமை ஆஞ்சநேயரைப் பார்த்துட்டு ஒரு வணக்கம் போடறதை மட்டும் மறக்காம இருங்க. சூரியனைக் கண்ட பனி மாதிரி துன்பம் எல்லாம் விலகி ஓடும்.

(மற்ற ராசிகள - அடுத்த வாரம்)

ஓடிப் போனவன்!

திருச்சி மத்தியப் பேருந்து நிலையம். மதுரை செல்லும் பேருந்தில் ஜன்னலோரம் வசதியாக இடம் கிடைத்தும் அவஸ்தையாய் உணர்ந்தான் மணி.

''விராலிமலை வழியா மதுரை... மதுரை... மதுரை...'' கண்டக்டர் குரல் கொடுத்துக்கொண்டிருக்க, பஸ்ஸில் இன்னும் கணிசமாக இடம் இருந்தது. எப்போது புறப்படும்? உள்ளே ஏறி இடம் தேடிக்கொண்டிருந்த ஒரு பயணியை அழைத்து ஜன்னலோர இருக்கையை விட்டுக்கொடுத்து தான் அருகில் அமர்ந்துகொண்டான். பார்வை அடிக்கடி வெளியே பாய்வதும் பின்னர் தலை கவிழ்வதுமாய் இருந்தான். தெரிந்தவர்கள் யாரும் வந்துவிடக்கூடாதே என்ற தவிப்பு அவனுள் வியாபித்து இருந்தது.

அவன் தவிப்புக்குக் காரணம் வயதுக் கோளாறுதான். ஆமாம்... நீங்கள் ஊகித்திருந்தது கரெக்ட். மணி இன்று ஒரு பெண்ணுடன் ஊரைவிட்டு ஓடப் போகிறான். ஏதோ படித்தோம் என்று பிளஸ் டு பாஸ் செய்துவிட்டு, உள்ளூரில் கேபிள் டீ.வி. நடத்தும் அமைப்பில் மாத வாடகை வசூல் செய்யும் வேலையில் இருக்கும் அவனுக்கு அப்படியொரு பெரிய இடத்துப் பெண்ணிடம் ஈர்ப்பு ஏற்பட்டதும், பதிலுக்கு அவளும் பச்சைக் கொடி காட்டியதும் ஹார்மோன்கள் மற்றும் காதல்(!) என்ற அற்புத ரசாயனத்தின் சேட்டை.



எஸ்.பி.எஸ் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் திருச்சிக்கு வந்திருந்தீர்கள் என்றால் உங்கள் கண்களுக்கு எஸ்.பி.எஸ். தப்பியே இருக்க முடியாது. நகரத்தின் எல்லா ரூட்களிலும் அந்தப் பெயரில் பேருந்துகள் ஓடுகின்றன. இதைத்தவிர, சென்னை மற்றும் பெங்களூருக்குத் தலா மூன்று சொகுசுப் பேருந்துகள், மதுரை, சென்னை, கோயம்புத்தூர் மார்க்கங்களில் லாரி சர்வீஸ் எனக் கிளை பரப்பியிருக்கும் சேதுராமனின் ஒரே பெண்ணான லலிதா, மாதாமாதம் கேபிள் கட்டணம் வாங்க வரும் மணியிடம் மனத்தைப் பறி கொடுத்தாள். காதல் தீ பற்றிக்கொண்டு மளமளவெனப் பரவி, இன்று பெற்றோரையும், சொத்து சுகங்களையும் மறந்து அவனுடன் வெளியேற வைக்கும் நிலைக்கு விஸ்வரூபம் எடுத்திருந்தது.

லலிதா தன் சித்தி ஊரான மதுரைக்குச் சென்றிருக்க, மணியும் ஊரை விட்டுக் கிளம்பி அங்கு சென்று, பின்னர் இருவரும் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்துகொள்வதாய் ஏற்பாடு.

இருவரின் காதல் விவகாரம் இலேசாக ஊருக்குள் ஏற்கெனவே கசிந்திருந்ததால், இந்தத் தடாலடி திருமணத்துக்கு லலிதாவை வற்புறுத்தி சம்மதிக்க வைத்திருந்தான். தன் நெருங்கிய நண்பனான இளங்கோவிடம் மட்டும் சொல்லி, இரண்டு நாள் கழித்து அவனை மதுரைக்குக் கிளம்பி வரச் சொல்லிவிட்டு தற்போது பேருந்தில் தவிப்புடன் அமர்ந்திருந்தான் மணி.

பஸ் புறப்பட்டது.

இதுவரை இருந்த பயம் சற்றே விலக, மணி மெல்ல நிமிர்ந்து தைரியமாக பஸ்ஸில்



பொன்மலை ஆர்.பிரகாஷ்

இருந்த மற்றவர்களை நோக்கினான். எல்லோரும் அவரவர் கவலைகளில், நினைவுகளில் மூழ்கியிருந்தனர். மணியும் ஆசுவாசமாகி ஒரு புத்தகத்தைப் பிரித்துக் கொண்டான்.

''சீராகப் போய்க்கொண்டிருந்த பேருந்து ஒரு திடீர் குலுக்கலுடன் நிற்க, பயணிகள் அனைவரும் இருக்கைகளிலிருந்து எழுந்து காரணம் அறிய வெளியே நோக்கினர்.

பஸ்ஸின் குறுக்காக ஒரு டாட்டா சியாரா நிறுத்தப்பட்டிருக்க, அதிலிருந்து ஆட்கள் தபதபவென்று இறங்கி பேருந்தைச் சூழ்ந்தனர். ''ஏறிப் பாருங்கடா'' தலைவன்போல் இருந்தவன் உத்தரவிட, இரண்டு வாசல் வழியாகவும் ஆட்கள் ஏறினர்.

இதைப் பார்த்த அவனுக்குப் பகீர் என்றது. எதிர்பார்த்திருந்த ஆபத்து வந்தேவிட்டது. என்ன செய்வது? அவசரத்தில் ஒன்றும் செய்யத் தோன்றாமல் முகத்தை புத்தகத்தால் மூடி மடியில் தலை கவிழ்ந்தான்.

ஒவ்வொரு நபராகக் கவனித்து வந்தவர்களில் ஒருவன் இவன் தோள் தொட்டான். வேறு வழியின்றி நிமிர, 'இங்க இருக்கான்' என அறிவித்தான். கூட்டாளிகள் அனைவரும் இவன் இருக்கைக்கு வந்தனர். ''ஏண்டா... மாசம் பொறந்தா முழுசா ஐந்நூறு ரூபாய்கூட சம்பளம் வாங்காத உனக்கு முதலாளி பொண்ணு கேட்குதா... அடுத்தவேளை சோத்துக்கு வழியில்லேன்னாலும் உங்களுக்கெல்லாம் இந்த கண்றாவி காதல் மட்டும் எப்படியோ வந்துடுதுடா, அதெப்படி... எதைப் பத்தியும் கவலைப்படாம ஓடி வந்துடுன்னு பொண்ணுக்குச் சேதி அனுப்புவியா? உனக்கு இன்னிக்கு நடக்கற பூசை மத்தவங்களுக்கு ஒரு பாடமா

இருக்கணும், சாத்துங்கடா,'' மற்றவர்கள் இந்த அறிவிப்புக்காகவே காத்திருந்த மாதிரி, அவனைச் சூழ்ந்துகொண்டு தாக்கத் தொடங்கினர்.

''ஏம்பா... பஸ்ஸுக்குள்ள என்ன கலாட்டா... யாரு இந்த ஆளு? என்ன தப்பு செஞ்சான்? எதுவா இருந்தாலும் முதல்ல பஸ்ஸை விட்டு இறங்குங்க... மத்தவங்க பிரயாணம் செய்ய வேண்டாமா? ட்ராஃபிக் ஜாம் ஆகுது பாருங்க.. இந்தாப்பா நீயும் கீழ இறங்கு. உன் பிரச்னையைத் தீர்த்துக்கிட்டு வேற வண்டியில வா.''

பற்கள் இடம்பெயர்ந்து தாடை வீங்கியிருக்க, ரத்தம் கசியும் வாயுடன் மெல்ல கண்டக்டரைப் பார்த்துக் கை கூப்பி, ''என்னைக் காப்பாத்துங்க... பஸ்ஸைவிட்டு இறக்கி விட்டுடாதீங்க... இவங்க என்னை அடிச்சே கொன்னுடுவாங்க, ப்ளீஸ் பக்கத்தில இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கு வண்டியை விடுங்க'' கெஞ்சினான்.

''இங்க பாருங்க கண்டக்டர்... உங்களுக்கும் எங்களுக்கும் எந்தப் பிரச்னையும் இல்லை. உங்க பஸ்ஸுக்குச் சேதாரம் வேண்டாம்னா இவனைக் கண்டுக்காம விட்டுடுங்க. நாங்க எங்க வழியில போறோம். எங்க வண்டியை எடுக்காம உங்க பஸ்ஸை நகர்த்தக்கூட முடியாது. பதில் சொல்லிக்கிட்டு இருக்க முடியாது... என்ன சொல்றீங்க?'' கண்டக்டர் திடுக்கிட்டார். வெறும் மிரட்டலாக அன்றி சொன்னதைச் செய்வார்கள் போலிருந்த அவர்களைக் கண்டு பயந்து, ''யப்பா.. முதலாளிக்கு நான் பதில் சொல்லிக்கிட்டு இருக்க முடியாது. நீ இறங்கிக்க'' என அடிபட்டவனின் கெஞ்சலைப் புறக்கணித்து வலுக்கட்டாயமாகப் பேருந்தில் இருந்து இறக்கிவிட்டு விட்டு, டபுள் விசில் கொடுத்தார். சியாரா விலகி வழிவிட, பேருந்து சீறிப் புறப்பட்டது. பயணிகளால் வெறுமனே வேடிக்கை பார்க்க மட்டுமே முடிந்தது.''

''சே... போதுண்டாப்பா படிச்சது... நாம இப்ப இருக்கற சிச்சுவேஷனுக்குத் தகுந்த மாதிரியே எவனோ கதை எழுதி நம்மளைக் கிலி பிடிக்க அடிச்சுட்டான்'' என மெதுவாய்ச் சொல்லியபடியே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு காற்று வாங்க ஆரம்பித்தான் மணி.

திருச்சி சோமரோகிணி



மலைக்கோட்டை தெப்பக்குளத்தின் மற்ற பெயர்கள் சோமரோகிணி, பிரம்மதீர்த்தம்.
இந்தக் குளத்தில் நீர் நிறைப்பதற்காக காவிரியிலிருந்து நேரடி குழாய் இணைப்பு இன்றும் இருக்கிறது. இது சோழர் காலத்தில் போடப்பட்டது. சமீபத்தில் திருச்சி நகராட்சியின் கமிஷனராக இருந்த சுவரன்சிங்தான் அந்த மேப்பைக் கண்டறிந்தார்.

- சிம்மவாஹினி

திருமுருகாற்றுப்படை அரசு
வாகீச கலாநிதி
தமிழ்க் கவி பூஷணம்
உபந்நியாச கேசரி
திருநெறித் தவமணி
கந்தர் அலங்காரச் செம்மல்
தமிழ் முனிவர்
செந்தமிழ்ச் செல்வர்
என ஏராளமான
பட்டங்களும்:
பதக்கங்களும் பெற்ற:

பழமைக்கும்
புதுமைக்கும்
பாலமாகத் திகழ்ந்த
'கலைமகள்' ஆசிரியர்



கி.வா.ஜ.

எழுதியவை

பங்கிம் சந்திர சட்டர்ஜி
சரத் சந்திர சட்டர்ஜி
தாரா சங்கர் பானர்ஜி
ரவீந்திரநாத் டாகுர்
நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்
இன்னும் ஏராளமான பிறமொழி எழுத்தாளர்களை
தமிழு மக்களிடையே
உலவ விட்டு ...
கலைமகள்
ஆனந்த விகடன், கல்கி குமுதம்
அமுதசுரபி போன்ற இதழ்களில்

நாவல்கள், சிறுகதைகள்
பல எழுதி இலட்சக்கணக்கான
வாசகர்களின் உள்ளத்தில் இடம் பெற்ற



த.நா.குமாரசாமி

எழுதி –
மொழிபெயர்த்து

Creative Studio

நூற்றுக்கணக்கான புத்தகங்கள்

எழுதியவர் மறைந்தாலும் **எழுத்து** மறையவில்லை
காலம் கடந்தாலும் **கருத்து** சிதையவில்லை
நீங்கள் வாங்கினால் உங்கள் **தமிழ்த் திறமை வளரும்**
நாங்கள் விற்றால் எங்கள் **தமிழ் தொண்டு சிறக்கும்**

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(புதிய எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மைலாப்பூர் - 600 004 தொலைபேசி: 24641314
www.alliancebook.com email: srinivasan@alliancebook.com

30.12.09-10.1.2010
சென்னைப் புத்தகக் காட்சியில்
ஸ்டால் **P22**க்கு வருகை தாருங்கள்

தி.மு.க.வில் திகுதிகு மாற்றங்கள்!

86 வயதிலும் இளைய தலைமுறைக்குச் சவால் விடும் வகையில் தேனியாக உழைத்துக்கொண்டிருப்பவர் முதல்வர் கருணாநிதி. ஓய்வுக்காக மகள் வீட்டுக்கு, பெங்களூரு சென்ற போதும், செம்மொழி மாநாட்டுக்காக, தோரணவாயில்களாகக் கடிதங்கள் எழுதுவதில் ஈடுபட்டவர். முதல்வர் ஒரு வாரம் பெங்களூருவில் தங்கியிருப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மூன்றே நாட்களில் திரும்பி வந்துவிட்டார். அரசு மட்டத்திலும் கட்சி மட்டத்திலும் ஆச்சர்யம். ஓய்வை ரத்து செய்துவிட்டு இடையில் திரும்பியது குறித்து அரசல்புரசலாக பல கிசுகிசுக்கள். இதுபற்றி மூத்த தி.மு.க. பிரமுகரிடம் விசாரித்தபோது, இலேசான புன்னகையுடன் பல விவரங்களை நம்முடன் பகிர்ந்துகொண்டார் அவர்.

''கட்சியின் 62 கால வரலாற்றில் 2010, பெரிய திருப்புமுனை ஆண்டாக இருக்கும்'' என்று கூறிய அவர் ஒரு நிமிடம் பேசாமல் இருந்தார். பழைய நினைவுகளில் மூழ்கி எழுந்த அவர் மீண்டும் தொடர்ந்தார்: ''அண்ணாவுக்குப் பிறகு கட்சிப் பொறுப்பு, ஆட்சிப் பொறுப்பு என்று இரு சுமைகளையும் ஏற்று பல்வேறு இன்னல்கள், போராட்டங்களுக்கிடையில் நான்கு முறை கட்சியை அரியணையில் ஏற்றியவர் கலைஞர். அவருடைய அரசியல் வாரிசாக இயல்பாக வந்துவிட்டவர்தான் ஸ்டாலின். அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்வதில் எங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால் 2006 தேர்தலுக்குப் பிறகு அரசியலில் தீவிரமாக இறங்கிவிட்ட மு.க. அழகிரி இப்போது பல குழப்பங்களுக்குக் காரணமாகிவிட்டார். இதுதான் தலைவரைக் கலங்கச் செய்துள்ளது. இது குறித்து சில தீர்வுகளுக்காகவே பெங்களூரு சென்றார் முதல்வர். ஆனால் பிரச்னை இன்னமும் தீவிரமாகவே இடையிலேயே திரும்பிவிட்டார்'' என்று கூறி முடித்துக் கொண்டார் அவர்.

மத்தியில் அழகிரி அமைச்சரானாலும், அங்கே அவர் தரையில் துடிக்கும் மீனாகத்தான்








காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார் என்கிறார்கள். அவரது தடாலடி ஸ்டைல் அந்த ஆட்சிச் சூழலுக்கு எடுபடவில்லை. மேலும், மத்தியில் தொடர்ந்து இருந்தால், கட்சியில் தமது செல்வாக்கு அடிபட்டுவிடும் என்று ஒரு அஸ்திரத்தைக் கையில் எடுத்துள்ளார். ஸ்டாலினுக்குத் துணை முதல்வர், பின்னர் முதல்வர் பொறுப்பு கொடுப்பதில் தமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே சமயம் கட்சி தம் கட்டுப்பாட்டில் வரும்படியாக 'தலைவர்' பொறுப்பு தமக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தாராம். இதுதான் பல சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளதாம். குறைந்தபட்சம் உடனடியாகக் கட்சியின் 'செயல் தலைவராக' தம்மை அறிவிக்க வேண்டும் என்று அழகிரி வற்புறுத்துவதாக மற்றொரு பிரமுகர் சொல்கிறார்.

இந்தப் பிரச்னை ஒரு பக்கம் இருக்க, மாறன் சகோதரர்களுக்கும், கலைஞர் குடும்பத்துக்குமிடையே சமாதானம் ஏற்பட்டு தயாநிதி மத்திய அமைச்சரானாலும், பழைய நம்பிக்கை துளிர் விடவில்லை என்கிறார்கள். குடும்பப் பிரமுகராக முதல்வரை எந்த நேரமும் சந்திக்கும் வாய்ப்பு பெற்றிருந்த தயாநிதி, இப்போதெல்லாம் நேரம் கேட்டுக்கொண்டுதான் முதல்வரைச் சந்திக்க முடிகிறதாம். ஸ்டாலின், அழகிரியோடு இணையாக, தேர்தல் பிரசாரத்தில் கனிமொழிகூட ஈடுபடும்போது, தயாநிதிக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை. அவர் தொகுதி நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்துகொள்கிறார். அவரது தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும், 'நடுநிலை' என்ற நோக்கில் ஜெயலலிதாவுக்கும், விஜயகாந்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல், கட்சிக்குள்ளே எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது.

''மாறன் சகோதரர்களின் நிலைப்பாடு சந்தேகத்தை உண்டாக்கும் வகையில் இருக்கிறது'' என்று சொல்கிறார் இளைஞரணிப் பிரமுகர் ஒருவர்.

இப்படி குடும்ப மட்டத்தில் சில புகைச்சல்கள் இருக்க ஆட்சி மட்டத்திலும் பல அதிருப்திகள். செம்மொழி மாநாடு, புதிய தலைமைச் செயலகம் போன்றவற்றில் தீவிரக் கவனம் செலுத்தும் முதல்வருக்கு உள்ள செயலாளர்களில் நால்வர், ஓய்வு பெற்று மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருப்பவர்கள். இப்படி ஓய்வு பெற்றவர்கள் முதல்வர் அலுவலகத்தில் கோலோச்சுவதை சீனியர் அதிகாரிகளால் கொஞ்சமும் சகித்துக் கொள்ள முடியவில்லை. ''ஓர் அரசு அதிகாரிக்கு உள்ள கட்டுப்பாடுகள் அவர்களுக்கு இல்லாததால், நாளை அவர்களை எதற்கும் பொறுப்பாக்க முடியாது'' என்கிறார் ஓர் அதிகாரி. பல அமைச்சர்கள் முதல்வரின் குறிப்பிட்ட செயலாளர் மீது

கடுப்பாக இருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் செயலாளர்களோடு நேரடித் தொடர்பு கொண்டு அமைச்சர்களை அலட்சியப்படுத்துகிறாராம் அவர்.

''தளபதி கையில் முதல்வர் பொறுப்பு கொடுக்கப்பட்டால்தான் மாறுதல் வரும். அதுவரையில் துணை முதல்வர் அலுவலகத்தை இன்னமும் பலப்படுத்தி, பல துறைகளை இணைத்து முடிவெடுக்கும் உரிமையைக் கொடுப்பது நல்லது'' என்கிறார் ஓர் அமைச்சர்.

அமைச்சர்களில் பத்து பேர் அழகிரிதான் தங்களுக்கு எல்லாமே என்ற வகையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதும், சில குழப்பங்களுக்கு வழிவகுக்கிறதாம். யாராக இருந்தாலும் சாட்டையை வீசத் தயங்க மாட்டேன் என்ற வகையில்தான் துரைமுருகனை ஓரங்கட்டினார் முதல்வர். நாளை ஸ்டாலின் முதல்வராகும் பட்சத்தில் சில சீனியர்கள் ஒதுங்க இருக்கிறார்கள். அதற்கும் முன்னாலேயே சிலரை மாற்றி, புதியவர்களைப் போடலாம் என்று முனைந்தால் அதிலும் ஏகப்பட்ட குழப்பங்களாம்.



• சோலை

இந்தச் சூழலில் செம்மொழி மாநாட்டுக்குப் பின்னர் அதிரடியாக முன்கூட்டியே சட்டமன்றத் தேர்தல் நடக்கச் செய்து, பின்னர் ஸ்டாலினை முதல்வராக்கினால் என்ன என்ற சிந்தனையும் தி.மு.க. உயர் மட்டத்தில் இருக்கிறதாம். அந்த வகையில் புதிய சட்டமன்ற வளாகத்தில் கூடப் போகும் பட்ஜெட் தொடரில் பல நலத்திட்ட அறிவிப்புகள் வரக்கூடுமாம். ஆட்சி மட்டத்திலும், கட்சி மட்டத்திலும் 2010ல் இப்படி திகுதிகு மாற்றங்கள் வரப்போவது உறுதியாம்.

அரசியல் விமர்சகரான சோலையிடம் இவையெல்லாம் கேட்டோம். ''நீங்கள் சொல்லும் மற்ற விஷயங்கள். எந்த அளவுக்குச் சரி என்பது எனக்குத் தெரியாது. ஆனால், கட்சித் தலைவர் பதவியைப் பொறுத்தமட்டில், அது ஸ்டாலினுக்கே வழங்கப்பட வேண்டும். தலைவர் பதவியும், முதல்வர் பதவியும் வெவ்வேறு நபர்களிடம் இருக்கக்கூடாது. இருந்தால் குழப்பம் வரும். இப்போதுகூடப் பார்த்தால் அமைச்சர்களாக இருப்பவர்கள்தான் பெரும்பாலான மாவட்டங்களில் மாவட்டச் செயலாளர்களாக இருக்கிறார்கள். மேலும், ஸ்டாலின் திறமைகளை நன்றாக வளர்த்துக் கொண்டு இரண்டு பதவிகளுக்கும் தகுதியானவராக உருவாகி வருகிறார். இது தவிர, கலைஞர் இன்னமும் எந்தவித அழுத்தங்களுக்கும் ஆளாகாமல் அஞ்சாநெஞ்சத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்'' என்கிறார் சோலை.

- ப்ரியன்

சிக்குபுக்கு ரயிலு!



இந்தியாவிலேயே பழமையான ரயில் தொழிற்சாலை பொன்மலையில் இயங்கி வருகிறது. இது ஆரம்பத்தில் நாகையில்தான் இயங்கி வந்தது. இயற்கைச் சீற்றங்களால் பொன்மலைக்கு மாற்றப்பட்டது. இங்கிருந்து டீசல் இன்ஜின்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

—சுரேஷ் மான்யா

''ஒரு படைப்புங்கறது எப்படிப்பட்டதா இருக்கணும்,'' திருச்சி மாவட்ட எழுத்தாளர்கள், வாசகர்களை மேலபுலிவார் ரோடு இப்ரஹிம் பார்க்கில் ஒன்றுகூட்டி ஒரு விவாதத்தைக் கிள்ளிப் போட்டோம். இதோ துள்ளி வந்த விவாதத் துளிகள்...

கிருஷ்ணா: ஒரு குழந்தையோட சிரிப்பைப் போல இயல்பா இருக்கணும். அதுக்குன்னு பெரிசா இலட்சியம் இல்லைன்னாகூட பரவாயில்லை. படிக்கறவங்க மனசுல பாஸிடிவ் திங்கிங்கை ஏற்படுத்தணும். சின்ன ஒரு அசைவை உண்டாக்கினாலே போதும். அது ஆகச் சிறந்த படைப்புதான்.

ஆங்கரை பைரவி: படைப்பு லட்சியம் தேவையில்லைன்னு சொல்ல முடியாது. லட்சியம் மட்டுமே துருத்திக்கிட்டுத் தெரியறது மாதிரியான பிரசாரத் தன்மை குறைஞ்சிருக்கணும். சக மனிதனைத் தாய் உள்ளத்தோட அணுகணும். அதுதான் உயர்ந்த படைப்பு.



கீதாஞ்சலி: இதையெல்லாம் மனசுல வெச்சுக்கிட்டு ஒருத்தர் ஒரு கதையோ கவிதையோ எழுதினார்னா அது எப்படி இயல்பா இருக்கும்? படைப்பு உருவாகறதை காலமும் சூழலும்தான் தீர்மானிக்குது. இதுல படைப்பாளன்கூட இரண்டாம் பட்சம்தான்.

சுரேஷ் மான்யா: புதுப்புது சொற்களைப் பயன்படுத்தணும். அப்பதான் வாசிக்கும்போது உயிர்ப்பா இருக்கும். அதேநேரத்துல வாசகனை மிரட்டக்கூடாது. துளியாவது வாழும் காலம் குறித்தான அக்கறை இருக்கணும்.

சரஸ்வதி பஞ்சு: இப்ப தொடக்கமும் இல்லாம... முடிவும் இல்லாம கதை எழுதறாங்க. கேட்டா ஏதேதோ இஸங்களைக் கை காட்டறாங்க. நவீனம் தேவைதான். அதே நேரத்துல நம்முடைய வேர்க் கலாசாரத்தைப் பாதுகாக்கணும் இல்லையா?

ரிஷபன்: சமூகப் பிரச்னையைப் பேசினாதான் படைப்பு, படைப்பாளின்னு சொல்றாங்க. அது தவறு. இப்ப 'அழகியல்'கூட ஒரு பிரச்னைதான். அவசர யுகத்துல அழகா லெட்டர்கூட எழுத நேரமில்லை. அந்த அவஸ்தையைப் பதிவு பண்ணுனா போதும். படைப்பாளியே காலம் கடந்து நிற்பதில்லை என்றபோது படைப்பு நின்று என்ன ஆகப் போகுது!

கொள்ளிடம் காமராஜ்: ஆபாசம் கலந்து நிறைய பேர் எழுதறாங்க. அதனால என்ன பயன்? 'உடல் மொழி'ன்னு நிறையபேர் உடலுறுப்புகளைக் காண்பிக்கறாங்க. போர்னோவுக்கும், படைப்புக்கும் அப்ப வித்தியாசமில்லாம போயிடுதே.



மழபாடி ராஜாராம்: ஒரு படைப்புலேர்ந்து இன்னொன்று என்பது மாறி வாழ்விலிருந்து படைப்புகள் வெளிக் கிளம்பணும். அதுக்குள்ளதான் சத்யம் இருக்கும்.

விவாதத்தில் கலந்து கொண்ட மற்றவர்கள் கீழவாளாடி இளஞ்சேட் சென்னி, பா.ஸ்ரீராம், இதயா ஏசுராஜ், கிரிஜா மணாளன்... ○







* பிரம்மன்

திருப்பட்டூர்

தொடரும் தொல்லைகள்... துரத்தும் துன்பங்கள்... சலிப்பேற் படுத்தும் சங்கடங்களால் நொந்து போயிருப்போர் சொல்வதென்ன? 'நம்ம தலையெழுத்து சரியில் லைங்க... படைச்சவன் பிரம்மன் இடது கையால கிறுக்கிட்டான்' என் பதாக இருக்கும். ஆனால், படைச் சவனுக்கே தலையெழுத்து சரியில் லாம ஈசனிடம் முறையிட்ட கதை சுவாரஸ்யமானது. அதுக்குச் சாட்சியாக திருச்சி - சென்னை நெடுஞ்சாலை யில் திருப்பட்டூரில் வீற்றிருக்கிறார் பிரம்மபுரீஸ்வரர்.

"எனக்கும் அஞ்சு தலை... உனக் கும் அஞ்சு தலை... அப்ப நீயும் நானும் சமம்தான்" என்று சற்றே ஆணவத்தோடு ஈசனிடம் பேசிவிட் டார் பிரம்மா. சினம் கொண்ட ஈசன் கால பைரவமூர்த்தியாகப் பொங்கி எழுந்து, தலை கனத்தால் ஆடிய பிரம்மனின் தலை ஒன்றைக் கொய்தார். கூடவே படைக்கும் சக்தியையும் பறிக்க... ஒளியிழந்து போனார் பிரம்மா. ஈசன், பிரம்மாவைக் கண்டிச்ச இடம்தான் திருக்கண்டியூர். தற்போதைய தஞ்சை மாவட்டத்தின் கண்டியூர். தன் தவறை உணர்ந்து பன்னிரண்டு லிங்கங்களைப் பிர திஷ்டை செய்து ஈசனை வழிபட்டு இழந்த சக்தியை மீட்டார் பிரம்மன் என்கிறது ஸ்தலபுரா ணம்.

"திருச்சியிலேர்ந்து சென்னை செல்லும் சாலை யில், 25 கிலோமீட்டரில் இருக்கும் திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் 1200 வருஷங்களுக்

திருப்பட்டூருக்கு வந்தால் பன்னிரண்டு சிவாலயங்களுக்குச் சென்று வந்ததற்குச் சமம்!



நாயகன்!

கும் முற்பட்டது. பல்லவர்களைத் தொடர்ந்து சோழர், நாயக்க மன்னர்களால் கட்டிமுடிக்கப்பட்டது. ஐந்து நிலை மாடங்களால் ஆன ராஜ கோபுரத்தைக் கொண்ட இக்கோயில் தேவார வைப்புத் தலம். இந்தியாவிலே பிரம்மனுக்கென்று பெரிய சிலையைக் கொண்ட தனி சன்னிதி இங்கு மட்டும்தான். பிரம்மனின் தலையெழுத்தையே மாற்றியமைத்ததால்தான் இங்கிருக்கும் ஈசன் பிரம்மபுரீசன். அதனால்தான் தேய்பிறை அஷ்டமியில் நடக்கும் ராகு கால பூஜையில் பங்கேற்றால் இழந்த சொத்து, சுகம், பேர், புகழ் அத்தனையும் திரும்பக் கிட்டுகிறது" என்கிறார் பாஸ்கர குருக்கள்.

''பிரம்மன் பிரதிஷ்டை பண்ணின பன்னிரண்டு லிங்கங்களும் இங்கே இருப்பதால் பிரம்மபுரீஸ்வரரைத் தரிசித்தால் பன்னிரண்டு சிவாலயங்களுக்குச் சென்று வந்ததற்குச் சமம்'' எனும் பாஸ்கர குருக்கள், ''புறநானூற்றுக் காலத்துல இந்த ஊருக்குப் பேர் பிடவூர். பிடம் என்றால் பாம்புன்னு ஓர் அர்த்தம் இருக்கு. இங்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கங்கையைப் போல ஓடும் ஷண்முக நதி கங்கைக்குச் சமமானது'' என்கிறார்.



* பாஸ்கர குருக்கள்

இங்கு பங்குனி 15,16,17 தேதிகளில் நடக்கும் சூரிய பூஜை (காலை 6.19-6.40) விசேஷமானது. சூரியன், நேரடியாக பிரம்மபுரீஸ்வரரையும் பிரம்ம புரீஸ்வரியையும் வந்து வணங்கும் காட்சி ரம்யமானது.

குரு பார்க்க கோடி நன்மை என்பார்கள். குருவுக்கு அதிதேவரான பிரம்மா பார்க்க கோடானு கோடி நன்மை. திருப்பட்டூர் நாயகனின் சன்னிதிக்கு எதிரே பதஞ்சலி முனிவரின் ஜீவ சமாதியை நடுநாயகமாக வைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் தியான மண்டபம் மனத்தைப் பக்குவப்படுத்தி அனுப்பி வைக்கிறது. ○

• தவமணி சுந்த



'மணப்பாறை முறுக்கு', 'மணப்பாறை மாடுகட்டி...' என்று மனசுக்குள் உணவும், உற்சாகப்பாட்டும் மட்டுமன்றி தமிழ் வாசமும் தாராளமாய் வருமிடம் திருச்சியிலிருந்து ஐம்பது கி.மீ. தூரத்தில் உள்ள மணப்பாறைதான். இங்குள்ள மணவை தமிழ் மன்றம் பொன்விழா கண்டுள்ளது. எழுத்தாளர்கள் மணவை முஸ்தபா, ஜெயந்தன் ஆகியோரால் துவங்கப்பட்டு, இன்றளவும் இயங்கி வருகிறது. ''இலக்கியச் சொற்பொழிவு பட்டிமன்றம், கவியரங்கம் எனத் தொடர்ந்து நடத்த புரவலர் சௌமா.இராசரெத்தினத்தின் பொருளுதவியும் தலைவர் கரு.இராசகோபாலனின் தமிழ்த் தாகமும் தான் காரணம்'' என்கிறார் செயலாளர் தவமணி சுந்தரராஜன். சமீபத்தில் பிரபஞ்சனும் பாரதி கிருஷ்ணகுமாரும் உரையாற்றி விட்டுப் போனார்கள். இவ்வாண்டு இலக்கியச் சொற்பொழிவு தமிழச்சி தங்கபாண்டியன்.

• சௌமா.இராசரெத்தினம்



பொன்விழா கண்ட மணவை தமிழ் மன்றம்!



வளைந்து தராத... வ.வே.சு. ஐயர்!

லண்டன் சென்று படித்த வ.வே.சு. ஐயருக்கு பாரிஸ்டராக வேண்டுமென்பது லட்சியக் கனவு. 1907ல் 26 வயது வ.வே.சு. ஐயர், பாரிஸ்டர் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கிறார். பிரிட்டிஷ் அரசின் ராஜ விசுவாச உறுதிமொழி எடுக்க வேண்டும் அந்த விழாவில். அதன் பின்னரே பட்டம் பெற முடியும். உறுதிமொழி எடுக்க மறுக்கிறார் வ.வே.சு. ஐயர். பிரிட்டனில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உடனே மாறுவேடங்களில் கிளம்பி, பல நாடுகள் சுற்றித் திரிந்து, புதுச்சேரி வந்து சேர்கிறார். திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொல்ல, வாஞ்சிநாதனுக்கு துப்பாக்கிப் பயிற்சி தருகிறார். 1925ல் பாபநாசம் குளத்தில் சுழலில் சிக்கித் தவித்த தன் மகளைக் காப்பாற்ற, குளத்தில் குதித்துப் போராடிய வ.வே.சு.ஐயர் தன் மகளுடன் சேர்ந்து இறந்து போகிறார். வ.வே.சு.ஐயர் பிறந்து வளர்ந்த வீடு திருச்சி வரகனேரியில் உள்ளது. தற்போது அந்த இல்லம், கிளை நூலகமாக இயங்கி வருகிறது.









திருவெள்ளரை கோயிலின் பின்புறம் அமைந்துள்ளது, ஸ்வஸ்திக் குளம். 'ட'னா ஒன்றுக்குக் கை கால் முளைத்தது போல, ஸ்வஸ்திக் வடிவத்தில் அமையப் பெற்றுள்ளது. பல்லவ மன்னன் தந்திவர்மன் காலத்தில் (பதின்மூன்றாம் நூற்றாண்டு)

ஸ்வஸ்திக் குளம்!

கட்டப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. இதனை எடுப்பித்தவன் ஆலம்பாக்கிரான் விசையநல்லூரமான் தம்பி கம்பன் அரையன் என்றும், போசன வீரமநாதன் காலத்தில் திருத்தியமைக்கப்பட்டதாகவும் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கல்வெட்டு தகவல் தருகிறது. ஸ்வஸ்திக் கிணறு, தற்போது தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் வரும் பக்தர்கள் பொருட்களைப் (லக்கேஜ்) பாதுகாக்கும் அறை எனப்படும் கிளோக் ரூம், கோயிலின் உள்ளே, கருடாழ்வார் மண்டபத்தின் எதிரே தனியாக உள்ளது. இது வெளியூர் பக்தர்களுக்கு மிகவும் சிரமம். கோயிலின் வெளியே, ரெங்கா ரெங்கா கோபுரம் ஒட்டி புதிதாகப் பெரிதாக கிளோக் ரூம் கட்டி பக்தர்களுக்கு வசதி செய்து தராமே கோயில் நிர்வாகம்...!

ஸ்ரீரங்கம் ரெயில்வே மேம்பாலம் ரொம்ப உயரம். ரொம்ப நீளம். நடுத்தர வயதுக்கு மேற்பட்டவர்கள் சைக்கிள் ஓட்டிப் போக முடியவில்லை. மேம்பாலத்தின் கீழே ரெயில்வே கேட் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. நடைபாதைவாசிகள் நடந்து சென்றாலே, பல சமயங்களில் ரெயில்வே துறையினர் அபராதம் வசூலிக்கின்ற

ஸ்ரீரங்கத்தில் மாறுமா... இரண்டு?



னர். அந்த ரெயில்வே கேட் எப்போதும் போலத் திறந்து மூடப்பட வேண்டும். அதற்கு ஊழியர்களை நியமித்தாக வேண்டும். பல ஆயிரம் கோடி ரூபாய் லாபத்தில் இயங்கும் ரெயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை வைக்கிறார் ஸ்ரீரங்கம் நியூஸ் ஏஜெண்ட் ஆர்.ரெங்கநாதன்.

திருச்சியில் நடைபெறும் தொழிற் கண்காட்சி அரங்கினுள் நுழைந்தனர் மாணவர்கள் ராஜாவும், கிரியும்.

ராஜா: வணக்கம் சார்! என் பெயர் ராஜா. இவன் பெயர் கிரி. நாங்கள் இருவரும் எட்டாம் வகுப்பு படிக்கிறோம்.

ஆனந்தன்: வணக்கம் தம்பிகளா! என் பெயர் ஆனந்தன். திருச்சியின் பெருமைமிகு பாரதமிகுமின் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். பெல் தொழில் அரங்கத்துக்குள் உங்கள் வரவு நல்வரவாகுக.


கிரி: BHEL (பெல்) என்று சொல்லும் போதே உங்கள் குரலில் பெருமை ஒளிர் கிறதே சார்...

ஆனந்தன்: உண்மைதான்! நம் நாட்டின் மின் தேவை அதிவேகமாக வளர்ந்து வரு கிறது. நாடு இருளில் மூழ்கி விடாமல் இருக்க, அரசு மின் உற்பத்தி நிலையங்களை உரு வாக்கி வருகிறது. இந்நாட்டின் தவிப்பில், 'பெல்' தன்னை ஒரு அங்கமாக்கிக் கொண்டு, தானும் மிளிர்ந்து, நாடும் ஒளிரப் பாடுபட்டு வருகிறது. அந்தப் பெருமைதான் என் குரலில்!

ராஜா : நாட்டின் மொத்த மின் உற்பத் தித் திறனில் 'பெல்'லின் பங்கு என்ன சார்?

ஆனந்தன்: இதுவரை நாட்டில் நிறுவப்பட்டுள்ள மொத்த மின் உற்பத்தித் திறனான 1,38,175 மெகா வாட் அளவில், பெல்லின் பங்கு மட்டுமே 89,296 மெகாவாட். அதாவது கிட்டத்தட்ட 65 சதவிகிதம்! சென்ற ஆண்டில் மட்டுமே 5796 மெகா வாட் உற்பத்தி கூட்டல் செய்து சாதனை படைத்துள்ளது பெல். இது சென்ற ஆண்டின் மின்உற்பத்தித் திறனில் 70 சதவிகிதம்!

கிரி: அப்படியா னால் சென்ற ஆண் டில் மட்டும் 6290 மெகாவாட் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. சரியா?


● ஏ.வி.கிருஷ்ணன்

ஆனந்தன்: கணக் கில் புலிதான் நீ!

ராஜா: திருச்சி பெல் பிரிவு 1965ம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று தொடங்கப் பட்டது. இப்பிரிவின் கீழ் உயர் அழுத்தக் கொதிகலன் ஆலை, ஒட்டற்ற உருக்குக் குழாய் ஆலை, சென்னையில் குழாய்கள் மையம், மற்றும் பஞ்சாப் மாநில கோவிந்த்வாலில் உள்ள தொழிற்துறை வால்வு கள் உற்பத்திப் பணிமனை ஆகியவை அடங்கும். 60, 100 மற்றும் 120 மெகாவாட் திறனுடைய அனல் மின் உற்பத்திக் கொதி கலன்களில் தொடங்கி, 500 மெகாவாட் தொட்டு, 800 மெகாவாட், 1000 மெகாவாட் அளவிலான ஒரு வழி மற்றும், மிகை உயர் அழுத்தக் கொதி கலன்கள் உற்பத்தி வரை பெல்லின்





பிரம்மாண்ட பி.ஹெச்.ஈ.எல்.!

திறன்கூட்டல் அதிகரித்துள்ளது.

கிரி: என் அண்ணன் பொறியியல் படித்து வருகிறார். பெல்லில் வேலை வாய்ப்பு பற்றிச் சொல்ல முடியுமா?

ஆனந்தன்: கொதிகலன் உற்பத்திக்கு நவீன உற்பத்திக்கூடம் மட்டுமின்றி பொருத்துதல், பற்றவைப்பு, இயந்திரவியல், மற்றும் சேவைத் துறைகளில் சிறந்த பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இத்தேவையை எதிர்பார்த்து திருச்சி பெல் கடந்த மூன்று ஆண்டுகளாகவே புதுப் பணியாளர்கள் சேர்ப்பும், அவர்களுக்கான பயிற்சியும் வழங்கி வருகிறது. சென்ற ஆண்டில் மட்டும் 1000 தொழில்வினைஞர்களும், 91 பட்டயப் படிப்பு மேற்பார்வையாளர்களும், 119 அலுவலர்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆட்சேர்ப்பு இந்த ஆண்டிலும் தொடர்கிறது. வரும் ஆண்டுகளிலும் தொடரும்.

ராஜா: கடந்த ஆண்டு உற்பத்தியில் சாதனை படைத்துள்ளீர்களே சார்? தினசரிகளில் படித்தேன்!

ஆனந்தன்: உண்மைதான். திருச்சி பெல்லின் 44 ஆண்டு கால வரலாற்றில் புதிய சாதனையாய் ரூ. 7,413 கோடி விற்று சாதித்துள்ளது. வரிக்கு முந்தைய இலாபமும் முந்தைய ஆண்டை விட அதிகரித்து ரூ.1,603 கோடியைத் தொட்டது.

கிரி: அடேயப்பா! தற்போதைய இதன் தலைவர் யார் சார்?

ஆனந்தன்: செயலாண்மை இயக்குனராக தற்போது திரு ஏ.வீ. கிருஷ்ணன் பொறுப்பேற்று, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். தரத்துறையில் அவர் கொண்டுள்ள ஈடுபாடு மற்றும் சேவைகளுக்காக அமெரிக்க தரக் கழகத்தின் முதுநிலை உறுப்பினர் அந்தஸ்தும், இந்தியப் பொறியாளர் கழகத்தின் '2008-க்கான தரவிருதையும்' அவர் வென்றுள்ளார்.

ராஜா: அருஞ்சாதனை புரிந்து வரும் பெல்லின் தாரகமந்திரம் என்ன சார்?

ஆனந்தன்: உற்பத்திப் பொருட்கள் வடிவமைப்பில் சீரமைப்பு, உற்பத்தித் திறன் உயர்வு மற்றும் செலவினக் குறைப்பு இவற்றையே முன்னணிக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவதே!

ராஜா: அனல், புனல் மற்றும் அணுமின் நிலையங்களுக்கான மின் உற்பத்தி உபகரணங்களைத் தயாரித்து வழங்கி, நிர்மாணித்து இயக்கி வைத்து, தேவையான பராமரிப்புச் சேவைகளையும் அளித்து வரும் இந்த நவரத்ன நிறுவனத்தில், நன்கு படித்து முடித்து, பணியில் சேர இப்போதே மனம் ஆசைப்படுகிறது, சார்.

கிரி: ஆமாம் சார்! எங்களுடைய கனவே அதுதான் சார்.

ஆனந்தன்: கனவு காணுங்கள்! முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் உங்களுக்காகத் தானே இதைச் சொல்லியிருக்கிறார். உங்கள் கனவு நனவாக வாழ்த்துக்கள்.

ராஜா, கிரி: உங்களின் தகவல்களுக்கும், வாழ்த்துக்கும் நன்றி சார்!

- கிருஷ்ணா



நன்றி நன்றி நன்றி

திருச்சி மாவட்டச் சிறப்பிதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க ஆலோசனை வழங்கி மலை போல் கடிதங்கள் குவிந்தன. அதில் தேர்ச்சியான தகவல்கள், நம்பகத் தன்மையான விவரணங்கள், படங்கள்.... என அசத்திய வாசகர்களின் பட்டியல்தான் இது. இவர்களின் உதவியால்தான் இந்த இதழைச் சிறப்பாகத் தயாரிக்க முடிந்தது. அவர்களுக்கு சபாஷ் சல்யூட்!

(ஆர்)

• புனிதவதி, திருச்சி • யாழினி பர்வதம், சென்னை, • இரா.கணேசன், சேலம் • தையூ ராமமூர்த்தி, சென்னை, • பாரதிமகள், கருமண்டபம், • மாணிக்கவாசகம் திருச்சி, • ஜம்பகலட்சுமி, தாம்பரம், • பார்வதி, திருவானைக்காவல், • சுப்ரமணியம், சென்னை, • கலாராணி சரவணன், திருச்சி, • மதுரம் ராம்குமார், ஸ்ரீரங்கம், • எஸ்.முரளி, திருச்சி, • கோபாலகிருஷ்ணன், திருச்சி, • பரிமளா ரங்கன், திருச்சி, • கோபாலன், மே.மாம்பலம், • மீனாட்சி குருராஜ், கருமண்டபம், • பி.சம்பத்குமார், திருச்சி, • முகமது அலி, துவரங்குறிச்சி, • சரஸ்வதி பஞ்சு, திருச்சி, • ஹரிஹரன், திருச்சி, • அனுராதா ரவீந்திரன், திருச்சி, • லக்ஷ்மி ஐயர், திருச்சி, • எம்.எஸ்.மணி, பெங்களூரு, • பழனிச்சாமி, திருச்சி, • ஈ.பத்மா, துறையூர், • நெல்சன், லால்குடி, • எல்.மாறன், மேல்பட்டி, • எஸ்.மீனா, ஸ்ரீரங்கம், • ஆர்.பிரகாஷ், பொன்மலை, • அம்பை சுதர்சனன், திருச்சி, • ரத்திகா, திருச்சி, • பா.சேதுமாதவன், திருவானைக்காவல், • அன்பு பாலாஜி, திருச்சி, • வேதவல்லி, மே.மாம்பலம், • முத்துநாதர் கைலாஷ், திருச்சி, • ரெங்கரத்னம், காவல்காரன்பாளையம், • கௌரிலக்ஷ்மி, ஸ்ரீரங்கம், • பி.சரஸ்வதி, திருச்சி, • தீபம் எஸ்.திருமலை, சென்னை, • சு தினகரன், திருச்சி

திருச்சி மாவட்டச் செய்திகள்: கதிர்பாரதி, திருநாவுக்கரசு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.